கலைக்கதிர்

விக்ருதி மாத வெளியீடு கார்த்திகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 NOV 1950
MADRAS



நல்ல விதைப் பருத்தி விதையும், மாட்டுத் தீவனத்துக்குப் பருத்தி விதையும், குடியானவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் நியாயமான விலைகளில் சப்ளை செய்கிறோம்.

உரத்திற்கும், மாட்டு உணவிற்கும் ஏற்ற எக்ஸ்பெல்லர் கடலைப் புண்ணுக்கு சர்க்காரின் நிர்ணய விலைக்கு விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் தாராளமாகக் கொடுக்கிறோம்.

நவீன முறையில் தயார் செய்து சுத்தம் செய்யப்பட்ட திடமான கடலெண்ணெய் நம் தேசம் பூராவிற்கும் சப்ளை செய்வதுமல்லாமல், அயல் நாடுகளின் தேவைக்கும் கணிசமான முறையில் குறித்த காலத்தில் ஏற்றுமதி செய்கிறோம். இதர விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.



ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங் & ஆயில் மில்ஸ்

பாப்பநாய்க்கன்பாளையம்

போன் நெ. 51 தந்தி "ஆயில்மில்ஸ்"

தபால் பெட்டி நெ. 151 கோயமுத்தூர்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

கலைக்கதிர் பொங்கல் மலர்

●

அறிவு ஆக்கம் பெறத் தக்க கலைப்பொங்கலாகச்
சிந்தனைச் செல்வர்கள் சமைப்பது
நம் பொங்கல் மலர்

○

கலைக்கதிர் பொருள் லாபம் கருதாமல்
தமிழ் இனத்தின்
அறிவு வளர்ச்சியையே நோக்குவது

○

ஒப்பற்ற கலைக்களஞ்சியம்
ஓவியக் கொலு

●

பிரதி வேண்டுவோர்
இப்போதே முன்பணம் செலுத்திப்
பதிவு செய்துகொள்ளவும்

★

கலைக்குச் சிறப்பு
விலையில் மலிவு

★

ஆர்ட் காகிதம்—150 பக்கம்

விலை 2½ ரூபாய்

★

இப்போதுள்ள சந்தாதாரருக்கும்
டிசம்பர் முதல் வாரத்துக்குள்
ஆண்டுச் சந்தா செலுத்துவோருக்கும்

விலை 2 ரூபாய்

★

கலைக்கதிர்

பீளமேடு : : கோவை.

641
1.50.

Estd. 1933. Telegram: { VENKATESA, Udamalpet.

ஸ்ரீ

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்,

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்,
உடுமலைப்பேட்டை.

○ ● ○

100நெ. வரை மெல்லிய ரக பருத்தி நூல்கள் நூற்பதில் பிரசித்தி பெற்றது.

○ ● ○

எங்கள் புதிய தறிகளிலிருந்து வெளிவந்த தரத்தில் சிறந்த துணி ரகங்கள் புகழ்பெற்று விளங்குகின்றன.

○ ● ○

சலவை மில்லும் தயாராகிறது.

1951-ம் ஆண்டில் உயர்ந்த சலவைத்துணிகளும் வெளிவரும்.

○ ● ○

மானேஜிங் ஏஜண்டுகள்:

ஜி. வி. கோவிந்தசாமி நாயுடு அண்டு கம்பெனி.

— தயார் செய்பவை —

PSG

① மெஷின் டூல்ஸ்
② எலக்டிரிக் மோட்டார்கள்
③ சென்டிரிபியூகல் பம்புகள்
④ டெக்ஸ்டைல் மெஷினரி
⑤ ஆயில் மில்லிங் மெஷினரி
⑥ விவசாயக் கருவிகள்

①

லேத்து — ரேடியல் டிரில்லிங்மெஷின் — மெகானிக்ஸ் வைஸ்

②

ஏ.சி. மோட்டார் — எலக்டிரிக்சைரன் — எக்ஜாஸ்ட் பேன்

③



பி.எஸ்.டைப் பம்பு — எஸ்.டைப் பம்பு — எச்.டைப் பெல்ட் பம்பு

④

காட்டன் ஜின் — பண்லிங் பிரஸ் — ரீலிங் மெஷின் — பேலிங் பிரஸ்

⑤



ஆயில் எக்ஸ்பெல்லர் — பில்டர் பிரஸ் — டிசீன்டி கிரேடர்

⑥

கவலைஉருளை — கலப்பை — கரும்பு ஆலை — தூற்றும் இயந்திரம்

பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட்

பூளைமேடு — கோயமுத்தூர் — (தென் இந்தியா)

கலைக்கதிர்

மலர் – உ   விக்ருதி : கார்த்திகை   இதழ் – கஉ

1602

ஆசிரியர் :

திரு. ஜி. ஆர். தாமோதரன்,

B. Sc Elec., B. Sc. Mech. (Durham), A. M. I. E. E. (London)

★

இந்த இதழில்

நையகாராப் பேரருவி

காதல் – கலை

இன்னொரு சங்கடம் ?

ஒற்றர்

சிறு கதை

நூல் அரங்கு

பயன்படும் காலம் ?

இரண்டு ஆண்டுகள்

கனவு

அறிந்த சிரிப்பே அறியாமைச் சிரிப்பு !

சுழற்காற்று

உள்ளத்தின் உண்மை

லட்சுமணபுரி மாநாடு

கடலில் உணவு

சிந்தனைக்கு ஓர் இமயம்

★

'கலைக்கதிர்' இதழில் வெளியிடும் கட்டுரை கதை முதலியவற்றின் கருத்துக்கள் அவற்றை எழுதிய நேயர்களுக்கே உரியன.

விலை அணா 8

நையகாராப் பேரருவி

ஜி. ஆர். தாமோதரன்

'யுனைடெட் ஸ்டேட்ஸ்' தொழில் துறையில் சிறந்து விளங்குவதுமன்றி, இயற்கை வனப்புக்களிலும் புகழ்பெற்றிருக்கிறது. அங்கு நான் காட்சிகள் பலவற்றைக் கண்டு மகிழ்ந்தேன். அவைகளுள் என் மனத்திற்கு இன்பத்தையும், அமைதியையும் தந்தவைகளுள் நையகாராப் பேரருவி ஒன்றாகும்.

இவ்வருவியைக் குறித்துப் பள்ளியில் படித்தவர் யாவரும் அறிவார். பூகோள வகுப்பில் நையகாரா அருவியின் எழிலைப்பற்றிப் படித்திருக்கிறோம். படித்த அக்காலத்தில், அது ஒரு பாடமாக அமைந்து அறிவுப் பெருக்கத்திற்குத் துணை புரிந்ததேயொழிய, நேரில் சென்று கண்களால் கண்ட போதுதான், அதன் அமைப்பையும் வசிகரத் தோற்றத்தையும் உணர்ந்தேன். அமெரிக்காவிற்குச் செல்பவர்கள் இதைப் பார்க்காமல் வர முடியாது.

நையகாரா அருவி நியூயார்க் நகரத்திற்கு மேற்கே சுமார் 300 மைல்களுக்கு அப்பால் உள்ளது. இதனைப் பார்க்க நியூயார்க்கிலிருந்து காரில் சென்றேன். பப்பலோ (Buffalo) எனப்படும் நகரை அடைந்தேன். இந்நகரம் நையகாரா ஆற்றின் முகத்துவாரத்தில் உள்ளது. நையகாரா ஆறு வடக்கிலிருந்து தெற்கே பாய்கிறது. இது நீண்ட ஆறு அன்று. 35 மைல்தானிருக்கிறது. இவ்வளவு குறுகிய ஆற்றில் யாராலும் புகழப்படும் அருவி எங்ஙனம் அமைந்ததென்பது வியப்பைத் தரும். நீர்ப் பெருக்கம் எவ்வாறு தோன்றுகிறது? இந்த ஆற்றின் விந்தையான அமைப்புத்தான் இதற்குக் காரணம். நையகாரா ஆறு இரண்டு பெரிய ஏரிகளை இணைக்கிறது. இவை நம் நாட்டில் காணப்படும் ஏரிகள் போன்றவை அல்ல. இவைகளை உள்நாட்டுக் கடல்களென்றே அழைக்கலாம். ஈரி ஏரியிலிருந்து (Lake Erie) வடக்கே ஒன்டேரியோ ஏரிக்கு (Lake Ontario) நையகாரா பாய்கிறது. ஈரி ஏரியின் பரப்பு சுமார் 10000 சதுர மைலும், ஒண்டேரியோவின் பரப்பு சுமார் 7500 சதுர மைலும் ஆகும். இவ்வளவு நீர்ப்பரப்பு உடையவைகளை ஏரிகள் என்று அழைப்பது பரிகாசமாகக் காணப்படுகிறது.

நையகாரா ஆறு யுனைடெட் ஸ்டேட்ஸ் கனடா ஆகிய நாடுகளின் ஒரு பகுதிக்கு எல்லையாக அமைகிறது. ஆற்றின் வலப் புறம் நியூயார்க் மாகாணமும், இடப் புறம் கனடாவைச் சேர்ந்த ஒண்டேரியோ மாகாணமும் இருக்கின்றன. இவ்விரு மாகாணங்களுக்கும் ஆற்றில் உரிமை உண்டு. ஈரி ஏரியில் தோன்றி, கொஞ்ச தூரத்திற்குப் பிறகு இரு பிரிவுகளாகப் பிரிந்து நடுவில் உள்ள ஒரு தீவை (grand island) வலம்வந்து, மீண்டும் ஒன்றாகச் சேர்ந்து ஓடுகிறது. 37 மைல் நீளத்தில், எறக்குறைய நடுமையத்தில் நையகாரா, சுமார் 160 அடி உயரத்திலிருந்து கீழே செங்குத்தாகக் குதிக்கிறது. இதுதான் நையகாரா அருவி.

பப்பலோ நகரத்திலிருந்து காரில், தீவின் வழியாகச் சென்று, நீர்வீழ்ச்சியை அணுகினேன். அருவிக்கு அருகில் செல்லச் செல்ல அதனுடைய பேரொலி என் காதுகளில் வீழ்ந்து என்னை வரவேற்றதுபோல் ஒலித்தது. சாலையை விட்டு ஒரு கிளைப் பாதையில் சென்று, அதன் நுனியில்

உள்ள முனையை அடைந்தேன். அதற்குப் 'பிராஸ்பக்ட் பாயிண்ட்' என்று பெயர். இம்முனையிலிருந்து அருவியின் தோற்றம் நன்கு புலப்படுமாகையால் அதற்கு அப்பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. இம்முனையில் நின்று பார்த்தேன். எதிரில் கம்பீரமான தோற்றம்! இரண்டு பேரருவிகள்! இரண்டிலும் ஏராளமான தண்ணீர் விழுகிறது. என் அருகில் நான் கண்ட முதல் நீர்வீழ்ச்சி ஆற்றின் வலப்பக்கம் இருப்பதால் அது அமெரிக்க நாட்டைச் சேர்ந்த அருவியாகும். இதற்கப்பால் குதிரை லாடம் போன்ற வளைவான தோற்றத்தைக் கொண்ட நீர் வீழ்ச்சியைப் பார்த்தேன். இது ஆற்றின் இடப் பக்கம் அமைந்திருப்பதால் இது கனடா நாட்டைச் சேர்ந்தது. இவ் வருவிக்குக் குதிரை லாட நீர்வீழ்ச்சி என்றே பெயர் (Horse shoe falls). இவ்விரண்டு அருவிகளுக்கும் இடையில் ஒரு சிறிய தீவு இருக்கிறது. இந்தத்தீவு காரணமாகத் தான் நையகாரா இரண்டாகப் பிரிந்துள்ளது. அமெரிக்க நீர்வீழ்ச்சி 162 அடி உயரமும் 1400 அடி அகலமும் இருக்கிறது. குதிரை லாட அருவி 155 அடி உயரம்; இவ்வருவி குதிரை லாடம் போன்று வளைந்திருப்பதால் இவ்வளைவின் நீளம் 2600 அடி இருக்கிறது. இதைவிட அதிக உயரமான நீர் வீழ்ச்சிகள் நம் நாட்டிலும் உலகத்திலும் இருக்கின்றன. கெர்சப்பா நீர்வீச்சிழ் 880 அடி; அதிக உயரமானது வெனிஸுலாவிலுள்ள நீர் வீழ்ச்சி; 2240 அடி உயரம். உயரத்திற்காக நையகாரா அருவியை நாம் பாராட்டுவதில்லை. ஆனால், அதனுடைய அமைப்பின் எழிலைக் கண்டு மகிழ்கின்றோம். இராக் காலங்களில், இவ் வருவிகளின் மீது 24 பெரிய மின் விளக்குகள் ஒளி வீசுகின்றன. இந்த ஒளிக்கு 100 கோடி 'காண்டி'ல் சக்தி இருக்கிறது. ஒளியில் வான வில்லைப் போன்று ஏழு நிறங்கள் இருக்கின்றன. பல நிறங்களைக் கொண்ட ஒளி வீசப்பட்டு அருவிகள் இனிமையான காட்சியளித்தன. இதனைக் கண்ணுற்றதும் என் மனம் இறைவனையும் இயற்கையையும் நாடிற்று. என்னே இயற்கையின் எழில்! பல லட்சக் கணக்கான மக்கள் நாள்தோறும் இங்கு வந்து இக்காட்சியைக் கண்டு இன்புறுகின்றனர். உயர்ந்தோர் தாழ்ந்தோர், வறியவர் செல்வர்— இவர்கள் பால் எவ்வித வேற்றுமையின்றி இயற்கை இங்குக் காட்சியளிக்கிறது. இக்காட்சிக்கு அந்தமில்லை, காலவரையறை இல்லை. நீர்வீழ்ச்சிகள் விழும் இடத்திலிருந்து புகை கிளம்பும் காட்சி பயத்தை உண்டுபண்ணுகிறது. கீழே கிடக்கும் பாறைகளின்மீதும், கற்களின்மீதும் அருவிகள் உயரத்திலிருந்து விழுங்கால் சிதறும்படியான நீர்த்துகள்கள் புகையைப்போல் காட்சி அளிக்கின்றன.

காற்று நான் நின்று கொண்டிருந்த பக்கம் வீசியதால் அந்நீர்த் துகள்கள் என்மேலும் வீசி என்னை நனைத்து விட்டன. பயந்து ஓடிவிடாமல், காட்சியின் இன்பத்தை நன்கு சுவைக்க அவாக் கொண்டு, மழைக்கோட்டைப் போட்டுக்கொண்டு நின்றேன். இவ் வருவிகளின் காட்சியைக் கண்டும் முழங்குகின்ற இடி ஒலியைக் கேட்டும் அச்சமுற்று மயக்கமடைந்தவர் பலர் எனக் கேள்விப்பட்டேன். இதனைக் கண்டு பரவசப்பட்டு மெய்ம்மறந்து நின்றனர் பலர். 1678ம் ஆண்டில் முதல் முதலாக இங்கு வந்த வெள்ளையர், பாதிரி ஹென்னிபின் என்பவராவர். இதனைக் கண்டதும் அவர் தம் சிலுவையைக் கையில் ஏந்திக் கொண்டு இறைவனைத் தொழுதாராம். பாதிரி ஹென்னிபின் இங்கு வந்து நின்று பார்த்த இடம் பிராஸ்பக்ட் முனைக்குக் கீழ் இருக்கிறது. இதற்கு ஹென்னிபின் முனை என்று பெயர் வழங்கப்படுகிறது.

பிராஸ்பக்ட் முனைக்குக் கீழ் ஓர் இடத்தைக் காண்பித்து "அதோ அந்த இடத்தில்தான் முன்னொரு காலத்தில் 'நையகாராத் துறவி' ஒரு

குடிசையில் வாழ்ந்தார்'' என்றும் அமெரிக்கா நீர்வீழ்ச்சிக்குக் கீழ், பிராஸ்பக்ட் முனைக்கு நேராக ஒரு இடத்தைக் காண்பித்து 'அதோ அங்குத்தான் அத்துறவி உயிர் நீத்தார்' என்றும் ஒரு வழிகாட்டி கூறினார். பின்னர் நையகாராத் துறவியின் வரலாற்றினை வினவி அறிந்தேன். இத்துறவி ஒரு பெரிய செல்வருடைய புதல்வர். இருபது வயதிற்குள்ளாக இருக்கும்; சிறந்த பண்பாடுடையவர்; அறிவாளி. உலகத்தில் மிகச் சிறந்த அழகான இயற்கைக் காட்சியைக் காணவேண்டுமென்ற அவா, அவருக்கு இருந்தது. ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் பல இடங்களில் அலைந்து திரிந்தார். தம் மனத்திற்கு விருப்பமான காட்சி ஒன்றும் தென்படவில்லை. கடைசியாக அமெரிக்காவிற்கு வந்து நையகாராப் பேரருவியைக் கண்டதும், தம் காதலி கிடைத்துவிட்டதாக மகிழ்ந்து இங்கு ஒரு குடிசை கட்டிக்கொண்டு சில நாள் வாழ்ந்தார். அவருக்கு இசையில் விருப்ப மிருந்தது. இரண்டு வகையான இசைக்கருவிகள் அவரிடம் இருந்தன. நிறப் படங்களை வரைதலிலும், கவி எழுதுவதிலும் தம் காலத்தைக் கழித்தார். நீர்வீழ்ச்சியைப் பார்க்க வரும் மக்களுடன் மகிழ்ச்சியுடன் பேசி அவர்கள் இன்புறும்படியான பல கதைகளைக் கூறுவார். ஆனால், சில வேளைகளில் பல நாட்கள், பல வாரங்கள் அவரை எங்கும் காண முடியாது. தனிமையான வாழ்க்கையை விரும்பி, ஏகாந்தமான இடங்களை நாடி வாழ்வார். யாரிடமும் பேச விரும்பார். தாடியை வளர்த்துக் கொண்டு, நிலாவில் ஓடித் திரிவார். அருவிக்குமேல் வேகமான நீரோட்டத்தில் சிறிதும் பயமின்றி விளையாடுவாராம். அருவியின் ஓரத்தி லுள்ள மாக்கிளைகளி லிருந்து தொங்கிக் கொண்டு அருவியின் நீரைத் தொடுவாராம். சாவதை விரும்பித்தான் அவர் நையகாராவில் நீரோட்டம் அதிகமாயுள்ள இடங்களில் அருவிக்கு மேலும் கீழும் பல இடங்களில் குளிப்பாராம். ஒரு நாள் இவர் அமெரிக்க அருவியின்கீழ்க் குளித்துக் கொண்டிருந்ததைப் படகோட்டி பார்த்தான். சில நாள் கழித்து இவருடைய உடல் சிதறுண்டு ஆற்றின் கீழ்ப் பல மைல்களுக்கப்பால் காணப்பட்டது. உடனே இவர் வசித்த குடிசைக்கு நண்பர்கள் சென்று பார்த்ததில், அவர் எழுதிய கவிதையோ, அல்லது படமோ ஒன்றும் அங்கு இல்லை. துறவி தம்முடைய உயிரைத் துறக்குமுன் இவைகள் யாவற்றையும் நாசம் செய்துவிட்டுப் போயிருக்கவேண்டுமென ஊகித்தனர். காதலில் மோகம் கொண்டவராய் இவர், தம் காதலியைக் கட்டி அணைத்து இயற்கையில் கலந்துவிட்டார். இத் துறவி தம்மை இன்னாரென்று சாகும் வரையில் யாரிடமும் கூறவில்லை. இவருடைய வரலாறு இவர் இறந்த பின்னர்த்தான் தெரியவந்தது. 'யாவும் மாறுகின்றது; என்றும் முன்னேற்றம்; சாதல் கிடையாது' ("All is chauge, eternal Progress, no death") என்ற தத்துவ உண்மைக்கு இத் துறவி இலக்கியமாகின்றார். இத் துறவியின் வாழ்க்கை, இப் பேரருவியின் எழிலின் பெருமையையும் தகர்க்க முடியாத கவர்ச்சியையும் விளக்குகிறது.

ஜனவரி, பிப்பரவரி மாதங்களில் பெரிய பெரிய பனிக் கட்டிகளை லட்சக் கணக்கில், நையகாரா ஆறு ஈரி ஏரியிலிருந்து அடித்துக்கொண்டு வரும். அருவியிலும் பனிக் கட்டிகளாக விழுந்து, அடித் தளத்தில் குவிந்துவிடும். சில காலங்களில் இக் குவியல்கள் நூறு அடி உயரம் வளர்ந்துவிடும். இப் பனிக்கட்டிகளைப் பாலமாகப் பயன்படுத்திக் கொண்டு, மக்கள் அருவியைக் கடப்பார்கள். கடக்கும் காலங்களில், பனிக் கட்டிகள் உடைந்து உருகுவதினால் பல உயிர்

கள் சேதமாயிருக்கின்றன என்று கதைகள் வழங்குகின்றன.

திருமணம் செய்துகொண்டவர்களும், காதலர்களும் இன்பமாகக் காலம் கழிக்க இங்குச் சில நாட்கள் அல்லது மாதங்கள் தங்குவது வழக்கம். சமீபத்தில் திருமணம் செய்துகொண்ட இருவர் ஒரு நாள் பனிக்கட்டிகளாலான பாலத்தின் மீது நடந்துகொண்டிருக்கும்போது திடீரெனப் பனிக் கட்டிகள் சப்தத்துடன் உடைந்து உருகலாயின. இவ் விருவருடன் வந்த சிலர் இக் கரைக்கும் அக் கரைக்கும் ஓடி உயிர் தப்பிக்கொண்டனர். தம்பதிகளும் மற்ற இருவரும் தப்ப முடியாமல் தவித்தனர். இவர்களுள் ஒருவர் ஐந்தடிப் பிளவைத் தாண்ட முடியாமல் திகைத்தார். இவர் கயிற்றால் இழுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டார். மூவர் ஒரு தனிப் பனிக்கட்டியின்மீது நின்றனர். எப் பக்கமும் நகர முடியவில்லை. ஆற்றின் வெள்ளம் சூழ்ந்துகொண்டது. அப் பனிக்கட்டி சிறு சிறு துண்டுகளாக உடைந்து, நீரோட்டத்தில் அடித்துக் கொண்டு செல்லப்பட்டன. பனிக் கட்டியின்மீது நின்ற மூவரும் இழுத்துச் செல்லப்பட்டனர். இச் செய்தி ஆற்றின் இரு புறங்களி லுள்ள நகரங்களுக்குப் பரவியது. இதனைப் பார்க்க மக்கள் திரள் திரளாகக் கூடினர். இம் மூவரையும் பாதுகாக்கப் பல முயற்சிகள் செய்யப்பட்டன; பயனில்லை. கடைசியாக ஆற்றின் வெள்ளத்திற்கு இரையாகினார்கள். தம்பதிகள் ஆலிங்கனம் செய்துகொண்டும், மற்றொருவர் மண்டிபோட்டு இறைவனை வணங்கிய வண்ணமும் மறைந்தனர். இக் காட்சி மிகவும் பரிதாபகரமாயிருந்ததென்று வழிகாட்டி விவரித்தார்.

பிராஸ்பக்ட் முனையில் நின்றுகொண்டு அருவியின் தண்ணீர் சரிந்து கீழே குதிக்கும் தறுவாயில் அத் தண்ணீரை என் கட்டை விரலால் தொட்டேன். என் மயிர் சிலிர்த்தது. விரைவில் மனம் பூரிப்படைந்தது. அருவியின் தோற்றத்தைக் கண்டும், பெருமைகளைக் கேட்டும், அதனுடன் தொடர்பைப் பெற்றும் ஆனந்த சாகரத்தில் மூழ்கினேன்.

அருவிகளின் அடித் தளத்திற்கு (bottom) தூக்கிகள் (elevators) வழியாகச் செல்லலாம். பிராஸ்பக்ட் முனைக்கு அருகில் ஒரு தூக்கி இருக்கிறது. அது என்னை 160 அடிக்குக் கீழுள்ள அமெரிக்க அருவியின் அடித் தளத்திற்குக் கொண்டுபோய் நலமாகச் சேர்த்தது. தூக்கியிலிருந்து குகை வழியாக வெளியே வந்தேன். இங்கு இரு படகுகள் பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றன. அருவிகள் விழும் காட்சியைப் படகிலிருந்து நேர் எதிராகப் பார்க்கலாம். படகில் ஏறிச் செல்வதற்குத் தயங்கினேன். அருவி பாயுமிடத்திற் கருகில் தப்பித் தவறிப் போய்விட்டால் உயிருக்கு ஆபத்தாயிற்றே என்று பயந்தேன். ஆனால், நெடுங்காலமாக இப் படகில் பலர் சென்று ஒருவித ஆபத்தும் இல்லாமல் திரும்பியிருக்கிறார்களென்ற செய்தி தைரியத்தை ஊட்டிற்று. ¾ டாலர் (ரூ. 3—6—0) வாடகை வசூலிக்கப்பட்டது. நீர்த் துளிகளினால் நனையாமலிருப்பதற்கு நீர் ஊறாத ஆடைகளைப் படகோட்டி ஒவ்வொருவருக்கும் கொடுத்தான். நானும் அணிந்து கொண்டேன். படகு என்னை ஏற்றிக் கொண்டு சென்றது. இரு அருவிகளின் கம்பீரமான தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்தேன். இப் படகு 'மூடுபனியின் நங்கை' (Maid of the Mist) என்று அழைக்கப்படுகிறது. அப் படகு ஆற்றில் செல்லும்போது நீர்த் துகளினால் மூடப்பட்டுக் கரையி லிருந்து பார்ப்பவர்களுக்குத் தெரியாமல் மறைந்துவிடுகிறது.

பிராஸ்பக்ட் முனைக்கு விரைவில் திரும்பி, பாலத்தின் வழியாக ஆற்றைக் கடந்து இரு அருவிகளுக்கும் இடையே உள்ள தீவிற்குச் சென்றேன். இங்கிருந்து மற்றொரு சிறிய தீவிற்குப்

பாலத்தைக் கடந்து சென்றேன். இத் தீவு லூனு தீவு (Luna island) எனப் படும். இங்கு மற்றொரு சிறிய அருவி காணப்படுகிறது. அகலம் குறைவு. ஆனால், அதிகமான நீர்ப்பெருக்கத்தை உடையது. லூனு அருவி என அழைக்கப்படுகின்றது.

பல நூற்றாண்டுகளாக இந் நீர் வீழ்ச்சிகள் வீழ்ந்துகொண் டிருப்பதால், நீரோட்டத்தின் சக்தியால் கடினமான பாறைகளும் மெதுவான பாறைகளும் அரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இதன் விளைவாக ஆண்டுதோறும் அமெரிக்கா அருவியும், கனடா அருவியும் முன் வீழ்ந்த இடத்திலிருந்து பின்னே சென்றுகொண் டிருக்கின்றன. இதனை நிலநூல் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்துகொண்டுவருகிறார்கள். நீர் வீழ்ச்சியின் மேல்பாகம் கடினமான சுண்ணாம்புக்கல்; கீழ்ப்பாகம் களிமண் பாறை. களிமண் பாறை அரிக்கப்பட்டு வருகின்றது. லூனு அருவியின் கீழ்ப் பாகத்திலுள்ள களிமண் பாறை அரிக்கப்பட்டு அங்கு ஒரு குகை உண்டாகி விட்டது. இதற்குக் 'காற்றுக் குகை' (Cave of the winds) என்று பெயர். இக் குகையின் தளம் கடினமான கல்லாயிருக்கின்றது. இக் குகைக்குப் பிரயாணிகள் செல்ல லூனு தீவில் ஒரு தூக்கி அமைக்கப் பட்டிருக்கிறது. ரப்பர் உடையைப் போட்டுக்கொண்டு கீழே இறங்கினேன். இங்கு நீர்த் துளிகளினால் ஏற்படும் புகைப்பனி அதிகம். ஒரு வித அச்சமுமின்றி இங்கும் அங்கும் சிறிது தூரம் கம்பிகளின் துணையைக் கொண்டு நடக்கலாம். லூனு அருவியின் அடிப்பாக மாகையால் இந்த அருவியின் தோற்றம் இங்கு நன்கு தெரிகின்றது.

பெரிய தீவின் இடக் கோடிக்குச் சென்றேன். இதற்கு டெர்ராபின் பாறை (Terrapin Rock) என்று பெயர். இம்முனையி லிருந்து பார்த்தால் குதிரை லாட நீர்வீழ்ச்சியின் காட்சி அழகாக இருக்கிறது. வளைந்து வளைந்து செல்லும் பாதையில் இறங்கி, குதிரை லாட நீர் வீழ்ச்சியின் விளிம்பை அணுகினேன். இந்த அருவி இப்பொழுது 12 அடி கனத்தில் தான் பாய்கிறது. இந்தத் தண்ணீரை மின்சார உற்பத்திக்காகப் பயன் படுத்துவதற்கு முன் 20 அடி கன மிருந்ததாம். அப்பொழுது இம் முனை தண்ணீரில் மூழ்கி இருந்ததாம். அமெரிக்க அருவியைவிடக் குதிரை லாட அருவியில்தான் பன் மடங்கு அதிகமான தண்ணீர் பாய்கிறது.

நீர் வீழ்ச்சிக்குக் கீழ் ஓடும் ஆறு கீழ் நையகாரா ஆறு எனப்படும். இதனைக் கடக்க "பிராஸ்பக்ட்" முனைக்கு அருகில் ஒரு பாலம் புதிதாகக் கட்டப் பட்டிருக்கிறது. வானவில்லைப் போன்று பல நிறங்களுடன் தோற்றத்தைக் கொடுக்கும் நீர்வீழ்ச்சிக்குக் கீழ் அமைந்திருப்பதால் இதற்கு வானவில் பாலம் எனப் பெயரிடப்பட் டிருக்கிறது (Rainbow Bridge). இதற்கு முன்னால் இருந்த உருக்குப் பாலம் 100-அடி கனமுள்ள பனிக்கட்டியால் நொறுங்கிவிட்டது. இப்பொழுதுள்ள வானவில் பாலம், உருக்கு வில் வளைவைக் (Steel arch) கொண்டது. இந்த வளைவு 900 அடி இருக்கிறது. இது உலகத்திலேயே மிக அற்புதமான வேலைப்பாடுடைய தெனக் கூறப்படுகிறது. இப் பாலத்தின் வழியாகக் கனடாவில் உள்ள நையகாராவின் இடப் பக்கத்திற்குச் சென்றேன். அங்கு அழகான சோலைகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. குதிரை லாட அருவியை அணுகியதும் அங்கு மேஜைப் பாறை இல்லம் (Table Rock House) எனப்படும் இடத்திலிருந்து அருவியின் அழகான காட்சியைக் கண்டேன். மேஜைப் பாறை இல்லத்தில் தூக்கிகள் இருக்கின்றன. குதிரை லாட அருவியின் அடித்தளத்திற்குத் தூக்கியின் வழியாக இறங்கினேன். கொப்பரையில் எண்ணெய் கொதிப்பதுபோன்ற காட்சியைக் கண்டேன்.

நீர்த் துகள்கள் அலை அலைகளாக மேலே எழுந்த காட்சி இங்ஙனமாக இருந்தது.

நீர்வீழ்ச்சி விழும் காட்சியைப் பின்னுலிருந்து பார்க்கவும் வசதியிருக்கிறது. தூக்கியில் இறங்கி, கல்லில் குடைந்த வழியில் செல்லவேண்டும். இது எஞ்சினீயர்களின் அருமையான வேலைப்பாடு. இக்குடைவின் வாயிலில் நின்றுகொண்டு பார்த்தபோது பயங்கரமாக இருந்தது. அருவியின் இடிமுழக்கம் காதுகளைத் துளைத்தது. கண்களுக்கு எதிரில் வெண்ணிறமான தண்ணீர் வீழ்வதைப் பார்த்தேன். அக் காட்சி என்னை மருட்டியது.

கீழ் நையகாரா, நீர்வீழ்ச்சியிலிருந்து 7 மைல் தூரம் ஒரு இடுக்கில் ஓடுகிறது. பின்னர்த் தாழ்ந்த வெளியில் ஆழமாக ஓடி ஒன்டேரியோ ஏரியில் சங்கமமாகிறது. இடுக்கின் வழியே பலவிதமான இயற்கைக் காட்சிகளைக் காணலாம். ஆற்றின் இரு பக்கங்களிலும் அழகான சோலைகளின் வழியாகச் சாலைகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. கனடாச் சாலையில் காரில் சென்றேன். நீர்வீழ்ச்சியி லிருந்து சுமார் 2 மைல் தூரத்தில் ஒரு பெரிய நீர்ச்சுழி இருக்கிறது. இந்த இரண்டு மைல் தூரமும் ஆற்றின் வேகமான நீரோட்டமும் மூர்க்கமான பாய்ச்சலும் நம்மைப் பயமுறுத்துவது போல் காட்சியளிக்கின்றன. இதனை அருகில் சென்று பார்க்க வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்காக, கீழே இறங்குவதற்குத் தூக்கியும், ஆற்றின் நீரோட்டத்தின் வழியே நடை பாதையும் வசதியாக அமைக்கப்பட் டிருக்கின்றன. இந்த நீர்ச்சுழி உலகத்தில் முதன்மையானவைகளுள் ஒன்று. நீரோட்டத்தின் சுழலும் முறுக்கும் உலகத்தி லுள்ள மற்றப் பெரிய நீர்ச் சுழிகளின் வேகத்தை ஒத்திருக்கின்றன. இச்சுழலை அருகில் சென்றுபார்க்க வசதி உண்டு. உறுதியான கம்பிகளில் உயரத்தில் தொங்கிக் கொண்டு இருக்கும் ஒரு தொட்டி இருக்கிறது. இதில் சுமார் 24 பேர் உட்காரலாம். இதில் ஏறிக்கொண்டு நீர்ச்சுழியைப் பார்த்தேன். மனத்தில் அச்சம் தோன்றியது. சிறிது கோழை மனமுடையவர்கள் மயக்கமடைந்து விடுவார்கள். அந்தரத்தில் அத்தொட்டியில் தொங்கிக்கொண்டு கீழே உக்கிரமான நீர்ச்சுழியைப் பார்த்தால் தைரியம் படைத்தவனுக்கும் மனம் கலங்கிவிடும். விமானத்தில் இருந்த 2, 3 பேர் திடுக்கிட்டுக் கண்களை மூடிக் கொண்டு பக்கத்திலிருந்தவர்களை இறுகப் பிடித்துக்கொண்டார்கள்.

இந்த நீர்ச்சுழியைப் பார்த்த மாத்திரத்தில் அஞ்சும் 'வீரர்கள்' உலகத்திலிருக்கிறார்கள். இடுக்கில் கீழ் நையகாராவின் நீரோட்டத்தைக் கண்டும், அருவியின் வீழ்ச்சியைக் கண்டும், பயந்து அருகில் செல்லவும் துணிச்சலில்லாமல் திரும்பிய வீரர்களுமிருக்கிறார்கள். இந்த அருவியின் எழிலைக் கண்டு அதன்மீது மோகமுற்றுத் தன் உயிரை அர்ப்பணம் செய்த துறவியின் வரலாற்றினையும் அறிந்தோம். நீர் வீழ்ச்சியைக் கண்டு இன்பமாகக் காலம் கழிக்க வந்தவர்களுள் ஒருசிலர் தற்செயலாகத் தவிர்க்கமுடியாமல், அருவிக்கு இரையானதுண்டு. தங்கள் உயிர்களுக்குத் தீங்கு நேருமென்று அறிந்தும், சிறிதும் தயங்காமல், அருவியில் குதித்தும், கொடிய நீரோட்டத்தில் நீந்தியும், நீர்ச்சுழியுடன் போராடியும் வெற்றி பெற்றவர் ஒரு சிலரும் இருக்கின்றார்கள். இத்தகைய முயற்சிகளில் தங்கள் உயிர்களைச் சூதாடி இழந்தவர்களு மிருக்கிறார்கள். என்னே இவர்களின் துணிச்சல்! மனத் திட்பம்!

நீர்வீழ்ச்சியில் படகுகள் சென்றால் என்ன கதிநேருமென்பதைப் பார்க்கப் பல சோதனைகள் நடத்தி இருக்கிறார்கள். கரடிகள், நாய்கள், எருமைகள் இவைகளைப் படகுகளில் வைத்து அருவியில் விட்டார்கள். அவைகள் தூள் தூளாக உடைந்தன. விலங்குகள் மாய்ந்தன. இக்காட்சிகளைக் கண்டும் கேட்டும் துணிந்து அருவியில் இறங்கிய வீரர்கள் இருக்கிறார்கள்.

முதல்முதலாக அருவியில் இறங்கி வெற்றியுடன் உயிர் தப்பியவர் அன்னு டெய்லர் (Anna Tayler) என்ற மாது. உருக்கினாலான பீப்பாய்க்குள் இருந்துகொண்டு குதிரை லாட அருவியில் இறங்கினார். அதிர்ஷ்ட வசமாக அருவியின் மையத்தில் இழுக்கப்பட்டு கீழேயுள்ள குளத்தில் விழுந்து சில காயங்களுடன் உயிர் தப்பினார். அன்னு டெய்லர் ஒரு ஆசிரியர். தன்னுடைய வீரச்செயலால் புகழ்பெற்று வெகுமதிகள் பெறலாமென எதிர் பார்த்தார். ஆனால், ஒரு காசுமின்றி வறுமையில் வாடினார். இவரைப் பின் தொடர்ந்து பாப்பி லீச் (Bobby Leach) என்பவர் உருக்கு டிரம்மில் சென்று, காயமுற்று ஆஸ்பத்திரியில் 6 மாதங்கள் படுத்திருந்தார். ஒரு கிரேக்கர் சென்றபோது அவருடைய பீப்பாய் அருவியில் அகப்பட்டுக் கொண்டு, தப்பிக்க முடியாமல் உயிர் துறந்தார். சுகமாகவும், ஒருவித இன்னலுமின்றி நீர்வீழ்ச்சியில் பிரயாணம் செய்தவர் ஜீன் லாஷர் (Jean Laussier) என்பவர். இவர் ரப்பர்ப் பந்தினுள் சென்றார். கீழ் நையகாராவில் கொந்தளிப்பான நீரோட்டத்தில் 10, 12 வீரர்கள் நீந்தியிருக்கிறார்கள். அருவியின் மீதும், கீழ் நையகராவின் மீதும் குறுக்கே கட்டப்பட்ட கயிற்றின் மீதும் அநேகர் நடந்து திறமையைக் காட்டியிருக்கிறார்கள். இவர்களுள் சிறந்தவர் பிளான்டின் (Blondin) என்பவர். ஒரு மனிதனை முதுகின்மீது ஏற்றிக்கொண்டு கயிற்றின்மீது நடந்து ஆற்றைக் கடந்தார். வெறிகொண்ட இந்த ஆற்றுடன் இனி மேல் யாரும் இவ்வாறு விளையாடக் கூடாதென்று இரு அரசாங்கத்தாரும் தடை விதித்திருக்கிறார்கள்.

நையகாரா நீர்வீழ்ச்சியும், கீழே கொந்தளித்து ஓடும் கீழ் நையகாராவும் சேர்ந்தால் இவைகளின் சக்தி 40 லட்சம் குதிரைச் சக்தி இருக்குமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. நீர்வீழ்ச்சியின்கீழ் இரு பக்கங்களிலும் யுனைடெட் ஸ்டேட்ஸும், கனடாவும் மின்சார உற்பத்தி நிலையங்கள் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றார்கள். மின்சார உற்பத்திக்கு அதிகமான அளவு தண்ணீர் உபயோகிக்கப்பட்டால் நீர் வீழ்ச்சியில் தண்ணீர் குறைந்து விடுமென்று அஞ்சி இரு அரசாங்கத்தாரும் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு வினாடிக்கு அமெரிக்கா 20000 கன அடியும், கனடா 36000 கன அடியும் பயன்படுத்துகின்றன. இவைகளுக்குமேல் மின்சார உற்பத்திக்காகப் பயன்படுத்தக் கூடாது. கீழ் நையகாராவிலும் தகுதியான இடங்களில் மின்சார உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றன. பல தொழிற்சாலைகள் இதன் பயனுக வேலை செய்கின்றன.

நையகாராவிலிருந்து நேராகக் கானடாவின் தலை நகரான டோரண்டோ (Toronto) விற்குச் சென்றேன். அங்கிருந்து நியூயார்க்கிற்கு ஆகாய விமானத்தில் திரும்பும்போது, நையகாரா நீர்வீழ்ச்சியின் மீது விமானம் பறந்து வந்தது. டோரண்டோவிற்கும், நியூயார்க்கிற்குமுள்ள நேர் மார்க்கத்தில் நையகாரா நீர்வீழ்ச்சி உள்ளது. நீர்வீழ்ச்சியின் மீது விமானம் தாழ்வாகப் பறந்தது. விமானத்திலிருந்து நான் பார்த்த நீர்வீழ்ச்சியின் காட்சி இன்னும் என் மனத்தைவிட்டு அகலவில்லை. நீர்வீழ்ச்சியில் சிதறிய நீர்த் துளிகள் மூடுபனியாக எழுந்து, விமானம் பறந்த உயரத்திற்கும் எட்டியது. நீர்வீழ்ச்சியில் நான் கண்ட இயற்கையின் வனப்பை விவரிக்க எனக்குச் சொல்திறனில்லையென்றே கூறவேண்டும்.

காதல் ஒரு கலையா என்று பலர் கேட்கலாம். அப்படித்தான் பேராசிரியர் முத்துசிவன் கூறுகிறார். காதல் மட்டுமா கலை? இன்னும் நட்பு, திருமணம் ....ஏன் வாழ்க்கை முழுவதுமே கலைதான். ஆந்திரே மொருவா என்னும் அறிஞர் 'வாழ்க்கைக் கலை' (*Art of Living*) என்றே ஒரு அருமையான நூல் எழுதியிருக்கிறார். ரஸ்ஸல் எழுதியுள்ள திருமணமும் அறிநெறியும் (*Marriage and Morals*) என்ற நூலும் படிக்கத்தக்க தாகும்.

காதல் — கலை

திரு. ஆ. முத்துசிவன், M. A.

காதல் செய்வது இயற்கை. ஏனென்றால் அஃறிணை உலகத்திலும் அதனைக் காண்கிறோம். ஆனாலும் அதனைக் கலைநிலைக்கு உயர்த்தி மகிழ்வதை மனித இனம் தனது சிறப்புரிமையாகப் பெற்றிருக்கிறது. அச்சிறப்புரிமையின் சிலத்தை இக்கட்டுரையின் வாயிலாகச் சிறிது பார்ப்போம். கலையின் இலக்கணம் பின்வருமாறு.

இயற்கையுடன் மனிதன் தன்னை இணைத்துக்கொள்ள முயலும் முயற்சியே கலை. இது ஆசிரியர் பேக்கனின் கருத்து. ஓவியப் புலவனுக்கு வேண்டிய மரங்கள், பூக்கள், பிராணி வகைகள் அனைத்தையும் இயற்கை தந்துதவுகிறது. அவைகளைத் தன் சித்தம்போல் வகையும் தொகையும் செய்து சித்திர வடிவத்தில் தீட்டி மகிழ்கிறான். தான் மகிழ்வதுடன் நம்மையும் தன்னுடைய மகிழ்ச்சியில் பங்கு கொள்ளச் செய்கிறான். ஓவியப் புலவனுக்குத் துணை செய்வது போன்று ஏனைய கலைஞர்களுக்கும் இயற்கை துணை செய்கிறது. உதாரணமாக நாடகக் கலைஞனை எடுத்துக்கொள்வோம். இன்பங்கள், துன்பங்கள், எண்ணங்கள், எழுச்சிகள், குரல் வகைகள், செயல்வகைகள் ஆகிய பலவற்றையும் இயற்கை கொடுத்துதவுகிறது. கலைஞர்களுக்குத் துணைசெய்வது போன்று காதலர்களுக்கும் துணை செய்கிறது. ஆகவே. கலை என்பது இயற்கையுடன் மனிதன் தன்னை இணைத்துக் கொள்ள முயலும் முயற்சியே என்ற இலக்கணம் பொருத்தமுடையதுதான்.

காதலுக்குரிய அடிப்படை இயற்கையின் அருளால் அமைக்கப்படுகிறது. மனித இனத்தை ஆண் பெண் என்ற இனங்களாகப் பிரித்து, இனப்பெருக்கம் செய்யும் ஆசையையும் பால் உணர்ச்சியையும் (Sex feeling) எழுப்பி, ஒரு இனம் மற்றொரு இனத்தைக் கவர்தற்குரிய எழுச்சியையும் ஊட்டி, அருமையான முறையில் இயற்கையானது காதலுக்கு அடிகோலி வைக்கிறது. காதலுக்காக வேண்டி இயற்கை தந்த வாய்ப்புகளை மனித

இனம் எவ்வளவோ அளவில் தனது சிந்தனையைச் செலுத்திச் செலுத்தி மெருகேற்றி வருகிறது. ஆகவேதான் காதல் என்பது சிறப்புடையதாகத் தோன்றுகிறது. அல்லாதுபோனால் மிருகங்களிடையே காணப்படும் காதலைப் போன்றே மனித இனத்தின் காதலும் காணப்படும். மிருகங்களுடைய காதலையும் பார்க்கவேண்டும்; மனிதனுடைய காதல் — கடிதத்தையும் படித்துப் பார்க்கவேண்டும். மனிதன் காதலைக் கலையாக மாற்ற எவ்வளவு முயன்றிருக்கிறான், இன்னும், காதலை முன்னிட்டு இயற்கையின் போக்கும் கலையின் போக்கும் எத்தனை அளவில் வேறுபட்டு நிற்கின்றன என்பதை நன்றாக உணர முடியும். காதல் என்பது பால்—உணர்ச்சிமீது எழுப்பப் பெறும் கற்பனைக் கோபுரம். அதனைக் கலையாக மாற்றுவதெல்லாம் பயிற்சி மயமான காரியம். வரவரத்தான் அதனைச் சாதிக்க முடியும்.

இச்சைக்கும் காதலுக்கும் வேற்றுமை உண்டு. இச்சை நெடிது நிலைப்பதில்லை. ஆயினும் நிலையற்ற அதனை அடித்தளமாகக் கொண்டு, நிலையான இதய ஓட்டங்களுக்கு இடம் தந்து, அதனையே காதலாக மாற்றும் ஆற்றலை மனிதன் எப்படி வளர்த்துக்கொண்டான்? இந்தக் கேள்வியின் விடையினுள்ளே காதலைப்பற்றிய மர்மங்கள் அடங்கிக் கிடக்கின்றன.

நமது வாழ்வில் ஒருசில கால எல்லைவரை, அதாவது, காளைப் பருவத்திலிருந்து நடுத்தர வயதுவரை, காதலுக்குரிய மனநிலை நம்மிடம் இருக்கிறது. இன்னதென்று விவரிக்க முடியாத இச்சை நமது இதயத்தில் முளைத்து ஒரு சில ஏக்கங்களை எழுப்புகின்றது. அவ்வாறான ஏக்கங்களுக்கு இரையாகி, நம்முடைய பாவனா மண்டலத்தில் நடமாடித் திரியும் பாவையரைப் பற்றி எண்ணி ஏங்கித் திரிகின்றோம். ஏனென்றால், நமக்கு உகந்த பெண்ணை நாம் இன்னும் சந்திக்காததால். சந்தித்துவிட்டால் மெய்மறந்து லயித்துவிடுகிறோம். நமது அறிவை மயக்கும் அழகும் மனத்தைச் சூறையிடும் சிருங்கார மொழி நலமும் வாய்ந்த பெண்கள் இருக்கின்றனர். அவர்களை மனமாரநாம் காதலிக்கிறோம். அவர்களை அருகில் அமர்த்திச் செலவிடும் ஒவ்வொரு கணத்திலும் அவர்களிடம் காணப்படும் வடிவார்ந்த பேரெழிலைப் பருகிக்கொண்டேயிருக்கிறோம். உலகில் எதுவும் அவர்கள் மூலம் பெறக்கூடிய சுகத்திற்கு நிகரில்லை என்னும் மனப்பான்மையில் தேனை உண்ட வண்டுபோல் மயங்கிக் கிடக்கிறோம். எவ்விதமான கட்டுப்பாடும் இல்லாது காதல் செய்யும் இன்பத்தைத் தலைசிறந்த இன்பம் என்றுதான் கொள்ளவேண்டும். காதல் செய்யும் மனப்போக்கே தனி. அத்தகைய மனப்போக்கை இயற்கை நமக்குத் தந்துதவுகிறது.

காதலுக்கேற்ற பக்குவம் வாய்ந்த இருவர் உள்ளத்திலும் காதல் விளக்கை ஏற்றிவைக்கும் சந்தர்ப்பங்கள் பல உண்டு. உதாரணமாக இரண்டொன்றைப் பார்க்கலாம். அருமையான இலக்கிய வாசகத்தைச் சொன்ன அளவில் அதன் அருமை காரணமாக, இரண்டு உள்ளங்கள் ஒன்றாக இணையக்கூடும். காரிலோ, ரயிலிலோ பிரயாணம் செய்யும்போது உடம்புடன் உடம்பு தீண்டும் காரணமாக மன உறவு ஏற்படலாம். இன்னும் பெரிய விளையாட்டுக்காரன், நடிகன், பிரசங்கி ஆகிய இவர்களுடைய பேராற்றலிலும் பெரும்புகழிலும் மயக்கங்கொண்ட காரணத்தால், அவர்களைச் சந்திக்க நேர்ந்ததும் காதல்

செய்யும் உள்ளம் முனைப்படைய லாம்.

காதலுக்கு வைதிக முறையிலும் காரணம் கற்பிக்கப்படுகிறது. அதனையும் பார்ப்போம். "கண்டதும் காதல்" என்று நாம் கேள்விப்படுகிறோம். அவ்வாறு கண்டதும் ஏற்படும் காதலையே வைதிக முறை குறிப்பிடுகின்றது. அதெல்லாம் விதியின் பயனாக நிகழ்வதென்று கருதப்படுகின்றது. தமிழ் மரபு விதியையே நன்றாக வற்புறுத்துகிறது. வடகடலில் இட்ட முனை ஒன்று தென்கடலில் இட்ட நுகத்தினுள் நுழைவது போன்றது யாரோ ஒரு ஆண்மகனும் யாரோ ஒரு பெண்மகளும் ஒருவரை ஒருவர் ஊழ்வினை வசத்தால் சந்தித்துக் காதல் செய்வதெல்லாம். பண்டைத் தமிழ் இலக்கியம் இக் கருத்தை நன்றாக வற்புறுத்துகிறது. ஆதிகாலத்திலுள்ள கிரேக்க மரபும் கிட்டத்தட்ட இதனை ஒத்தே காணப்படுகிறது. கிரேக்க மரபு பின்வருமாறு.

மக்கள் ஆதியில் ஆண், பெண் ஆகிய இருபாலும் ஒன்றாய்க் கலந்த கலப்பினர்களாக இருந்தார்களாம். ஏதோ ஒரு தெய்வம் ஒட்டியிருந்த ஆணையும் பெண்ணையும் பிரித்து விடவே பிரித்துவிட்ட பாகங்கள் மண்ணுலகில் தோன்றி ஒன்றை ஒன்று சந்திக்க முயல்கின்றனவாம். ஒரு பகுதி மற்றொரு பகுதியைச் சந்திக்கும் சந்திப்பே காதலன் காதலியர் சந்திப்பாம். இவ்வாறு அமைகின்றது கிரேக்க புராணத்தின் கூற்று.

இந்த இடத்தில் இன்னொரு வகையான தம்பதிகளைப்பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். தற்செயலாகவோ விதியின் பயனாகவோ அவர்கள் காதலன் காதலியராகச் சேர்ந்துவிட வில்லை. உற்றார் உறவினர் மூலம் அவர்கள் தம்பதிகளாக இணைக்கப்படுகிறார்கள். அவர்களிடையே காதல் பிறக்க வழி உண்டா என்று கேட்கலாம். பெரும்பாலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள இயல்பான தன்மை என்னவென்றால், அன்பும் பணிவும் கொண்டொழுகும் பெண்களைக் கொண்டு ஆண்கள் திருப்தி அடைவார்கள்; ஊக்கமும் உடல் வலியும் பெற்ற ஆண்களைக்கொண்டு பெண்கள் திருப்தி அடைவார்கள். உற்றார் உறவினரால் இணைக்கப்பட்ட தம்பதிகளிடையே காதல் ஏற்படவேண்டுமானால் மேலே குறிப்பிடப்பட்ட தன்மைகள் ஒவ்வொருவரிடத்தும் காணப்பட வேண்டும். அத்துடன் ஒத்த மனப்பான்மை, அடக்கம், நகைச்சுவை முதலிய குணங்களும் இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் நன்மை உண்டாகும்.

இனி, காதலன் காதலியரிடையே முளைத்துள்ள காதலை வளர்ப்பதற்குரிய வழி வகைகளைச் சிறிது கவனிக்கலாம்.

எந்தப் பாத்திரத்தின் மீது கவர்ச்சி ஏற்பட்டுள்ளதோ அந்தப் பாத்திரம் கண்ணில் படாதிருக்குங் காலம் வரை காதல் கனன்று கொண்டிருக்கும்.

> "அவனி மழைபெய்யும் குளிர்காலம் வந்ததே;
> அவரும் அவதிசொன்ன நாளும் வந்ததே;
> கவலை பெரிதாச்சு, பழிகாரர் வந்திலர்;
> கணவர் உறவு கதையாய் முடிந்ததே"

என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கங்கொள்ள நேரிடும். பிரிவு காதலை வளர்க்கும் செவிலித்தாய். காலத்தைக் கடத்தலும் பிரிவைத் தோற்றுவித்தலும் பெண்களுக்கு மிகவும் ஏற்றவை. பிரிவுக் காலத்தில் அவள் தெய்வ அரம்பையாகவே தென்படுகிறாள். ஏனென்

ருல் அவளுடைய உருவத்தைச் சுற்றிக் காதலன் தன்னுடைய ஏக்கங்களை யெல்லாம் ஒட்டவைத்துப் பார்க்கிருன். அந்த ஏக்கங்கள் மிக உயர்ந்த ஆபரணங்களைப்போன்று அவளை வளைத்துக் கிடந்து அழகு செய்கின்றன. காதல் என்பது அகமயமானது. நாம் காதலிப்பதெல்லாம் நமது பார்வையில் பட்டவர்களை அல்ல; நமது பாவனையில் பட்டவர்களையே. இந்த இடத்தில் கவிஞன் வேர்ட்ஸ்வொர்த் (Wordsworth) சொல்லியிருப்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அவன் ஒரு பெண்ணைப்பார்த்துப் பின்வருமாறு கூறுகிருன்.

ஆரணங்கே, நீ அழகி, ஆயினுங்கேள் நின்னிடத்துப்
பேரன்பின் பயனாக உள்ளத்தே பெருக்கெடுத்த
சீரான கற்பனையைச் சில காலம் யான்கொண்டு
நேராக மகிழ்ந்துள்ளேன் எனக்கூறின் நீ முனியேல்

"Yes, Thou art fair, yet be not
moved to scorn the declaration
That sometimes I have loved in thee
my fancy's own creation"

என்று அமைகின்றது அவனுடைய கூற்று. இக்கூற்று கற்பனைக் கூற்றில்லை; அனுபவத்தை விளக்கும் வெளியீடே. கண்ணில் பட்ட பாத்திரத்தைக் கருத்தில் பட்ட பாத்திரமாக உருமாற்றிக் காணும்பொழுது ஏற்படுகிற இன்பமே தனி. ஆனாலும் ஒன்றைக் கவனிக்கவேண்டும். விறகு இல்லாமல் தீ இல்லை. ஆகவே உள்ளத்தில் எழுந்த காதல்-கனல் ஒளி குன்ருது திகழவேண்டுமாயின் ஒருவரை ஒருவர் தொட்டுக்கொள்ள வேண்டும் அல்லது சிருங்காரப் போக்குடைய மொழிகளை நன்ருகப் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

காதலர் இருவருக்குள்ளும் எந்த விதத்திலும் தங்களுடைய காதல் வெற்றி அடையும் என்ற உறுதிப்பாடு தோன்றுமாயின், கனிவுடைய காதலுக்கேற்ற வாய்ப்பு நழுவி விடும். ஐயமும் அசட்டுத்தனமும் காதலைவளர்க்க எவ்வளவோ துணை செய்கின்றன. "இன்று காதலி நன்ருக முகங்கொடுத்துப் பேசவில்லையே; ஒரு வேளை நான் அணிந்திருந்த உடை அவளுக்குப் பிடிக்கவில்லையோ அல்லது நான் பேசியதில் ஏதேனும் தவறுசெய்து விட்டேனே? ஒருவேளை அவள் கண்ணில் படாது மறைத்து வைத்திருந்த பொடிடப்பி கீழே விழுந்ததை அவள் பார்த்ததனலோ" என்று இவ்வாருக ஆயிரம் ஆயிரமான கற்பனைப் பூதங்களை எழுப்பி, அவைகளைக் கண்டு காதலன் நடுங்குவான். எவ்வளவுக்கு எவ்வளவு அறியமுடியாமல் திகைக்கிருனே அவ்வளவுக்கவ்வளவு காதலனுடைய காதல் பெருக்கெடுக்கும். ஆனாலும் ஒரு எச்சரிக்கை. கவலை நெடிது காலம் நீடித்துவிடக் கூடாது. நீடிக்குமாயின் காதல் புகைந்துவிடும். காதலர் இருவரிடத்தும் இருக்கின்ற ஈர்ப்பு உணர்ச்சியும் ஈடுபாடும் சமநிலையில் இருக்கவேண்டும். அதுவே சிறந்தது. ஆனல் பெரும்பாலும் இருக்காது சிறிதாயினும் ஏற்றத்தாழ்வு இருக்கத்தான் செய்யும். அதனை நிறைசெய்யவேண்டுமாயின் காதலால் வென்ற பாத்திரத்தை மீண்டும் மீண்டும் வென்றுகொண்டிருக்க வேண்டும். காதல் உணர்ச்சியை எழுப்புவதன் மூலம் அவ்வெற்றி கைகூடும்.

இனி அடிமைகளின் காதலைப் பற்றிச் சிறிது பார்க்கலாம். அடிமைகளின் காதலில் கவர்ச்சி கிடையாது. காதலிக்கப்படும் பாத்திரத்தின் உடல்தான் நமக்குச் சொந்தமே தவிர உள்ளம் சொந்தமாகாது. எப்பொழுதும் நாடிவந்து

நம்மைத் தேர்ந்தெடுப்பதை நாம் விரும்பவேண்டுமே தவிர நம்மைச் சகித்துக்கொள்வதை விரும்புவது சிறப்பாகாது. காதலிக்கப்படும் பாத்திரம் சுதந்திர மனநிலையுள்ள பாத்திரம் என்றால் அத்தகைய பாத்திரத்தின் காதல் பரிபூரணமாகக் கிடைக்குமோ இல்லையோ என்ற ஏக்கம் உதிக்கும். அந்த ஏக்கம் காதலை வளர்க்கும். அடிமைகளின் காதலில் ஏக்கத்திற்கும் அதன் பயனான கனிவினுக்கும் இடம் இல்லாதுபோகிறது. அல்லாமலும் இச்சித்த மாத்திரத்தில் கையகப்படும் பாத்திரத்தின் வாயிலாகவும் சிறந்த காதலை அனுபவித்துவிட முடியாது. நாணமும் பயிர்ப்பும் அற்ற பெண்ணின் காதல் மெருகு இழந்த காதலாகும்.

காதல் செய்வதென்பது பயிற்சி மயமான காரியம். ஏனென்றால் அது ஓர் கலை.

மிருகங்களைப் பார்ப்போம். அவைகள் குறிப்பிட்ட பருவ காலங்களில் பால்வேட்கை தணிக்கப் பாடுபடுகின்றன. இன்னும் சற்று அஃறிணை உலகினுள் நுழைந்து பார்ப்போம்.

கவனத்தைக் கவரும் சிறந்த முறைகளுள் ஒன்று என்னவென்றால் அலங்காரம் செய்தலாகும். பூக்கள் கவர்ச்சியூட்டும் வகைவகையான வர்ணங்களின் மூலம் வண்டுகளை வசீகரிக்கின்றன. மின்மினிகள் இரவில் ஒளிகாட்டித் தங்கள் துணையை அழைக்கின்றன. இன்னும் மயிலை எடுத்துக் கொள்வோம். பெண் மயிலை மயக்கவேண்டி ஆண்மயில் தனது தோகையை அலங்காரமாக விரித்து, ஆடி ஆடி, மிகுந்த கவர்ச்சியை ஊட்டமுயல்கிறது. இவ்வாறு அஃறிணை இனங்களே அலங்காரத்தை மேற்கொள்கின்றன என்றால் உயர்திணை இனத்தைச் சேர்ந்த மனிதர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். பெண்கள் மிக்க அழகும் கவர்ச்சியும் நிறைந்த ஆபரணங்களையும் உடைகளையும் அணிந்து ஆண்களின் கவனத்தைத் தம் பக்கம் இழுக்கின்றனர். சில பெண்கள் வழக்கத்திற்கு மாறான எளிமையைக் கையாளுகின்றனர். அவ்வாறு செய்வது சிலாக்கியமாகாது. அலங்காரம் அவசியம். ஆனால் பகட்டு வேண்டாம். பெண்களுக்கு எப்பொழுதும் தற்பாதுகாப்பில் கவனம் அதிகம். அதனையே பெரிதெனக் கொண்டு வாழும் பெண்கள் ஆண்களின் அன்பு நிழலில் தங்குவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். அப்படிப்பட்டவர்களுக்கு அலங்காரம் இன்றியமையாதது. மேலும் காதலர்கள் ஒருவரை ஒருவர் பாராட்டிக்கொள்ளவேண்டும். அவ்வாறு பாராட்டிக் கொள்வது மிகச் சிறந்த முறையாகும். பெரும்பாலான காதல்—பாட்டுகளைத் துருவிப் பார்த்தால் பாராட்டும் புலப்பமுந்தான் நிரம்பிக் கிடக்கும். புலப்பம் இதயத்தை உடைக்கும். ஆனாலும் சீக்கிரத்தில் அயர்ச்சியை ஊட்டிவிடும் ஏனென்றால் அதனை நெடுநேரம் சகித்துக்கொள்ள முடியாது. பாராட்டு அப்படி இல்லை. எத்தனை பெரிய ஆணுக்கும் பெண்ணுக்கும் தன்னைப்பற்றி ஏதாவது ஒரு துறையில் தாழ்வு—உணர்ச்சி இருக்கத்தான் செய்யும். உதாரணமாக அழகுள்ள பெண்ணுக்குத் தன்னுடைய மதி நுட்பத்தில் கொஞ்சம் ஐயப்பாடு இருக்கும். மதிநுட்பம் நிறைந்த பெண்ணுக்குத் தன்னுடைய உடல் வனப்புக் குறித்துக் கொஞ்சம் சந்தேகம். பாராட்டின்மூலம் அத்தகைய ஐயங்கள் அகலும். நாணம் மிக்க

சில பெண்களைப் பாராட்டினால், சூரியனைக் கண்ட தாமரைபோன்று அவர்களுடைய முகம் மலர்ந்துவிடும். பெண்களைவிட ஆண்களே மிகுந்த பாராட்டுப் பிரியர்கள். அழகு குறைந்த சில பெண்கள் காதல் துறையில் மிகுந்த வெற்றி பெறுகிறார்கள். ஆடவர்களை எப்படிப் புகழ்வது என்ற மர்மம் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். யார் யார் தம்மிடம் சில பண்புகள் இல்லை என்ற குறிப்பை நாம் உணர்ந்துகொள்ளும் அளவுக்கு வெளிக் காட்டுகிறார்களோ, அவர்களிடம் அப் பண்புகள் இருப்பதாகப் பாராட்டினால் அவர்கள் பெறுகிற இன்பத்தை அளவிட முடியாது. ஒரு தளபர்த்தனிடம் அவனுடைய போர் வெற்றிகளைக் குறித்துப் பாராட்டினால் அத்தனை தூரம் மகிழ்ந்துவிடமாட்டான். அதற்குப் பதிலாக அவனுடைய கண்களையோ துடியான மூக்கையோ பாராட்டினால் அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டுவிடும். பெண்களுக்கு ஆண்களை வெல்லக்கூடிய வழிவகைகள் நன்றாகத் தெரியும். பெரும்பாலான நம்பிக்கை என்னவென்றால், ஆண்கள் தங்களை நாடி வரட்டுமே என்பதாகப் பெண்கள் காத்திருப்பார்கள் என்பதாம். வெளித் தோற்றத்திற்கு அப்படித்தான் தெரியும். உண்மையில் அப்படி இல்லை. நாலா விஷயங்களிலும் மனிதனுக்கு நாட்டம் எழும்படி செய்தல், அடிக்கடி அவனுக்கு ஊக்க மூட்டுதல், எப்பொழுதும் அவனை ஆதரிப்பதாகக் காட்டிக்கொள்ளுதல் ஆகிய வழிகளின் மூலம் பெண்கள் ஆண்களைத் தம் வசப்சடுத்துகிறார்கள். ஆண்களும் பெண்களைத் தம்வசப்படுத்துகிறார்கள். அழகான பரிசுகளை வழங்கல், மதுரமான காதற் பாடல்களை இசைத்தல், இசைக்கருவிகளை இயக்கல், நகைச்சுவைததும்ப உரையாடல், மற்றவர்கள் செய்வதைவிட ஒரு படி உயரமாக எதையும் செய்யமுயலுதல் ஆகிய பலவழிகள் வாயிலாகத் தம் வசப்படுத்துகின்றனர்.

காதலுக்கும் பற்பல நோய்கள் உண்டு. பற்பல காரணங்களை முன்னிட்டு அவைகள் ஏற்படலாம். ஓங்கிய உணர்ச்சிப்போக்குடைய ஆடவன் தளர்ந்த உணர்ச்சிப் போக்குடைய பெண்ணை நிரந்தரமாகக் காதலிக்கமுடியாது. இளங் காதலர்கள் ஆரம்பத்தில் தீவிரமான ஈடுபாடு காட்டலாம். பேசிப் பேசி இன்பம் அடைவதற்குரிய விஷயங்கள் ஆயிரம் ஆயிரமாக இருக்கலாம். ஆயினும் காலப் போக்கில் சலிப்பு ஏற்படக்கூடும். எப்படியென்றால் சொல்லவேண்டுவன எல்லாம் சொல்லித்தீர்ந்துவிடும், பேசவேண்டுவன எல்லாம் பேசி ஓய்ந்துவிடும். புதுமைக்கு இடம் இருக்காது. அப்பால் ஒவ்வொருவரும் மௌனத்தையும் விலகி இருப்பதையுமே விரும்புவர். ஏன் இந்த நிலையென்றால் புதுப்பிக்கக்கூடிய மர்மம் தெரியவில்லை. மர்மம் புரிந்தவன் எச்சரிக்கையாக நடந்துகொள்வான். அவனிடத்தில் இருக்கும் கவர்ச்சியை அவன் தளரவிடமாட்டான். அவனுக்கு வயதானாலும் கவலை இல்லை. வயது ஒன்றும் செய்துவிடாது. அழகுடைய முகம் அழகான முறையிலேயே முதிர்ச்சி அடையும். சில ஆடவர்கள் தங்களுடைய விருப்பு வெறுப்புகளைத் தங்கள் துணைவியரிடத்தில் சுமத்தப் பார்க்கின்றனர். அவ்வாறு செய்வது அறிவற்ற செயலாகும். காதலர்களிடத் தாயினும் சரி, நண்பர்களிடத் தாயினும் சரி, சங்கடம் கலவாதமுறையில் உறவுகொள்ள முயல்வதே சிறப்பானது. சில ஆடவர்கள் படித்த செருக்குக்

காரணமாகத் தங்கள் மனைவியரின் கருத்துக்களை அசட்டை செய்வார்கள் அல்லது வெளிப்படையாகவே அவமதிப்பர். அவ்வாறு செய்வது விவேகமற்ற செயலாகும். ஏதேனும் பிணக்கு ஏற்பட்டால் அதனை அன்பு, மௌனம், அடக்கம் ஆகிய குணங்களைத் துணைகொண்டு அகற்றவேண்டும். பெண்ணானவள், என்ன இருந்தாலும், உணர்ச்சிக்கு இரையாகும் இயற்கை படைத்தவள் என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அன்பு, பொறுமை, அடக்கம், நம்பிக்கை ஆகிய நான்கு குணங்களும் காதலின் அழுத்தத்திற்கும் நீட்சிக்கும் பெருந்துணை செய்யும் சாதனங்கள் ஆகும்.

முளைத்த காதலைக் கருகவிடாது வளர்ப்பது ஓர்வகைத் திறன். அதனைப் பெருக்குவதற்குரிய வழிவகைகள் பின்வருமாறு.

அந்தரங்கமான இடத்திலும் மரியாதை தழுவ நடந்துகொள்ள வேண்டும். சொல்லக்கூடிய எதையும் அலங்காரமாகச் சொல்வது நல்லது. எந்நிலையிலும் நகைச்சுவையைக் கையாளப் பழகிக்கொள்ளவேண்டும். தன்னையே சிரிப்புக்கு இரையாக்கலாம். கேடு ஒன்றும் இல்லை. இருக்கிற குற்றங்களை எல்லைகடந்த அளவில் மிகுதிப்படுத்தக்கூடாது. அலட்சிய மனப்பான்மை, அவநம்பிக்கை முதலியனவற்றைப் போக்கடிக்கும் அளவில் நடந்து கொள்ளவேண்டும். இடையிடையே பிரிவைத் தோற்றுவித்து அதன் மூலம் ஏங்குவதற்கு இடம் உண்டாக்கிக் கொள்ளவேண்டும். ஏக்கம் ஓர் வகைத் தீ. வேண்டாத நினைவுகளை எரிக்கவல்லது. ஏக்கத்துக்கு இடம் ஏற்படுவது மிகவும் நல்லது. ஆயினும் அது நீடித்துவிடக் கூடாது. இடை யிடையே கடிதம், தூது இவற்றின் மூலம் ஆற்றிக் கொள்ளவேண்டும். இருவரும் பேசிக்கொண்டிருக்கிற காலத்தில் கவிஞன் தந்துள்ள காதல் — பதங்களை நயமாகப் பரிமாறிக் கொள்ளவேண்டும். அதன் பயனாகப் பேச்சில் சுவை குன்றாது. மணச்சடங்கின் மூலம் உடம்பை வெல்வது எளிது. இன்னும் பணம், பதவி, அதிகாரம் முதலியவற்றைக்கொண்டும் ஒரு பாத்திரத்தின் உடம்பைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு பெறுவதைக் காதல் வெற்றியாகக் கருதமுடியாது. கருதினாலும் பொருந்தாது. உள்ளத்தை வெல்லவேண்டும். ஒருவருடைய உள்ளம் மற்றொருவருடைய உள்ளங்கைப் பொருளாக இருக்கவேண்டும். காதலர்கள் கருத்தெல்லாம் உள்ளத்தின் வெற்றியைப் பற்றியதாகவே இருப்பது அவசியமாகும். அதுவகைக்கு வேண்டிய தியாகத்தையும் ஆசாரத்தையும் விரதமாகக் கொள்வது சாலச் சிறந்தது. காதலுக்கு வசந்தகாலம் ஒன்றுதான் உண்டென்று நினைப்பது அறிவின்மை. மாரியும் உண்டு. கோடையும் உண்டு. பருவகாலங்களின் நிலைக்கேற்ப உடம்பைப் பேணுவது போன்று உள்ளத்தையும் பேணிக்கொள்ளவேண்டும்.

இறுதியாக நம்பிக்கைபற்றி ஒரு வார்த்தை சொல்வது மிகவும் பொருத்தமானது. ஏனென்றால் நம்பிக்கைபோன்று காதலுக்கு அரணாக நின்று துணைசெய்ய வல்லது வேறு எதுவும் இல்லை. அது விலைமதிக்கமுடியாதது. உடலின்மீது தவழும் அழகு எவ்வாறு அதற்குக் கவர்ச்சியைக் கொடுக்கிறதோ அவ்வாறு உள்ளத்திற்கு வசீகரத்தை ஊட்டவல்ல திறன் நம்பிக்கைக்கு உண்டு. காதலனும் காதலியும் தமது இளமைப் பருவத்

தில் தனிமையை நாடுகிறார்கள். எதற்கென்றால் ஒருவரை ஒருவர் தழுவி மகிழ. அம்மாதிரியே வயதான பருவத்திலும் தனிமையை நாடுகிறார்கள். எதற்காக என்றால் ஒருவர் இதயத்தில் இருப்பதை அடுத்தவருடைய இதயத்தில் கொட்டுவதற்கு. ஒருவர் மற்றொருவர்மீது கொண்டுள்ள நம்பிக்கை அத்தனை தூரம் தடிப்பேறி விட்டது. ஒருவருடைய நலனுக்கு வேண்டி மற்றவர் தம் உயிரைக் கொடுக்க முன்வரும் அளவில் நம்பிக்கை அத்தனை ஊக்கம் அளிக்கிறது. உள்ளத்தை உயர்வடையச் செய்கிறது. காதலை வெற்றிபெறச் செய்யும் அருமைகளுள் நம்பிக்கை தனிச் சிறப்புடையது.

காதல் புனிதமானது. அதனைப் பழகத் துணைசெய்யும் இயற்கைக்கு ஆயிரம் முறை பல்லாண்டு பாடினும் தகும். கனவிலும் நனவிலும் நமது இதயத்தை நிறைக்கவல்ல பேராற்றலை அதற்கு இயற்கை கொடுத்திருக்கிறது. இரண்டு உள்ளங்களின் இணைப்பால் காதல் என்ற தெய்வ விளக்கு ஏற்றப்படுகிறது. அரசனுக்குத்தான் காதல் உரியது என்பதில்லை. ஆண்டிக்கும் உரியதே. காதலைப்பற்றிப்பேசுவார் பலர். அதனைக் கருத்தில்கொள்வார் சிலர். அதனுடைய தெய்வித மாண்பை நுகர்வார் ஓரிருவரே. ''காதலுக்கும் சிகரங்கள் உண்டு. அவற்றின்மீது ஏறுவார் கோடியில் ஒருவரே' என்று கூறுகிறான் ஒரு ரஷ்ய அறிஞன். உண்மை.

'Even Love has its own peaks which only one out of millions is able to climb.'

காதல்

''சரீரக் காதல் இனத்தைப் பெருக்கும்; நட்பமைந்த (உள்ளக்) காதல் இனத்தை மாண்புறச் செய்யும். அரக்கத்தனமான 'காதல்' இனத்தைக் கசடாக்கி உருவழிக்கிறது.

— பேக்கன்

''காதலா—அது ஒரு எழில் நிறைந்த கனவு''

— வில்லியம் ஷார்ப்

''காதல்—

குளிர் உறைப்பு மாறாமல் கனன்றெரியும் நெருப்பு
தோல்விக்குச் சளைக்காமல் வளர்கின்ற வெற்றி
ஒரு நாளும் சாகாத நிரந்தர நோய்
நிலைபெற்ற பொய்யாகி நின்றுவளர் பேருண்மை
எதுவும் இல்லாப் பாழாகி எல்லாம் ஆன பெரும்பொருள்.

— மிடில்டன்

'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை அலரும் இந் நோய்'
'நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும் தீ'

— தமிழ் மறை

இன்னொரு சங்கடம்?

"சிந்தனை"

> "உலக மெலாம் கட்டி ஆளினும்
> கடல்மீதினில் ஆணை செலவே நினைப்பர்"—

என்று ஒரு கவிஞன் கூறினன் அன்றொருநாள். அது உண்மை என்பதைக் கண்டோம் மற்றொருநாள், அதாவது, முதல் உலகப் போரில்.

ஆனால் இன்று மூன்றாவது உலகப் பெரும்போரை உண்டாக்குமோ பனி நிறைந்த ஒரு பயனற்ற இடம் என்று அஞ்சவேண்டியிருக்கிறது. ஆம், உலக வல்லரசுகளின் போக்கு அவ்வாறுதான் இருக்கிறது; மக்களை வாழவைப்பதாகக் கூறிக்கொண்டு வீழவைக்கின்றனர்.

அத்தகைய வல்லரசுகளின் போக்கு முன்பு எப்படி இருந்தது, இப்பொழுது எப்படி மூன்றாம் உலகப் பெரும் போருக்கும் காரணமாகின்றது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

உலக வல்லரசுகள் புதுப் புது நாடுகளை ஆக்கிரமித்து, அங்குக் குடியேறி, அந் நாட்டின் வளங்களைப் பயன்படுத்திக்கொண்டு வந்திருக்கின்றன. ஆப்பிரிக்கா, இந்தியா, இந்தோனேஷியா, இந்தோசைனா முதலிய நாடுகளின் சரித்திரம் இதனை நிரூபிக்கிறது. மக்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் மேலைநாட்டு வல்லரசுகளின் ஆதிக்கம் பாவியிருக்கிறது. இன்றும் புதிய நாடுகளை ஆக்கிரமித்துக் கொள்ள ஒவ்வொரு வல்லரசும் பேராவலுடன் தேடி அலைகிறது. அந்தோ! அவைகள் பார்வையில் படாத மக்கள் வாழும் நாடு ஒன்றும் இல்லை. இக் கோளத்தில் இல்லாமையால் சந்திரன், செவ்வாய் முதலிய கோளங்களுக்குச் சென்று, அங்குள்ள நாடுகளையோ, அன்றி நிலப்பரப்பையோ பிடிக்கத் திட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. இவ் வல்லரசுகள் வெற்றியடையுமா? கூறுவதற்கில்லை. ஆனால், இவைகள் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு அந்த ஆராய்ச்சியிலேயே இருந்துவிட்டால்கூட நன்றாய் இருக்கும்போல் தோன்றுகிறது. ஏன்? கண்டுபிடித்த பின்னர் அல்லவா கடும்போர்!

ஆயினும், எதிர்நோக்கும் இன்றைய உலகப் பெரும்போருக்குக் காரணமாயிருப்பது முதலில் குறிப்பிட்ட அந்தப் பனி நிறைந்த இடம்தான். அது எங்கு இருக்கின்றது? அதற்கு அவ்வளவு சிறப்பு ஏற்படக் காரணம் என்ன?—என்ற வினாக்களுக்கு ஓரளவு விடையை அறிந்தால்தான் அதனால் ஏற்படலாம் என்று கருதப்படும் 'போர்' உலகை நீறாக்குமா அல்லது சீராக்குமா என்பதை நாம் உணர முடியும்.

உருண்டு திரண்ட பூமியின்மேல் நுனி வடதுருவம், கீழ்க் கோடி தென்துருவம் என்பதை யாவரும் அறிவர். வடதுருவத்தைச் சுற்றியுள்ள நிலப்பரப்பிற்கு 'ஆர்க்டிக்' (Arctic) பிரதேசம் என்றும், தென்துருவ நிலப் பரப்பிற்கு 'அண்டார்டிக்' (Antartic) பிரதேசம் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. 'ஆர்க்டிக்' பிரதேசத்தில், வல்லரசுகள் தங்கள் தங்களுக்குக் கிடைத்த தீவுகளிலும், நிலப் பரப்பிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. அதுபோன்று தென்

துருவப் பகுதியிலும் ஆதிக்கம் செலுத்த முயல்கின்றன............ இல்லை.........போரிடுகின்றன என்று தான் கூறவேண்டும்.

அண்டார்டிக் பிரதேசம் அறுபது இலட்சம் சதுர மைல் அளவுடையது. பனியும் பனிப் பாறையும் நிறைந்த மிகக் குளிரான இடம். சில நீர்வாழ் பிராணிகள்தான் அங்கு வாழும் 'மக்கள்'. ஆனால், அங்குச் சில தாதுப் (Mineral) பொருள்களும், நிலக்கரியும் புதைந்து கிடக்கின்றன என்று கருதுகின்றனர். இருப்பினும் எந்த நாடும் அவைகளை எடுத்துப் பயன்படுத்த விரும்பவில்லை. காரணம் எடுப்பதற்குரிய செலவு, கிடைப்பதை விட மிக அதிகமாகுமாம். அன்றி, அங்குக் கிடைக்கும் நிலக்கரியும் உயர் தரமானதாக இல்ல.

இத்தகைய நாட்டைப் பிடிப்பதில் இன்று பெரும்போட்டி. சோவியத் ருஷியா எழு வல்லரசு நாடுகளை எதிர்த்து ஒரு அறிக்கை விடுத்திருக்கிறது. அண்டார்டிக் நாட்டைப் பொறுத்ததுதான் அந்த அறிக்கை. (எழு நாடுகள்:— அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ், நார்வே, அர்ஜென்டைனா)

அந்த எழு நாடுகளும் அந்த அறிக்கையை மறுத்து ருஷ்யாவைப் பலமாக எதிர்க்கின்றன. அதே நேரத்தில் அவைகளும், சில்லி (Chile) உட்பட எட்டும் தங்களுக்குள் புகைகின்றன அதே காரணத்திற்காக.

முதன் முதலில், அதாவது 1820-இல் சோவியத் ருஷியாவைச் சேர்ந்த இருவர் (Bellingshausen and Lazarev), அண்டார்டிக் கண்டத்தைக் கண்டுபிடித்தனர். அங்குள்ள குயின் மாட் நிலப்பகுதியும் (Queen Maud Land) அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். மேற்குறிப்பிட்ட இருவரும் அதே ஆண்டில் மீண்டும் ஒரு முறை அக் கண்டத்தைப் பார்வையிட்டு மீண்டனர். ஒருமுறைகூடக் கப்பலைவிட்டு இறங்கி நிலப் பரப்பின் உட்பகுதியை அடையவில்லையாம்.

பின் 1840 முதல் 1911 வரை பலர் அக் கண்டத்தைப் பார்த்துவரவேண்டும் என்ற ஆவலில் பெருமுயற்சி செய்திருக்கின்றனர். 1911-இல் ரோல்டு அமென்சன் (Roald Amundsen) என்பவர் நீண்டநாள் பிரயாணத்தின் பயனாகக் 'குயின் மாட்' நிலப் பகுதியைக் கண்டுபிடித்தார். அத்துடன் நிற்காமல் அப்பகுதியைக் கைப்பற்றும் உரிமையை 'நார்வே' நாட்டிற்கு வழங்கினராம். இதற்குப் பின்னர்த்தான் ஆங்கில, அமெரிக்க நாடுகளும் நாடு பிடிக்கும் ஆசையில் அண்டார்டிக் கண்டத்தை அடைந்துள்ளன.

இஃது இவ்வாறிருக்க, நார்வே, 1939 ஜனவரி 14-இல் அண்டார்டிக் கண்டத்தைச் சேர்ந்த 'குயின் மாட்' பகுதி தனக்குச் சொந்தமானது என்று உரிமை பாராட்டத் தொடங்கிற்று. உடனே சோவியத் ருஷியா, "நார்வேயின் உரிமை நேர்மையற்றது, உரிமையாளர் ருஷியர்களே" என்று நார்வேக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தது.

இந்நிலை 1945 வரை நீடித்தது என்று சொல்லலாம். பிறகு நார்வே, பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய நாடுகள் அண்டார்டிக் பகுதியில் உள்ள ஒவ்வொரு இடத்தையும் தங்கள் தங்கள் ஆளுகைக்குக் கொண்டுவரலாயின. பாக்லாந்து தீவுகளைக் (Falklands Island Dependencies) குறித்து அர்ஜன்டைனாவும், பிரிட்டனும் ஒன்றோடொன்று கூச்சலிடத் தொடங்கின. சில்லி (Chile) என்ற நாடும் இங்கிலாந்தை எதிர்க்கத் தொடங்கிற்று. அமெரிக்க ஐக்கிய நாடுகள், தங்களுக்குத்தான் அண்டார்

டிக் கண்டத்தில் ஆதிக்கம் செலுத்த உரிமையுண்டு, வேறு யாருக்கும் இல்லை என்று அறைகூவின.

இந்தச் சிக்கலான நிலை ஒரு வழியிலும் தீரவில்லை. புத்தருக்கு ஞானம் உதயமானதைப் போன்று திடீரென்று ஒரு ஞானம் உதயமாயிற்று அமெரிக்காவுக்கு. அது தான் எண்மர் கொண்ட பாதுகாப்பு ஸ்தாபனம் (eight-nation trusteeship). எட்டு வல்லரசுகள் கொண்ட பொதுஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தி 'அண்டார்டிக்' ஆட்சியை அந்த ஸ்தாபனத்தின் கீழ்க் கொண்டுவரும் ஏற்பாடு. (முதலில் குறிப்பிட்ட நாடுகள் தான் அந்த எட்டும்) அந்த எட்டில் சோவியத் ருஷியாவின் பெயர் காணப் படவில்லை!

ஆயினும் என்? பிரிட்டன் மட்டும் தான் அமெரிக்க ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ், நார்வே முதலிய நாடுகள் அத்திட்டத்தை ஏற்காத நிலையில் தனியுரிமை பாராட்டுகின்றன.

அஃது அவ்வாறிருக்க, 1949-இல் உலக நிலநூல் வல்லுநர் (Geographers) மகாநாடு ஒன்று லெனின் கிராடில் கூடிற்று. (ருஷியாவின் தலை சிறந்த நகரங்களில் ஒன்று லெனின் கிராட்) அப்பொழுது ருஷிய நிலநூல் நிபுணர்களும், துருவ ஆராய்ச்சியாளர்களும் (Polar Scientists) தங்கள் அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கை விடுத்தனர்.

"அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ள அண்டார்டிக் கண்டத்தைப் பற்றிய எண்மர் சபையில் சோவியத் ருஷியாவைச் சேர்க்காதது கண்டிக்கத் தக்கது. ஆயினும் முதன் முதலில் அக் கண்டத்தைக் கண்டுபிடித்தவர் ருஷியர்கள் தான். ஆகையினால் அந்நாட்டின் உரிமை முழுவதும் ருஷியாவுக்குத்தான் சொந்தம்" என்று அவ்வறிக்கை கூறியது.

இந்த அறிக்கைக்குப் பின்தான் சோவியத் ருஷியா விழித்துக்கொண்டது என்று கூறலாம். விழிப்பின் எதிரொலிதான் ஏழு வல்லரசுகளுக்கும் விடுத்த எச்சரிக்கை. 1820-இல் அண்டார்டிக் கண்டத்தைக் கண்டு பிடித்த இருவர்களும் எழுதிவைத்திருந்த பல குறிப்புக்களும் காசன் பல்கலைக் கழகத்திலிருந்து (Kazan University of Russia) தேடியெடுக்கப்பட்டன. அப்பல்கலைக் கழகமே சில முக்கியக் குறிப்புக்களைப் புத்தக உருவத்தில் வெளியிட்டது. இக் குறிப்புக்களி லிருந்து கிடைத்த சில ஆதாரங்களை வைத்துக்கொண்டு 'குயின் மாட் பகுதி' தனக்கே உரியதென்று ருஷியா வாதிடுகின்றது. அந்த எண்மரும் ருஷியாவின் வாதத்திற்கு எதிர்வாதமிட முனைந்துள்ளனர்.

இதற்கிடையில், நார்வே—பிரிட்டிஷ்—ஸ்வீடன் நாட்டு விஞ்ஞானிகள் அடங்கிய குழு ஒன்று அண்டார்டிக் கண்டத்திற்குச் சென்று (The Norwegian–British–Swedish Scientific expedition) பல ஆராய்ச்சி நிகழ்த்திற்று. அவ்வாராய்ச்சியின் முடிவாக அக்கண்டம் பொருளாதார விஞ்ஞான முக்கியத்துவம் உடையதென்று கருதப்படுகிறது. அவ்வாராய்ச்சிக் குப்பின் எதிர்வாதத்தை இன்னும் வலுப்படுத்துகின்றனர். வலுப்படுத்துவதுடன் நில்லாமல், அண்டார்டிக்கைப் பற்றித் தங்களுக்குள் ஏற்பட்டுள்ள கருத்துவேறுபாட்டினை ஒரு புறம் விட்டு, ஒன்றுசேர்ந்து சோவியத் ருஷியாவை எதிர்த்துப் போரிடுவதற்குரிய காரணங்கள் காட்ட முனைந்துள்ளனர்.

காரணங்கள்:

1. 1820-இல் ருஷியக் கப்பல் பிரயாணிகள் இருவர் தென்துருவத்திற்குச் சென்றனர் என்பது உறுதிப்படவில்லை.

2. சென்றிருந்தாலும், அவர்கள் அண்டார்டிக்கை ஒரு நிலப்பரப்பு என்று கருதவில்லை.

3. ருஷிய நாட்டுப் பிரயாணிகள் அண்டார்டிக்கைப் பற்றிக் குறிப்பிடும் செய்திகள் மற்றைய நாட்டினர் குறிப்பிடுவதில் காணப்படவில்லை.

4. ருஷியர் திமிங்கல வேட்டையின் பொருட்டு 1947-இல் தான் அக்கண்டத்தை அடைந்துள்ளனர்.

5. எட்வர்ட் பிரேன்ஸ்பீல்ட் (Edward Bransfield) என்ற ஆங்கிலேயர்தான் முதன்முதல் தென்துருவ நிலப்பகுதியைக் கண்டுபிடித்தவர்.

6. ரோல்டு அமென்சன் (Roold Amundseu) என்ற நார்வே நாட்டினர் 1911-இல் அக்கண்டத்தின் ஒரு பகுதியாகிய 'குயின் மாட்' நிலப்பரப்பைக் கண்டுபிடித்தார்; தன் நாட்டிற்கு அப்பகுதியைக் கைப்பற்றும் உரிமையையும் உண்டாக்கினர்.

7. லிங்கன் எல்ஸ்லர்த் (Lincoln Ellsworth) என்ற அமெரிக்கர் விமானத்தில் பறந்துசென்று, பத்திரங்கள் அடங்கிய செப்புக் குழாய் ஒன்றை அக் கண்டத்தில் போட்டதாகக் கூறப்படுகிறது. அவருக்குப் பின் சென்ற ரிச்சர்டு இ. பைர்ட் (Richard E. Byrd) என்ற மற்றொரு அமெரிக்கர் அக் கண்டம் முழுதும் சுற்றிப் பார்த்து வெற்றியோடு திரும்பினர். அதன் பயனாக அமெரிக்கா, அக் கண்டம் முழுதும் தங்களுக்கே உரியதென்று கூறுகின்றது.

ஆகவே சோவியத் ருஷியாவின் வாதமும் அதனை எதிர்க்கும் நாடுகளின் எதிர் வாதமும் ஒன்றை ஒன்று விழுங்கி வயிறுவெடித்து அழிவை ஏற்படுத்தும் அறிகுறிகள் என்று கருதுகின்றனர் உலகப் பெருமக்கள்.

தந்தை வெறுங்கையை மூடியிருந்தாலும் பக்கத்தில் விளையாடும் குழந்தைகள் சும்மா இருப்பதில்லை. அவர்களுக்கு ஒரு ஆவல் ஏற்படுகிறது அதில் என்ன இருக்கிறது என்பதை அறிய. அதற்காக அக் குழந்தைகள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு, சண்டையிட்டு, அடித்துப் பிடித்து அழுதுகொண்டு உடல்வலிமை முழுதும் காட்டிக் கையைத் திறப்பார்கள். பாவம், என் செய்வது! வெறுங்கை. வெறுங்கையைக் கண்டு, ஒருவரை ஒருவர் 'போடா வாடா' என்று உறுமுவர். முடிவில் தொல்லை அடைந்ததுதான் பயன்.

இந்த நிலையைத்தான் ஏற்படுத்துமோ பெரும்பயன் விளைக்காத அண்டார்டிக் கண்டம் என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

'கலைக்கதிர்'

ஆண்டுச் சந்தா ரூ. 6

கலையின் களஞ்சியம் சிந்தனைச் செல்வம்

ஒற்றர்

திரு. செ. பொன்னுசாமி, B. O. L.

கலிங்க நாட்டின் ஒரு பகுதியாகிய சிங்கபுரத்தை வசு என்பவனும் மற்றொரு பகுதியாகிய கபிலபுரத்தைக் குமரன் என்பவனும் ஆண்டுவந்தனர். இவர்கள் இருவரும் தாயாதிகளாயிருந்தும் தம்முள் ஒற்றுமை இன்றிப் பகைமை கொண்டு வாழ்ந்து வந்தனர். இவர்கள் பகைமை, முடிவில் பெரும் போரில் கொண்டு போய் விட்டது.

வீரர்கள் போர் செய்து தம் உயிரை இழந்துகொண்டிருக்கும் பொழுது போர்க் காலத்தைப் பயன்படுத்திப் பொருளைச் சேர்த்துக் கொண்டிருக்கும் மக்களும் இல்லாமலில்லை.

இதேபோலச் சிங்கபுரத்தரசனுக்கும் கபிலபுரத் தரசனுக்கும் போர் நடந்துகொண்டிருந்தபொழுது சங்கமன் என்னும் கபிலபுரத்தைச் சேர்ந்த வணிகன் ஒருவன் சிங்கபுரத்தவன்போன்று மாறு வேடம் பூண்டு அந்நகரில் வியாபாரம் செய்து பொருளீட்டினன்.

இதையறிந்த பரதன் என்னும் பெயருள்ள அவன் பகைவன் ஒருவன், இதுதான் தக்க சமயம் என்று, "சங்கமன் பகை யரசனின் ஒற்றன்" என்று தன் அரசனுக்கு அறிவித்தான். போர்க்காலம் ஆதலால் விசாரணை இன்றித் தூக்குத் தண்டனை கிடைத்தது சங்கமனுக்கு.

சிங்கா வண்புகழ்ச் சிங்கபுரத்தினோர்
அங்காடிப்பட்டு அருங்கலன் பகரும்
சங்கமன் என்னும் வாணிகன் தன்னை
ஒற்றன் இவனெனப் பற்றினன் கொண்டு
வெற்றி வேல் மன்னர்க்குக் காட்டிக்
(கொன்றனன்).

பிறர்நாட்டு ஒற்றர் என்றால் அதுவும் குறிப்பாகப் போர் நடக்கும் காலங்களில், மன்னர்கள் அவர்களை நஞ்சு உமிழும் பொருள் போல் கருதி ஈகை இரக்கமின்றிக் கொன்று விடுவர்.

இந்நிகழ்ச்சி அன்றும் உண்டு; இன்றும் உண்டு. அணுக்குண்டின் இரகசியத்தை வெளியிட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சில அறிஞர்கள் கொடுந் தண்டனைக்குட் பட்டதும் நாமறிந்ததே.

பகை நாட்டு ஆட்சியாளரால் நச்சுப்பொருள்போல் கருதப்படும் இவர்கள் தம் நாட்டினரால் கண்ணெனப் போற்றப்படுகின்றனர். வேற்றூர் தம் நாட்டைப் பற்றாமல் பாதுகாத்துக்கொள்ளப் படை வலிமை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இவ்வொற்றர்களின் தொண்டு. பகை நாட்டாரின் படை பலத்தையும் அவர்கள் வன்மையையும், போர் செய்யும் முறையையும், இன்னும் இவை போன்ற முக்கியமான பலவற்றையும் அறிவிப்பவர்கள் இவ்வொற்றர்கள் தானே! நமது பகைவருடைய வலிமையையும், நம்முடைய வலிமையையும், நமக்கும் பகைவர்க்கும் துணையாய் இருப்ப

வர்களுடைய வலிமையையும் அறிந்துகொள்ளாமல் சண்டைக்குச் செல்வது தோல்வியைத் தேடிப்பிடிப்பதுபோலாகுமல்லவா.

''வினைவலியும், தன்வலியும், மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்''

என்றார் வள்ளுவரும்.

நாட்டை நீதிவழுவாது ஆட்சி புரிவதற்கு மன்னவனுக்கு உற்ற துணையாய் இருப்பது முன்னோரிடமிருந்து வழிவழியாக வந்த அறிவியல் நூலன்றோ? இன்னின்ன முறையில் நாடு ஆளப்படவேண்டும், இன்னின்ன முறையில் நீதி வழங்கப்படவேண்டும் என்று கூறும் நூல் ஒவ்வொரு நாட்டிற்கும் உண்டல்லவா! இந்த நூலையும் ஒற்றர்களையும் ஒன்றாக வைத்து இவை இரண்டும் மன்னவன் கண் என்கிறார் வள்ளுவரும்.

''ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்''

என்று எண்ணவேண்டும்.

அரசனின் கண்ணெனக் கருதப்படும் ஒற்றர்களின் உதவி போர்க்காலங்களில் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாக வேண்டப்படுகின்றது சமாதான காலங்களிலும்.

நாட்டை அமைதியோடு ஆட்சி புரிவதற்கு மன்னன் பொதுமக்களின் மன நிலையையும் அறிந்துகொள்ளவேண்டியது இன்றியமையாததாகும். வெளியில் நல்லவர்கள் போல் நடித்துப் பொதுமக்களுக்கும் ஆட்சிக்கும் கேடுவிளைவிப்பவர்களை மன்னன் அறிந்துகொள்வது எப்படி? நாட்டில் நடப்பவற்றை உள்ளது உள்ளபடியே மன்னன் தெரிந்துகொள்ள உதவுகின்றவர்களும் இவ்வொற்றர்கள் தான்.

''எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்அறிதல் வேந்தன் தொழில்''.

என்றார் வள்ளுவர்.

மக்கள் தம் குறைகளை, மன்னனுக்கு எடுத்துக்கூறும் வரைக்கும் மன்னன் விட்டுக்கொண்டிருக்கக் கூடாது. தானே அவற்றை ஒற்றர்கள் மூலமாக விரைவில் அறிந்துகொள்ளவேண்டும் என்பதை ''வல் அறிதல் வேந்தன் தொழில்'' என்ற சொற்கள் விளக்குகின்றன.

ஒற்றர்களுக்கு இன்னொரு முக்கியமான வேலை. சிலருடைய நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டே இருக்கவேண்டும். கவனித்து அவற்றை அவ்வப்பொழுது மன்னனுக்கு அறிவிக்க வேண்டும். இந்தச் சிலர் யார்? மீண்டும் மீண்டும் குற்றம் புரியும் குற்றவாளிகளா? இவர்களைப் பற்றி வள்ளுவர் அதிகமாகக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அந்தச் சிலர் மன்னவன்கீழ் இருக்கும் ஆட்சிக்குப் பொறுப்புள்ள 'வினை செய்வார்' ஆவர். அவராவார் அரசியல் அலுவலாளரும் மன்னனுடைய சுற்றத்தாரும், மன்னனை விரும்பாதாரும் என்ற இந்த மூன்று வகையினர். இவர்களால் மக்களுக்குத் தீங்கு நேரக்கூடும் என்பது வள்ளுவர் கருத்து.

நாட்டின் 'கண்' என்று போற்றப்படும் இவ்வொற்றர்கள் எப்படி இருப்பார்கள்? தனி உடை உடுத்திக்கொண்டிருப்பார்களா? பார்த்தவர்கள் தன்னை ஒற்றன் என்று சிறிதும் ஐயப்பட முடியாதபடி ஒவ்வொரு ஒற்றனும் நடந்துகொள்ள வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் தங்கள் தொழிலைச் சரிவர நடத்தமுடியும். அவர்கள் எந்த உருவத்திலும் இருப்பார்கள். சில சமயங்களில் பிச்சைக்காரர்களைப் போலக்கூட நடித்தாக வேண்டும். எவ்வளவு கடினமான வேலை! முன்காலங்களில் பிறர் ஐயுறாமல் இருக்கும்பொருட்டு

இவர்கள் வியாபாரிகளைப் போலவும், துறவிகளைப் போலவும் வேடம் தரித்துக்கொள்வார்கள். சில சமயங்களில் உண்மைப் புலவர்கள்கூட ஒற்றர்கள் என்று அரசர்களால் சந்தேகிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய நிகழ்ச்சி ஒன்று புறநானூற்றில் காணப்படுகிறது.

நெடுங்கிள்ளியும், நலங்கிள்ளியும் சோழ அரசர்கள்; பங்காளிகளும் ஆவர். எல்லாப் பங்காளிகளும் எக்காரணத்தால் பகைவர் ஆவார்களோ, அதே காரணத்தால் அவர்களும் பகைவராயினர். இந் நிலையில் நலங்கிள்ளியின் அவைக்களப் புலவர் இளந்தத்தனார் நெடுங்கிள்ளியிடம் பரிசு பெறச் சென்றார். வந்தது ஆபத்து. புலவர் ஒற்றுக்காக வந்திருக்கிறார் என்று ஐயப்பட்டு நெடுங்கிள்ளி அவருக்கு மரண தண்டனை இட்டான். கோவூர்கிழார் என்னும் வேறொரு புலவர் அவரைக் காப்பாற்றவேண்டியதாயிற்று. ஓடோடியும் வந்தார் நெடுங்கிள்ளியிடம். அவனைப் பார்த்து, "அரசே, வள்ளல்களை நாடிச் சென்று, அவர்களை வாயார வாழ்த்தி, அவர்கள் கொடுக்கும் பொருளைச் சிக்கனமாக வைத்திருக்காமல் துன்பப்படுகின்ற யாவர்க்கும் கொடுத்து, தாமும் உண்டு வாழும் வாழ்க்கையையுடையவர்கள் புலவர்கள். அன்றிப் 'பிறர்க்குத் தீதறிந்தன்றோ இன்றே' – பிறர்க்குத் தீமையைச் செய்து அறியாதவர்கள். ஆனால்,

> "நன்னர் நாண அன்னாந்து ஏகி
> ஆங்கினிது ஒழுகின் அல்லது, ஓங்கு புகழ்
> மன்னர் செல்வம் எய்திய
> நும்மோரன்ன செம்மலும் உடைத்தே."

தங்களிடம் விவாதத்தில் தோற்பவர் நாணும்படி பெருமிதம் தோன்றச் செல்வர். மிக்க புகழோடு நாட்டையாளும் அரசன் போன்ற தகுதியும் உடையோராவர். ஆகையால் "இளந்தத்தனார் ஒற்றராக வந்தவர் அல்லர்" என்று கூறி விடுவித்தார்.

இப்புலவரைச் சந்தேகித்தது போல உண்மை ஒற்றர்கள் சந்தேகிக்கப்பட்டுக் கண்டுபிடிக்கப்பட்டால் இவர்களுக்கு ஏற்படும் துன்பம் எதுவாயினும் "கண்ணாஞ் சாது யாண்டும் உகா அமைவல்லதே ஒற்று." அதற்கு அஞ்சி இரகசியத்தை வெளிப்படுத்தாமலிருப்பவர்களே ஒற்றராம்! அப்பாடா! என்ன மன உறுதி வேண்டும்!

தன்னிடத்திலே உள்ள இரகசியத்தைத் தனக்கு என்ன நேர்ந்தாலும் வெளிப்படுத்தாமலிருக்கும் சக்தியோடு, இந்த ஒற்றுக்குப் பிறர் மறைத்து வைத்திருப்பதை அறிந்துகொள்ளும் ஆற்றலும் வேண்டுமாம்! தான் அறிந்தவற்றை ஐயம் திரிபு அற மன்னனுக்கு எடுத்துக் கூறும் திறனும் வேண்டுமாம்.

> "மறைந்தவை கேட்கவற் றாகி, அறிந்தவை
> ஐயப்பா டில்லதே ஒற்று."

இப்படிப்பட்ட தொழிலை யார் மேற்கொள்வார்கள்? என்றும் மறைந்து வாழவேண்டும்; என்றும் ஆபத்து; ஆபத்துக்கும் அஞ்சாமல் இருக்கவேண்டும்; சித்திரவதை செய்தாலும் உள்ளதைத் தன் மன்னனுக்கு அன்றி வேறெவர்க்கும் வெளிப்படுத்தக் கூடாது. தன் இரகசியத்தை மறைத்து, பிறர் இரகசியத்தை அறிந்து, அதை விளக்கிக் கூறும் ஆற்றல் வேண்டும். அறிவும், ஆற்றலும், அஞ்சா நெஞ்சமும் படைத்த இவர்களுக்குக் கிடைப்பதுதான் என்ன? இவர்களுக்குக் கிடைக்கும் எதுவும் இவர்கள் தொண்டிற்கு ஈடா

காது. தம் நாட்டின் நலனையே தம் நலனாகக் கருதும் உணர்ச்சி பெற்ற வீரர்களே இத்தகைய தொண்டிற்குத் தகுதியுடையவர்களாவர். இத்தகையவர்களை நாட்டின் "கண்" என்று வள்ளுவர் குறிப்பிட்டது மிகையன்று.

ஒற்று என்ற சொல்லுக்கு "உளவு" அல்லது "உளவு அறிபவன்" என்பன பொருளாகும். அதாவது பிறர் இரகசியத்தை அவர் அறியாவண்ணம் அறிந்து கொள்பவன்; வேவுகாரன் என்பதாகும்.

ஒற்றர்கள் எந்தக் காலத்தும் இருந்திருக்கிறார்கள். எல்லா நாட்டிலும் உண்டு. தமிழ் இலக்கியத்திலுள்ள இரண்டொரு ஒற்றர்களை இனிப் பார்ப்போம்.

கண்ணகியின் பெருமையுணர்ந்த மலைநாட்டு மன்னனாகிய சேரன் செங்குட்டுவன் அக் கற்புத் தெய்வத்திற்குக் கல்லமைக்க வேண்டுமென்றும், அக்கல்லைக் கொண்டு வருவதற்குத் தானே இமயமலை செல்வதாகவும் அறிவிக்கின்றான். இவன் முன்னர் வென்ற வட நாட்டு மன்னர்கள் இச் செய்தியை அறியவேண்டாமா? அழும்பில் வேள் என்னும் அமைச்சன் 'இச் செய்தியை நம் நாட்டில் உறையும் அம் மன்னர்களது ஒற்றர்களே அறிவித்துவிடுவர்—

நாவலந் தண்பொழில் நண்ணார் ஒற்றுநம்
காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா
வம்பணி யானை வேந்தர் ஒற்றே
நம் செவிப் படுக்கும்—.

என்று கூறுகின்றான். ஒவ்வொரு நாட்டிலும் பிற நாட்டு ஒற்றர்கள் மறைந்து வாழ்ந்து வந்தனர் என்பதற்கு இது ஒரு தக்க சான்றாகும்.

பிரச்சோதனன் என்னும் அவந்தி நாட்டு மன்னன் வத்தவ நாட்டு மன்னனாகிய உதயணனை வஞ்சகமாகச் சிறைப்படுத்தி விட்டான். வைசாலி நாட்டரசன் 'யூகியும்' உதயணனும் நெருங்கிய நண்பர்கள். ஆதலால் உதயணனை எப்படியேனும் சிறையினின்றும் மீட்டு விட வேண்டும் என்று அதற்குரிய திட்டமொன்றைத் தயாரித்தான். அதற்காக யூகி செய்த தொண்டு கொஞ்சமன்று. பிரச்சோதனனைப் போரில் வெல்ல முடியாதாதலால் தந்திரத்தாலேயே வெல்லக் கருதித் தானே ஒற்றனாக மாறினான். யூகி இறந்து விட்டதாகத் தன் நாட்டு மக்கள் நம்பும்படியாகச் செய்துவிட்டு இன்னும் பல ஒற்றர்களோடு அவந்திநாடு சென்றான்.

பைத்தியக்காரனைப்போல் நடித்து உதயணன் சிறைப்பட்டிருக்கும் இடத்தை ஒற்றர்களால் அறிந்து அவனிருக்கும் இடத்தருகே அணுகித் தனக்கும் அவனுக்குமே தெரிந்த பாட்டொன்றைப் பாட, உதயணன் தன் நண்பன் வந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்து தன் வேய்ங்குழலால் தானிருப்பதை அறிவித்தான். பைத்தியக்காரன் பலவாறு பிதற்றிக்கொண்டிருந்தான். உதயணன் சிறைக் காவலாளிகளின் உத்தரவின்மேல் பைத்தியக்காரனைப் பார்ப்பது போல் அவன் பிதற்றலைக் கேட்டுக் கொண்டிருந்தான். இருவரும் தம் தம் சைகைகள் மூலம் தாம் விரும்புவதை அறிவித்துக்கொண்டனர்.

பின்னர் யூகி ஒரு நாள் நடு இரவில் அந் நாட்டுப் பட்டத்து யானைக்கு அகிற் புகையை ஊட்டி மதம் பிடிக்கச் செய்தான். இதைக் கண்டு மனம் மிகவும்

வருந்திய பிரச்சோதனன் மத யானையை அடக்க வல்லவன் உதயணன் என்பதை அறிந்து யானையை அடக்க உதயணனை விடுவித்தான். இக் கதை பெருங்கதை என்னும் பழந்தமிழ் நூலில் உள்ளது. இக் கதையைக் குறிக்கும் சில அடிகளை இப்பொழுது பார்ப்போம்.

வெஞ்சின வேந்தனை விடுத்தல்வேண்டி
வஞ்ச இறுதி நெஞ்சுணத் தேற்றி
உஞ்சையம் பெரும்பதி ஒலிக்களம் புக்கு.
மெய்ப்பேய்ப் படிவமொடு பொய்ப்பே யாகிப்
பல்லுயிர் மடிந்த நள்ளென் யாமத்துக்
கூற்றுறழ் வேடம் குனம் சிதைந்து அழியச்
சீற்ற வெம்புகை செருக்க ஊட்டிக்
கலக்கினள்............

ஒற்றர்களைப் பற்றிய செய்தியைத் தமிழ் நூல்களில் இன்னும் நிறையக் காணலாம். அவர்களுடைய தொண்டு நாட்டிற்கு எவ்வளவு தேவை என்பதும், அத் தொண்டு எவ்வளவு கடினமானதென்பதும் மேற்கூறிய நிகழ்ச்சிகளால் விளங்குகின்றன.

இவ்வொற்றர்களுக்கு அவர்கள் செய்த தொண்டிற்காகப் பலரும் அறியச் சிறப்புச் செய்யக்கூடாது; யாவரும் அறியப் பரிசு வழங்கக் கூடாது; அதுவும் இரகசியமாகவே இருக்கவேண்டுமாம்.

இருக்குமிடம் தெரியாமல் பெயரும் புகழுமின்றி, ஆடம்பரமின்றி வாழவேண்டிய இத்தகையோர் இல்லாமலே மக்கள் இனம் இருக்க முடியாதா? அன்பும், அறனும், பண்பும் மிகுந்திருந்தாலல்லவா அது முடியும்!

•••o(ஓ)o•••

'புண்ணிய'வான்

கடைவீதியில் மார்வாரி ஒருவர் வெள்ளிக்கிழமைதோறும் பசுக்களுக்கு அகத்திக் கீரை தானம் செய்து 'புண்ணியம்' சேர்த்து வந்தார். அவருக்கு வாடிக்கையாக வயதான அம்மா ஒருத்தி வாரந்தோறும் அகத்திக் கீரை ஒரு கட்டுக் கொண்டுவந்து போடுவாள்; எட்டணுக் கிடைக்கும்.

ஒரு வெள்ளிக்கிழமை அந்த அம்மா வரும்போது மார்வாரி வீட்டுக்கு எதிரே ஒரு நோஞ்சான் கன்றுக்குட்டியைப் பார்த்தாள். ஒரு இணுக்கு அகத்திக் கீரையை அந்தக் கன்றுக்குப் போட்டாள்.

மார்வாரி அன்று காசு கொடுக்கும்போது ஏழே முக்காலணுத்தான் கொடுத்தார். அந்த அம்மா 'காலணுக் காசைக் குறைத்துவிட்டீர்களே?' என்று பணிவாய்க் கேட்டாள்.

ஒரு கனைப்புக் கனைத்துவிட்டு மார்வாரி சொன்னர்: அந்தக் கன்றுக்குட்டிக்குக் கீரை போட்டதை நான் பார்த்துக்கொண்டுதானே இருந்தேன். எட்டணுப் புண்ணியத்திலே இன்றைக்கு எனக்கு ஏழே முக்காலணுப் புண்ணியந்தானே கிடைக்கும்? உனக்குக் காசோடு காலணுப் புண்ணியமும் கிடைத்துவிட்டதே!"

இந்த அறவிலே வாணிகத்தின் தத்துவத்தைப் புரிந்துகொள்ள முடியாமல், 'காலணுக் குறைந்துவிட்டதே' என்ற துயரத்தைச் சுமந்துகொண்டே அந்த அம்மா வெளியேறினள். — மனமணி

சிறு கதை

திரு. அ. ச. ஞானசம்பந்தம், M. A.

தமிழ் மொழி ஏனைய துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளதா என்பது ஐயத்திற்கு இடமான ஒன்றாயினும் ஒரு துறையில் அது முன்னேற்றம் பெற்றுள்ளது. அதுவே சிறுகதைப் பகுதியாகும். ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுள் சிறுகதைகள் தமிழ் நாட்டில் மலைபோலக் குவிந்துவிட்டன. அவை அனைத்தும் சிறந்தவை என்று கூறுவதற்கில்லை என்றாலும் அதற்கு முன்னர் அதிகம் காணப்பெறாத இப்பகுதி இந்நாளில் மிகுந்துளது வரவேற்றற் குரியதே. இதன் காரணங்கள் பலவாகும். நாட்டில் பத்திரிகைகள் மிகுந்தன. மனித மனம் என்றுமே கதையில் ஈடுபடும் இயல்பு வாய்ந்தது. எனவே, பத்திரிகைகள் இப்பகுதியை வளர்த்தால் ஒழிய மக்கள் மனத்தைக் கவர முடியாதென்ற உண்மையை விரைவில் உணரலாயின. மாத இதழ்களும், வார இதழ்களும் காளான்போலத் தோன்ற ஆரம்பித்த நாளில் கதை ஒன்றே பத்திரிகைகள் வாழ வழி செய்தது. பெரும்பாலான இதழ்கள் எக்கருத்துடன் தோன்றின? மக்கள் அறிவை வளர்க்கவும், கலையை வாழ்விக்கவுமா அவை முகிழ்த்தன? ஆம் என்று விடை கூறினால் அது பொய்! இல்லை என்று விடை கூறினால் பலரின் வெறுப்புக்கும் தூற்றலுக்கும் ஆளாக நேரிடும். கதையின் உதவி இன்றித் தமிழ் நாட்டில் ஒரு மாத இதழோ, வார இதழோ வாழுமா என்று கேட்டால் விடை இறுப்பது கடினம். 'கலா நிலையம்' 'தமிழ்ப் பொழில்' போன்ற இதழ்களின் நிழல்கள் நம் மனக்கண்முன் தோன்றி மறைகின்றன. திரு. சேஷாசலம் அவர்களின் ஒப்பற்ற உறுதியால் 'கலா நிலையம்' வாழ்ந்தது. ஒரு சிலரின் முயற்சியாலும், உறுதியாலும் 'கலைக்கதிர்' வாழ்கிறது. ஆனால், தமிழ் மக்கள் மன நிலையும், கலை ஆர்வமும் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது? தமிழ் நாட்டில் செலவாகும் வார, மாத இதழ்களில் அதிகம் செலவாகும் இதழை எடுத்துக்கொண்டு அவற்றில் வெளிவரும் கதைகளைப் பார்த்தால் உண்மை விளங்கும். 'வாசமில்லாப் புஷ்பத்தை மதிப்பாரில்லை' என்று பாடுபவர்கள் உள்ள இந்நாட்டில் எந்தப் பூ அதிகம் செலவாகிறது. என்று தெரியுமா? மணம் என்பதைக் கனவிலும் அறியாத கனகாம்பரப் பூத்தான். அதேபோலக் 'கலையை வளர்ப்போம்', 'கலை வளர்கிறது தமிழ் நாட்டில்' என்ற கூக்குரல் காதைப் பிளக்கிறது. ஆனால், ஒரு மாதம் முற்றிலும் தோன்றும் எழுத்துக்களில் ஒன்று இரண்டு தவிர ஏனையவை அடுத்தமாத இதழ்வரை உயிருடன் இருக்கின்றனவா என்று கண்டால் உண்மை விளங்கும். உயிருடன் இருக்கும் பொருள்களே தம் இதழில் வரவேண்டும் என்று ஒரு இதழ் ஆசிரியர் முடிவு செய்வாரானால் அவருடைய இதழ் தேய்பிறை போலத்தான் 'வளர்ச்சி' யடையும். காரணம் என்ன? மக்கள் விருப்பம் உயிருள்ள கலையின்மேல் செல்வதில்லை. பொழுதுபோக்கு நடைபெறவே இதழ்களைப் படிக்கும் இயல்பு விஞ்சி இருக்கிறது. இதனால் தவறு ஒன்றுமில்லை. ஆனாலும் அத்தகைய பொழுதுபோக்கிலும்கூட அறிவு வளர்ச்சிக்கு வழி இருத்தல் வேண்டும்.

எங்குப் பார்த்தாலும் வாரஇதழும் மாத இதழும் காட்சி யளிப்பதைக் காண்கிறோம். அவற்றில் கதைகளே

உள்ளன. மேலோட்டமாகச் சில இதழ்களை எடுத்துக்கொண்டு அவற்றின் கதைகளைப் பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். பல சமயங்களில் ஒவ்வொரு கதையைப் படிக்கும் பொழுது இதை முன்னர் எங்கேயோ படித்திருக்கிறோம் என்ற எண்ணம் தோன்றும். முழுக்கதையிலும் தோன்றுவிட்டாலும் சில உயிர்ப் பகுதிகளிலாவது இவ் வெண்ணம் தோன்றுகிறது. இதிலிருந்து விளங்கும் உண்மை ஒன்றுதான். தமிழ் நாட்டுக் கதை எழுத்தாளர் பரந்த நோக்கத்துடன் தம்முடைய சொத்து இது, பிறருடையது இது என்று வேற்றுமை பாராட்டாமல் அனைத்தையும் பயன்படுத்துகின்றனர் என்பதே. காரணம், வாரம் ஒன்றுக்கு ஒரு கதை வீதம் 'உற்பத்தி' செய்ய வேண்டி இருப்பதே யாகும்.

இவை ஒருபுறம் இருக்க, தமிழ் நாட்டில் சில சிறந்த சிறுகதை ஆசிரியர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். காலஞ்சென்ற புதுமைப்பித்தன் கதைகளுள் சில சாவா இலக்கியத்தில் இடம் பெறுபவை. இன்றும் திரு. பி. எஸ். இராமையா, கி. வா. ஜகந்நாதன், மாயாவி, புரசு. பாலகிருஷ்ணன், 'ஜீவா', லா. ச. இராமாமிர்தம் போன்றவர்கள் சிறந்த கதைகளை எழுதுகின்றனர். இவருள்ளும் சிலர் அடிக்கடி எழுத வேண்டிய இன்றியமையாமை ஏற்படும்பொழுது சிறிது மட்டமான கதைகளை எழுதுகின்றனர்.

சிறுகதைகள் பற்றிய சில கருத்துக்களைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம். புதினங்களில் வரும் பாத்திரங்கட்கும், சிறு கதைகளில் தோன்றும் பாத்திரங்கட்கும் வேறுபாடு நிரம்ப உண்டு. புதினத்தில் வரும் பாத்திரங்களுடன் நாம் அதிகம் பழக முடிகிறது. புதினத்தின் நீட்சி காரணமாக ஒரு பாத்திரத்தின் வளர்ச்சி முழுவதையும் நாம் அறிய முடிகிறது. முழு வளர்ச்சி பெற்ற அப்பாத்திரங்கள் நம் மனத்தில் அப்படியே தங்கியும் விடுகின்றன. முழுத் தன்மை பெற்ற இப்பாத்திரங்கள் உயிருள்ளவர்கள்போல் நம்மால் என்றும் நினைவில் இருத்தக்கூடிய தன்மையும் தகுதியும் வாய்ந்தவை. வாழ்க்கையிலும் ஒருவருடன் நீண்ட காலம் பழகினால்தானே அவர்களை நினைவில்கொள்ள முடிகிறது? ஏதோ ரயிலில் ஒருவரைப் பார்த்துப் பொழுதுபோக்குக்காக அவருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு, நம் ஊருக்கு வந்தால் நம்மைத் தவறாமல் வந்து காணுமாறு பன்முறை அவரிடம் கூறிவிட்டுத்தான் வருகிறோம். என்றாலும் அவர் ஒரு மாதம் கழித்து நம்மைச் சந்தித்தால், 'யார்' என்றுதான் கேட்போம். காரணம் அவருடைய பழக்கம் நிலையான ஒரு நினைவை நம்மிடம் உண்டாக்க வில்லை. ஆனால், அதே மனிதரிடம் ஒரு ஆண்டு பழகி இருப்பின் அவ்வளவு விரைவில் மறத்தல் இயலாது. ஆனால், சிறு நேரச் சந்திப்பாக இருப்பினும் அச் சந்திப்பில் ஏதேனும் சிறந்த நிகழ்ச்சி நடைபெற்றிருப்பின் நாம் அவரை மறக்க மாட்டோம். அல்லது நாம் பெரிதும் விரும்பி மதிக்கும் ஒரு பண்பு அவரிடம் இருந்து, அதை அச் சிறு நேரத்தில் நாம் காண நேரிட்டிருந்தால் அப்பொழுதும் அவரை நாம் மறக்க மாட்டோம். இதே நிலைதான் சிறு கதைப் பாத்திரங்கட்கும் ஏற்படுகிறது. நீண்டநாள் பழகியவரை மறவாதது போலவே புதினத்தின் பாத்திரங்கள் மனத்தில் தங்கிவிடும். ஆனால், சிறு கதைப் பாத்திரங்கள் இதனினும் மாறுபட்ட நிலையுடையவை. எனவே, ஒரு சிறு கதை நம் மனத்தில் தங்க வேண்டுமாயின் இரண்டே வழிகள் தான் உண்டு. முற்கூறியபடி அதில் ஒப்பற்ற ஒரு நிகழ்ச்சி நடைபெறல் வேண்டும்; இன்றேல் அதில் வரும் பாத்திரம் நாம் மதித்து விரும்பும் ஒப்பற்ற பண்பு ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இந் நிலையில் சிறு கதையில் நிகழ்ச்சி அமைப்பது பற்றி ஒரு வார்த்தை கூறவேண்டும். புதினம் ஒரு பெரிய திரையில் தீட்டப்பெற்ற ஓவியம் போன்றது. அதில் மலை, அருவி, காடு, விலங்குகள், மக்கள் என்ற பல பொருள்கள் இருக்கலாம். ஆனால், ஓவியத்திறனுப்வாளன் ஓவியத்தின் சிறப்பை ஆராய்கையில் தூர இருந்து அதனைப் பார்த்துவிட்டு அதனுடன் அமைவதில்லை. பக்கத்தில் வந்து ஓவியத்தின் ஒரு சிறு பகுதியைமட்டும் பார்த்து ஆராய்கிறான். அச் சிறு பகுதியே பெருஞ் சித்திரமாக அமைக்கப் பெறுதலும் உண்டு. இங்ஙனம் சிறு பகுதி பெரிதாக அமைக்கப் பெறுகையில் மிகவும் கவனத்துடன் அமைக்கப்பட்டால் அன்றி அது சிறப்பிழந்துவிடும். முழு ஓவியத்தில் அழகுடன் காணப்பெற்ற அதே பகுதி தனிப்படக் காணப்பட்டால் அழகிழந்தும் போகலாம். அதேபோல் ஒரு நிகழ்ச்சி புதினத்தில் சிறப்படையலாம். ஆனால், சிறு கதையில் அது வெறுப்பை விளைக்கலாம். இவ்வுண்மையை நன்கு மனத்தில் பதித்துக்கொண்டு சிறு கதைகள் எழுதப்படல் நன்று. ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சி சிறு கதையில் இருக்கக்கூடாது என்பதன்று. ஆனால், இரண்டு நிகழ்ச்சிகள் இருப்பின் அவற்றின் தொடர்பு நன்கு அமைக்கப்படல் வேண்டும். படிப்பவர் கவனம் இரண்டிலும் பட்டுத் தெறித்துவிடாத படி நிகழ்ச்சிகள் அமைக்கப்படல் சிறந்த முறை. நிகழ்ச்சிகள் அதிகப்படினும் ஒரு நடு நிகழ்ச்சி இருக்க, அதன் கிளைகளாக ஏனையவை அமைதல் நன்று. சிறு கதையும் கவிதையும் ஏறத்தாழ ஒத்த பண்புடையவை என்றுகூடக் கூறலாம். ஆழமான உணர்ச்சியை வெளியிடுவதிலும் அதையும் சுருங்கச் சொல்லிப் பதிய வைப்பதிலும் சிறு கதை கவிதையை அடுத்து நிற்கிறது.

சிறு கதைகளில் காணப்பெறும் நிகழ்ச்சி அன்றாடம் நாம் காணும் ஒன்றாகவே இருக்கலாம். ஆனால், வாழ்க்கைச் சுழலில்பட்டுக் 'கருமமே கண்ணாயினர்' என்று திரியும் நமக்கு அது பெரிதாகப் படுவதில்லை. ஆனால், தக்க சூழ்நிலையில் அதே நிகழ்ச்சி சிறு கதையில் இடம்பெறின் நம்மைக் கவர்ந்துவிடுகிறது. இந் நிகழ்ச்சி தேர்ந்தெடுக்கப் பெறுகையில் ஒன்றிரண்டு கவனிக்கப்படல் வேண்டும். சிறு கதை எல்லைக்குள் அடங்கும், நிகழ்ச்சி வேண்டும். அந் நிகழ்ச்சியும் பூர்ணமாக அமைய வேண்டும். இனி அது வளர்க்கப்பட இயலாது; மேலும் வளர்த்துச் சென்றால் பயன் ஒன்றுமில்லை என்று கூறத் தக்க நிலையில் அது முழுசாக அமைந்திருத்தல் வேண்டும். இம் முழுத் தன்மை கதையின் எல்லைக்குள் அமைந்துவிட்டால் அன்றிச் சிறப்பில்லை; 'மீதியை எமது வெள்ளித் திரையில் காண்க' என்பதுபோல அடுத்த கதையில் விவரிக்கப்படும் என்று கூறுதல் தவறு. இறுதியில் முழுத் தன்மையும், ஒவ்வொரு பகுதியும் தம்முள் அளவொத்து இருக்கும் இயல்பும் நம் மனத்தில் நன்கு பதிய வேண்டும். ஒரு நாளில் நடந்த நிகழ்ச்சியும், ஒரு வாழ்நாளில் நடந்த நிகழ்ச்சியும்- இரண்டும் சிறு கதையில் இடம் பெறலாம். ஆனால், ஒரு நாள் நிகழ்ச்சி கூறும் கதை தொய்ந்தும், ஒரு வாழ் நாள் கூறும் கதை அளவு மீறிய கூட்ட நிகழ்ச்சி யுடையதாகவும் இருத்தல் கூடாது.

இற்றைநாள் 'சிறு' கதை ஆசிரியர்கள் நிகழ்ச்சிகளை நிறைத்துவிட்டால் கதை அமைந்துவிட்டதாக நினைக்கின்றனர். கதை உயிர் பெறுவது நிகழ்ச்சிகளால் அன்று! அன்ற!! அவற்றைக் கூறும் ஆசிரியன் பயன்படுத்தும் கற்பனைத் திறமும் கூறுந் திறமுமே கதைக்கு உயிர் தருகின்றன. அவன் பொறுக்கிய நிகழ்ச்சிகள் கூறப்படும் முறையில் இருந்தே கதையின் உயர்

வும், தாழ்வும் விளங்கும். நிகழ்ச்சிகள் கொண்ட கதைகள் முடிவைக் கூறியே தீரல்வேண்டும் என்ற இன்றியமை யாமை இல்லை. 'சுபம்' 'மங்களம்' போட்டுக் கதை எழுதிய காலம் நல்ல வேளையாக முடிந்துவிட்டது. ஆனால், கதையிலிருந்து அறியவேண்டியதை ஓரளவு சுருக்கி ஒரு பாத்திரத்தின் கூற்ருகக் கூறும் பழக்கம் இன்னுஞ் சிலரிடமிருந்து வருகிறது. அதுவும் நீங்கிவிடவேண்டும். திருடன் ஒருவனைப்பற்றிய கதையானல் 'திருடன் தண்டிக்கப்பட்டான்' என்று முடிக்க வேண்டியதில்லை. திருடுதல் கெட்டது என்று கூறவேண்டிய வேலை கதைக்கு அன்று.

இதனை அடுத்து உள்ள கதைகள் உணர்ச்சிக் கதைகள். அதாவது நிகழ்ச்சிக்கு முதலிடம் தாராமல் மனித மனத்தைப் படம் பிடித்துக் காட்டச் சிறுகதையைப் பயன்படுத்தும் முறை. தமிழ்நாட்டுச் சிறு கதைகளில் இம் முறை பற்றிய கதைகள் அதிகம் இல்லை. புதுமைப் பித்தன் கதைகளில் மிகச் சில இவ்வகையில் சேரும். ஏதோ ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதன் பயனுக விளைந்த எண்ணங்களைக் கூறுதலே இவ் வகைக் கதை. பல்வேறுபட்ட மனிதப் பண்புகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு ஆராய்வதாகும் இது. அழகாகத் தோன்றும் ஓர் உடம்பைக் கிழித்து 'தோல், எலும்பு, சீழ், நரம்பு, பீழை, துன்று சோரி பிண்டமாய், உருண்டு வடிவான, இதன் தன்மையைப் பார்' என்று விஞ்ஞானி காட்டுதல்போல் ஒருவனுடைய புறச் செயல் ஒன்றிரண்டுகொண்டு அவன் அக மனத்தைத் தொட்டுக் காட்டும் இவ் வகைக் கதைகள்.

இவ்விரண்டு பெரும் பிரிவினுள் எத்தனையோ சிறு பிரிவுகள் உண்டு. அவை அனைத்திலும் கதைகள் தோன்றி உள்ளன. சிறு கதை நம் காலத்தில் தோன்றி வளரும் ஓர் இலக்கியப் பகுதி யாகும். கவிதை இன்றைய நிலையில் நன்கு சிறக்க வில்லை. காரணம் பல. கவிஞன் மனம் நன்கு தொழிற் படுவதற் குரிய சூழ்நிலை இன்று இல்லை. ஒரு சில கவிஞர் அரசியற் குப்பையிலும்கூட விழுந்து புரளத் தொடங்கிவிட்டனர். பின்னர் கவிதை உருப்பட்டால் போலத்தான்! ஆனல், சிறு கதைக்கு இத்தகைய பேராபத்துக்கள் ஒன்றும் இல்லை. நல்ல வேளையாகப் பிரசாரம் செய்வதற்குக் கதைகளை யாரும் இன்னும் அவ்வளவாகப் பயன்படுத்தவில்லை. படக் காட்சியைக் கட்சிப் பிரசாரம் செய்யும் அரங்கமாக ஆக்கிய அறிஞர்கள்கூட இதற்கு இன்னும் துணியவில்லை. தமிழ்நாட்டுச் சிறு கதை மெள்ளக் கலைத் தன்மை பெற்றுச் சாவா இலக்கியத்தில் இடம் பெற முந்துகிறது. 'எட்கார் ஆலன் போ' என்ற சிறந்த சிறுகதை ஆசிரியர் கூறிய ஒரு பகுதி என்றும் நினைவில் இருத்தற் குரியது. 'சிறு கதையின் முதல் வாக்கியம் படிப்பவன் கவனத்தை இழுத்துப்பிடிக்க இல்லையாயின் அக் கதை பயனற்றது. பயனற்ற ஒரு சொல்லுங்கூடக் கதையில் இடம் பெறுதல் கூடாது!' அவர் கூறிய இம் முறையில் கதைகள் அமையவேண்டும்.

சிறு கதையின் நிலைக்களன் எதுவாக வேண்டுமானலும் இருக்கலாம். உலகப் பொருள்கள் அனைத்தும் ஏற்றவை தாம். இறுதியாக 'ராபர்ட் லூயி ஸ்டீவன்சன்' என்பாருடைய சொற்களுடன் இதனை முடிக்கலாம். "நான் அறிந்தவரை மூன்று வகைகளில்தான் நான் கதை எழுதுகிறேன். முதலாவது, நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு அதற்கேற்ற பாத்திரம் முதலியன அமைத்தல்; இரண்டாவது, பாத்திரங்களைக்கொண்டு நிகழ்ச்சி அமைத்தல்; மூன்ருவது, சூழ்நிலையைக்கொண்டு ஏனையவற்றை அமைத்தல்." இம் முறை கைபாளப்படின் தமிழ்ச் சிறு கதைகள் நலனடையும்.

நூல் அரங்கு

திரு அருள் மொழி: வெளியிட்டோர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 3—8—0.

வாணிகத்துக்கே நூல்கள் வெளியிடுவது பொதுவான வழக்கம். இத்தகைய 'பண' விவகார உலகிலே ஆன்மத் துறை விளக்கும் சிறந்த நூல்களை வெளியிட்டுச் சமயப் பணியை நன்கு ஆற்றிவரும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயத்தாருக்கு மக்கள் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறார்கள். நம் மதிப்புரைக்கு வந்துள்ள இந்நூல் மூன்று பகுதிகளை உடையது. பக்தி இயக்கத்தின் வரலாறும் தத்துவமும் விளக்கும் முதற்பகுதியை எல்லோரும் ஆழ்ந்த சிந்தனையோடு படித்துப் பயன் பெறலாம். அருமையான கட்டுரை; எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். இரண்டாவதாகத் தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் ஆகிய புகழ்நூல்களிலிருந்து அருமையான பாடல்கள் நூற்றுக்கணக்கில் தொகுத்துள்ளார்கள். பொருள் விளக்கமும் உள்ளது; யாவரும் புரிந்துகொள்ளக் கூடிய நல்ல உரை. மூன்றாவது பகுதியில் சைவ, வைணவத் திருநூல்களிலிருந்தே தொகுத்த திருப்பெயர்களை அமைத்துத் தமிழிலே சிவ விஷ்ணு சகஸ்ர நாமங்கள் காணப்படுகின்றன. தமிழில் வழிபாடு செய்யச் சிறந்த முறையில் பயன்படத் தக்கவை. கடவுள் நம்பிக்கை அற்றவர்கள்கூடக் கட்டாயம் படிக்கவேண்டிய நூல் இது என்று சுருக்கமாகச் சொல்லலாம். தமிழகத்தின் சைவ, வைணவ மடாலயங்கள் இத்திருப்பணியைக் கவனிக்கவேண்டும்.

ஸ்வர்ணா பிரசுரங்கள்: (1) சன்னிகா: திரு. ரகுநாதன் எழுதியது. (2) வைஜயந்தியின் காதல்: "சித்ரா" எழுதியது. (3) டாக்டரா விபசாரியா: "ஸரசாங்கி" எழுதியது.—ஒவ்வொன்றுக்கும் விலை 12 அணா. — கிடைக்கும் இடம்: சக்தி காரியாலயம், இராயப்பேட்டை, சென்னை: 14.

ஆங்கிலத்தில் பிரயாணங்களின் போது படிப்பதற்காக என்றே மலிவான விலையில் நாவல்கள் வெளிவருகின்றன. அவற்றைப் போன்ற கதைகளை வெளியிடுவதற்கென்றே 'ஸ்வர்ணா' கிளம்பியிருக்கிறது போலும்.

(1) கன்னிகா—நல்ல கதை. மனவியல் நோக்கோடு பார்த்தால் ஒரு பெண்ணின் உள்ளத்து வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டும் ஆசிரியரின் திறமை மிக மெச்சத் தக்கது. நடையும் சிறப்புடையது. ஆனால், ஆசிரியர் கூறுவதுபோல இது நாவலாக நமக்குத் தோன்றவில்லை; அழகான நீண்ட சிறு கதைதான் இது.

(2) வைஜயந்தியின் காதல் கல்லூரி இளைஞரிடையே தொடங்கிப் பட்டணத்துப் பகட்டு வாழ்வின் திரைக்குப் பின்னால் உள்ள 'சாக்கடை'

யைப் படம் பிடிக்க முனையும் தப்பறி யும் நாவல். கதையிலே விருவிருப்பு இருக்கிறது.

(3) டாக்டரா விபசாரியா என்ற தலைப்பை மாற்றி வேறு பெயரிட்டு நல்ல முறையிலே வெளியிட் டிருந் தால் நன்ருக இருந்திருக்கும். 'தரை மகா ஜனங்'களுக்காகத் திரைப் படக் காரர்கள் கையாளும் உத்திகள் அங் கேயே நின்றுவிடுவதுதான் நல்லது. நல்ல நாவலை இப்படிக் கெடுத்திருக்க வேண்டாம். ஆசிரியர் கைதேர்ந்த எழுத்தாளர்; திறமை நன்கு பயன்படு வதாக.

ஸ்வர்ண பிரசுரங்களின் அட்டை யைப் பற்றி ஒரு சொல் — வர வர ஆபாசத்தின் 'ஒச்சாணிக்' கிளையை நோக்கித் தாவிக்கொண்டே போகி றது. காமம் மனிதரிடையே இல் லாத சரக்கல்ல; அதற்காக அது இருக்கிற இடத்தை வெளிச்சம் போட்டுக் காட்டி எல்லோரையும் அங்கே இழுத்துப் போய் இலக்கியத் தைச் சோரத்தனத்துக்கு ஆளாக்க வேண்டியதில்லை.

தர்மரட்சகன், ஜீவப்பிரவாகம் —கட்டுரைத் தொகுப்புகள். ஒவ் வொன்றும் விலை ரூ. 1. வெளியிட் டோர்: சக்தி காரியாலயம், இராயப் பேட்டை, சென்னை: 14.

நூற்றுக்கு மேற்பட்ட பக்கமுடை யதாக உயர்ந்த காகிதத்தில் வெளி யாகும் இப் புத்தக வரிசை மிகவும் வரவேற்பதற்கு உரியது. 'சக்தி' பத் திரிகையின் மறுவடிவமே இந் நூல் வரிசை என்பதை அறியும்போது ஒரு வகையில் வருத்தமாகத்தான் இருக்கிறது. கருத்து நிறைந்த பத்தி ரிகைகளைத் தமிழர்கள் ஆதரிக்கத் தயங்குகிருர்கள். அதன் விளைவுதான் இந்தப் புது முயற்சி. இரண்டு புத்த கங்களிலும் வெளியாகியுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் உயர்தர மானவையே. இரண்டாவது புத்தகத் தில் உள்ள சிறு கவிதையும் உயர்தர மானதே. தமிழர்களின் முழு ஆதர வுக்கும் உரியது இப்புத்தக வரிசை.

வானெலியில் ம. பொ. சி. வெளி யிட்டோர்: இன்ப நிலையம், மயி லாப்பூர், சென்னை. விலை ரூ. 1-8-0.

தமிழகத்தின் சிறந்த நாவலர்களுள் ஒருவரான திரு. ம. பொ சி. யின் ஒன்பது வானெலிப் பேச்சுக்களை அழகான முறையில் இன்ப நிலையத் தார் வெளியிட்டுள்ளார்கள். ம. பொ. சி. யின் கருத்துப் பற்றியோ நடை பற்றியோ புதிதாக யாருக்கும் அறிமுகம் செய்யவேண்டிய தில்லை. வாழ்க்கையிலே வேறு வழி இல்லாத தால் தளர்ந்து தொய்ந்துபோன போக்கை மேற்கொண்டவர்களைத் தவிர, மற்றவர்களுக் கெல்லாம் கவர்ச் சியும் எழுச்சியும் ஊட்டும் நல்ல நடை; கருத்துக்கு விருந்தளித்துச் செயலுக் குத் தூண்டும் பொருட் சிறப்பு— இவை ம. பொ. சி. யின் பேச்சுக்கும் எழுத்துக்கும் உள்ள பொதுப் பண்பு கள்.

தமிழ்ப்பணி: வெளியிட்டோர்: தமிழகம், உறையூர், திருச்சி. விலை 12 அணு.

ஷை வெளியீட்டாளர் அமைத் துள்ள தமிழ்ப் பணிக் குழுவினர் 10 ஆண்டுத் திட்டம் ஒன்று அமைத் துள்ளனர். அருமையான கனவு; நிறைவேறினுல் நன்ருக இருக்கும். தமிழர்கள் இத் திட்டத்தைப்பற்றி எண்ணவாவது செய்யட்டும்; பயன் உண்டு.

1. வள்ளுவர் கோள்கையும் வட வர் கோள்கையும்.

2. திருக்குறள் ஆராய்ச்சி—இரண்டு நூல்களையும் எழுதியவர்: இறையனர். வெளியிட்டோர்: தமிழகம், உறையூர். முன்னது விலை ரூ. 1; பின்னது விலை ரூ. 1—8—0.

முதலில் உள்ள புத்தகத்தில் திருக் குறள் வடமொழியின் வழிவந்த

நூலன்று என்ற கருத்து விரிவாக ஆசிரியர் ஆராய்கிறார். 'திருக்குறள் ஆராய்ச்சி'யில் நூலைப் பற்றியும் ஆசிரியரைப் பற்றியும் பல குறிப்புகளும் ஆராய்ச்சி முறைகளும் காணப்படுகின்றன. நடை தெளிவானது. தமிழர்கள் படித்துப் பயன் பெறத் தக்க நூல்கள்.

கயத்தாற்றில் கட்டபொம்மன்: ஆசிரியர்: ம. பொ. சி.—வெளியிட்டோர்: இன்ப நிலையம். விலை 4 அணா.

வீரபாண்டியனைத் தூக்கிலிட்ட இடத்தில் ஆசிரியர் செய்த அருமையான சொற்பொழிவின் எழுத்துவடிவமே இச் சிறு நூல்.

திருக்குறள்—மூலமும் ஆராய்ச்சிக் குறிப்புகளும்—வெளியிட்டோர்: பொதிகைப் பதிப்பகம், கடலூர் N. T. விலை ரூ. 2. தமிழ் மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்க்கும் மிகவும் பயன்படும்.

கலைச் செல்வன்: ஆசிரியர்: திரு. ஏ. சண்முகம். வெளியிட்டோர்: குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை— விலை 14 அணா.

பல நாவல்களைச் சுவைபட எழுதியுள்ள இந் நூலாசிரியர் இதனைப் பள்ளி மாணவர்க்கென்றே தீந்தமிழ் நடையில் நன்கு தீட்டியுள்ளார். பாட நூலாக அமையின் இளைஞர் பல நல்ல படிப்பினைகளை அறிந்து கொள்ள உதவும்.

கடை மருந்துகளும் பயனும்—வெளியிட்டோர்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை—1 விலை ரூ. 1—8—0.

சாதாரணமாக ஏற்படக் கூடிய நோய்களின் தன்மை, அவற்றைத் தவிர்க்கவோ போக்கவோ உரிய முறை முதலியவற்றை விளக்குவது இந்த நூல். முதலுதவி விளக்கமும் உள்ளது. பின்னால் காணப்படுகின்ற அகராதி மிக உதவியாக இருக்கும். எல்லாக் குடும்பங்களிலும் இருக்கத் தக்க நூல்.

வாழ்க்கையில் வெற்றி: ஆசிரியர்: பீவர்புரூக்—கிடைக்குமிடம்: ஜேம்ஸ் மோசஸ், நாகர் கோவில்— விலை ரூ. 1—14—0.

ஆங்கில மொழியில் சிறப்புப் பெற்ற இந்த நூலைத் தமிழில் தர முயன்றிருப்பது வரவேற்கத் தக்கது. இம்மை வாழ்க்கையை அடியோடு கவலையில்லாமல் கைவிடும் நம்மவர்க்கு இத்தகைய நூல்கள் தேவைதான். தெளிவான மொழிபெயர்ப்பு.

நமது சரித்திர பாரம்பர்யம்: ஆசிரியர்: திரு. டி. என். இராமச்சந்திரன். வெளியிட்டோர்: இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம் — விலை: மலிவுப் பதிப்பு ரூ. 2—0—0; உயர்ந்த பதிப்பு ரூ. 2—8—0.

போர்களும் முடிசூட்டு விழாக்களுமே வரலாறு என்று கருதுகிற பாணியில்தான் வரலாற்று நூல்கள் பொதுவாகக் காணப்படுகின்றன. மனிதனின் பண்பாடு வளரும் வகையும் பல்வேறு பண்பாடுகள் கலக்கும் போது ஏற்படும் மாறுதல்களையும் குறித்து விளக்குவதாகிய கடமை வரலாற்றுக்கு உண்டு என்ற கருத்து உதயமாகிவிட்டது. இவ்வகைப்பட்ட பாணியில் இந்தியப் பண்பாட்டை விளக்குவது இந்த நூல். பொருட் சிறப்புடையது; என்றாலும், நடை அத்துணைச் சிறாக அமைந்திருப்பதாகச் சொல்ல இயலாது.

சிந்தனை வாதிகளின் சத்திய சாதனை ஆசிரியர்: திரு. டி. என். இராமச்சந்திரன்—இமயப் பதிப்பகம், நாகை. விலை 12 அணா.

மனிதன் எப்படித் தோன்றினான், அவன் தன் அறிவு வளர்ச்சியினால் சாதித்தவைகள் என்ன என்பதை

மேலைநாட்டு நூல்கள் சிலவற்றின் உதவியால் எழுதப்பட்டுள்ளதே இச் சிறு நூல். முயற்சி நல்லது; இத்தகைய நூல்கள் தமிழுக்கு வேண்டும். நல்ல தமிழில் அமைந்தால் மிக நல்லது.

இசைக் கதிர்: தொகுத்தவர் — திரு. இரத்தினவேல், இசை ஆசிரியர், சர்வஜன உயர்நிலைப்பள்ளி, பூளைமேடு. விலை 12 அணா.

உயர்நிலைப்பள்ளி மாணவரின் பாடத் திட்டத்துக்கு ஏற்ற பாடல்களைத் தொகுத்து, இசைக் கலை பற்றியும், கலைஞர்கள் பற்றியும் பயனுள்ள குறிப்புகள் அமைத்துத் திரு. இரத்தினவேல் வெளியிட்டிருப்பது நல்ல பணி. உயர்நிலைப் பள்ளியாளர்களின் ஆதரவுக்கு உரியது. இதே தொகுப்பாசிரியரின் 'தக்ளிப் பாடல்' என்பதும் பள்ளிச்சிறார்க்கு ஏற்றது. விலை அணா 1½.

வரப்பெற்றோம்

ஓமந்தூரார் கருத்தும் எழுத்தும் — வெளியீடு: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை — 1 — விலை ரூ. 2—8—0.

மும்மூர்த்திகள் உண்மை தெரியுமா? ஆசிரியர்: திரு. அண்ணல்தங்கோ, 20, சஞ்சீவிப் பிள்ளைத் தெரு, வேலூர், வட ஆர்க்காடு — விலை ரூ. 3—12—0.

(1) நீயும் நானும், (2) நாட்டியக்காரி (3) குழந்தைக்குப் பெயர் — இவை மூன்றும் தேவகோட்டை உண்மைப் பிரசுரத்தாரின் வெளியீடுகள் மூன்றும் கதைகள். முதல் புத்தகம் திரு. ரகுநாதனின் நல்ல எழுத்தாற்றலைப் புலப்படுத்துவது. விலை 10 அணா. மற்றவை ஒவ்வொன்றும் 4 அணா விலையுடையது.

காதலர் வாழ்க்கையில் சந்தேகம் எதற்காக? மோகன் கம்பெனி, சென்னை—1. — தலைப்பைக் கொண்டு விலையாக்க நினைக்கும் வெளியீடு, விலை 3 அணா.

ஆயர் வாழ்வு: யாதவன் பிரசுராலயம், சென்னை: 5. திரு. ரங்கசாமி என்ற இளைஞரின் சமூக ஆர்வம் இப்படி ஒரு கதையாக வருகிறது. விலை 8 அணா.

குழந்தைகள் இலக்கியம்: கவிஞர் தமிழண்ணலின் எளிய குழந்தைப் பாடல்களை தேவகோட்டை உண்மைப் பிரசுரத்தார் வெளியிட்டுள்ளனர். நல்ல பாடல்கள் உள்ளன. விலை 6 அணா.

எச்சரிக்கை (கவிதைகள்) — திரு. வெள்ளியங்காட்டான் எழுதியுள்ள கவிதைத் தொகுதியின் இரண்டாம் பாகம். கற்பனை மின்னலின் ஒளியிலே திளைக்க ஆங்காங்கே வாய்ப்புண்டு. கிடைக்குமிடம்: சந்தேகவுண்டன்பாளையம், ஆலாந்துறை, கோவை. விலை ரூ. 1.

நீ நோயாளியாகும் வரையில் பூர்ணமான டாக்டர் என்று சொல்லிக்கொள்ள முடியாது.

— ஸ்டீபன் பேகட்

பயன்படும் காலம்?

டாக்டர்-மு. வரதராசன், M.O.L., PH.D.

கிரேக்க நாட்டின் பண்டைய அறிஞர் பிளாடோ (Plato) என்பவர் கவிஞர்களுக்குச் சிறப்புத் தராதவர். அவருடைய அரசியலில் கவிஞர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அவரைப் போல் கருதும் அரசியல் அறிஞர்கள் இந்த நூற்றாண்டிலும் இல்லாமற் போகவில்லை. இங்கிலாந்தின் அரசியல் வல்லுநரான பெவிரிட்ஜ் (Beveridge) என்பவரும் அவ்வாறே கவிஞர்களைப் புறக்கணித்துத் திட்டம் வகுத்தார். அரசியலில் புகழ்பெற்ற அறிஞர்களாகிய இவர்கள் பாட்டுக் கலையையும் அதன் கலைஞர்களையும் இவ்வளவு வெறுத்து ஒதுக்கக் காரணம் என்ன?

இந்த அறிஞர்களின் ஆர்வம் எல்லாம் அரசியலையே முதல் நோக்கமாக—குறிக்கோளாகக் கொண்டது. வாழ்க்கையை எவ்வாறேனும் சீர்ப்படுத்தி நாட்டின் அமைதியைக் காத்து மக்களை முன்னேற்ற வேண்டும் என்று ஆராய்ந்தவர்கள் இவர்கள். இவ்வாறு உயர்ந்த நோக்கம் கொண்டு பொது நலம் கருதி இவர்கள் திட்டம் வகுத்த போது, குறிக்கோளுக்கு இடையூறாக உள்ள எதையும் பொருட்படுத்தாமல் விட்டனர். உலகம் எல்லாம் போற்றிப் பாராட்டும் ஹோமர் (Homer) போன்ற கவிஞர்களே ஆனாலும், அவர்கள் அரசியல் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்தால் ஒதுக்கப்பட வேண்டியவர்களே என்று துணிவு கொண்டார்கள்.

"கவிஞர்கள் ஒழுக்கமாக வாழ வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி அற்றவர்கள்; ஆண்மையுள்ள நல்ல மனிதன் ஒருவன் கவிஞனைவிடச் சிறந்தவன். கவிஞர்கள் உண்மை போன்றதை விளக்குகின்றார்களே தவிர, உண்மையை உள்ளவாறு அறியாதவர்கள். ஒன்றைப்போல் கற்பித்துக் கூறுதல் வேடிக்கையை நோக்கமாகக் கொண்டதே தவிர, உண்மையை உணர்த்தும் ஆர்வம் இல்லாதது. நல்ல ஆட்சி நிலவவேண்டிய நகரத்திலிருந்தும் கவிஞர்களை வெளியேற்றுவது கடமையாகும். இல்லையானால், நகரத்து மக்களை அவர்கள் கெடுத்து விடக் கூடும். நல்லாட்சி நிலவும் நகரத்தில் பாட்டுக் கலை வாழ்வதற்கு உரிய தகுதி ஏதேனும் உள்ளதா? இன்பம் பயப்பது தவிர அதற்கு வேறு நோக்கம் உள்ளதா? இன்பம் பயத்தல்மட்டும் அல்லாமல், அரசியலின் நல்லமைப்புக்கும் மனித வாழ்க்கையின் நன்மைக்கும் அது பயன்படுகிறது என்று பாட்டுக்கலையைப் போற்றும் அன்பர்கள் நிறுவிக் காட்டட்டும். உண்மையான ஆர்வம் உள்ளதாகக் கருதி அதைப் போற்றக் கூடாது. அதற்கு மாறாக, அதைப் பற்றி மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். நகரத்தின் நன்மையைக் கருதியாவது இந்த அச்சம் இருக்க வேண்டும். ஒரு மனிதன் புகழாலும் பணத்தாலும் பதவியாலும் கெடுவது போல் பாட்டாலும் கெடுவதற்கு

இடம் உண்டு. அது காரணமாக நீதியையும் அறத்தையும் மனிதன் புறக்கணிக்காதபடி காத்துக்கொள்ள வேண்டும்'' என்று உலகப் பேரறிஞர்களில் ஒருவராகிய பிளாடோ (Plato, The Republic) எழுதுவாரானால், அதில் ஓரளவேனும் உண்மை இல்லாமற் போகாது.

பொதுவாக, கலை உணர்ச்சியை உயிராகக் கொண்டது. பாட்டுக் கலையில் அறிவுக்கும் ஓரளவு இடம் இருப்பினும், உணர்ச்சிப் பெருக்கே அதன் உயிர்வாழ் வாகும். உணர்ச்சி எப்போதும் ஒருதலையானது; நடுநிலைமை உணராதது; ஆய்ந்தோய்ந்து பாராதது; பற்றிய ஒன்றையே போற்றி மற்றதை மறப்பது. ஆகையால் குணம் நாடிக் குற்றமும் நாடும் பெற்றியைப் பாட்டுக்கலையால் பெற முடியாது. புலவர் ஊட்டும் உணர்ச்சியைப் பெற்று அவர் கண்டவாறு காணவே பாட்டுக் கலை துணைசெய்யும். பாடிய புலவர் நல்லவராய், நேர்மையானவராய் இருப்பின், அவருடைய பாட்டைப் படிப்பவரும் நல்ல உணர்ச்சியை நேரிய முறையில் பெறமுடியும். ஆயின், பாடிய புலவர் நடுநிலைமை அற்றவராய் ஒன்றைப் பாடியிருப்பின் அதைப் படிப்பவர் திருந்த முடியாதவராக மாறிவிடுவர். ஆகவே, நன்மையையும் தீமையையும் ஆற்றலுடன் வளர்க்க வல்லது பாட்டுக் கலை. ஆனால், மக்களின் சமூக வாழ்க்கையும் அரசியல் வாழ்க்கையும் நடுநிலையான நோக்கையும் அறிவான ஆராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டவை. மக்களின் பொதுவாழ்க்கைக்குத் தீமை விளைக்க வல்ல எதையும் களைந்தெறியவேண்டும் என்பதே அரசியல் அறிஞர்களின் கொள்கை. இதைப் பிளாடோ போன்ற ஒரு சிலர் அஞ்சாமல் வெளியிட்டுள்ளனர். மற்ற அறிஞர்களோ, புலவர்களின் செல்வாக்கைக் கண்டு அஞ்சி அடங்கிக் கூறாமல் விடுக்கின்றனர்; ஆயினும் நெருக்கடி நேரும் போது, அரசியல் தலைமைக்கு இடையூறு நேரும்போது, தம்மைப் போற்றும் புலவர்களுக்குமட்டும் இடம் கொடுத்து, தூற்றும் புலவர்களுக்குத் தடையுத்தரவுகள் பிறப்பிக்கின்றனர். அது ஒருவகையில் பாட்டுக் கலையை—அதன் ஒரு பகுதியை—வெளியேற்றும் முயற்சியே அல்லவா?

தடுக்கப்பட்ட பாட்டுக்கள் தீய நோக்கம் உடையவை என்று அந்த அறிஞர்கள் குற்றம் கூறலாம். ஆனால், பாடிய புலவர்கள் தம் நோக்கம் சீரானது என்று கருதுவதே இயல்பு. தம் உணர்ச்சிக்குக் கலை வடிவம் தரும் உரிமை அவர்களுக்கும் உண்டு. ஆகவே, அந்தத் தடை கலைக்குப் பிறந்த தடை என்பது உண்மையே ஆகும்.

கலை என்பது பிரசார நோக்கம் இல்லாததாக இருக்க வேண்டும் என்று ஒரு காரணம் கூறலாம். கலைகளின் வரலாற்றை ஆராய்ந்தால் பெரும்பாலானவை அந்தந்தக் காலத்திற்கு உரிய பிரசாரத்திற்காகவே தோன்றியிருப்பதை உணரலாம். ஒரு காலத்தில் தடுக்கப்பட்ட பாரதியார் பாடல்களும் அப்படிப்பட்டவைகளே. தாம் உணர்ந்ததை மற்றவர்க்கு உணர்த்த வேண்டும் என்பதே கலைக்குத் தூண்டுகோலாக இருப்பதால், பிரசாரப் போக்குப் பற்றிக் கலையைக் குறை கூற முடியாது. இவ்வாறு குறை கூறுகின்றவர்கள், தமக்குச் சார்பான கொள்கைகளைப் பிரசாரம் செய்யும் கலைத் துறையை மட்டும் தாம் களிப்போடு போற்றுவதை எண்ணிப் பார்க்க வேண்டும். தன்னைப் புகழ்கின்றவன் மெய்யன் நேர்மையானவன் என்றும், பிறனைப் புகழ்கின்றவன் பொய்யன் நேர்மையற்றவன் என்றும் சொல்வது தகுமோ?

மற்றோர் உண்மையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அறிவு வளர வளர உணர்ச்சி பண்படுகிறது; நுட்ப மடைகிறது; ஆனால் ஆற்றலும் வேகமும் இருக்கிறது. அறிவு குறைந்த நிலையில்தான் உணர்ச்சி ஆற்

றனும் வேகமும் உடையதாய் விளங்கு கிறது. ஆகையால், உயர்ந்த மக்கள் பாடிய விழுமிய பாட்டுக்கள், பண் பட்ட நெஞ்சினர் சிலர்க்குப் பயன் படுமே தவிர, பெரும்பாலான மக்க ளுக்குப் பயன்படுவ தில்லை. அவர்கள் விரும்புவன எல்லாம் இழிந்த பாட்டுக் கள், நெறி தவறிய பாட்டுக்கள், பண் படாத கருத்துடைய பாட்டுக்களே ஆகும். ஆகவே, பாட்டுக் கலை உலகத் திற்கு ஆற்றியுள்ள நன்மை பெரிதா தீமை பெரிதா என்பதை அளந்தறிந் தால்தான் உண்மை விளங்கும்.

ஆதலின் பிளாடோவும் மற்றவர்க ளும் கூறுவது கண்மூடிக் குற்றச் சாட்டு அல்ல என்று உணரவேண்டும். அதே நிலையில், பாட்டுக் கலை தீமையே பயக்கும் என்று நம்பிவிடலாகாது; அது தீமையும் பயக்கவல்லது என்று அறிய வேண்டும். அறிந்தபின் தீமை விளைக்காதபடி தூய்மைப் படுத்த வழி காணவேண்டும்.

தூய்மைப்படுத்த வேண்டும் என்ற தும், பாட்டுக் கலையில் ஏதோ மாசு இருப்பதாக எண்ணுதலாகாது. பாட் டைப் படைப்பவரின் உள்ளத்திலும் படிப்பவரின் உள்ளத்திலும் மாசு இல் லாதவாறு தூய்மைப்படுத்துவதே கட மையாகும். ஆகவே, பாடும் புலவரும் படிக்கும் மக்களும் நல்ல மனம் உடை யவர்களாக விளங்கத் தக்கவாறு அரசி யலும் சமூகமும் திருந்தி அமைய வேண்டும்; அரசியலும் சமூகமும் அற நெறியை அடிப்படையாகக் கொண்டு விளங்கவேண்டும்.

பிளாடோ போல் திருவள்ளுவர் எண்ணிப் பார்த்தாரோ இல்லையோ, அறியக் கூடவில்லை. ஆனால், அவர் அரசியல் நெறி வகுத்துக் கூறும் போது, நல்ல மனம் இல்லாத மக்களை என்ன செய்வது என்று எண்ணியிருக் கிறார் என்பது மட்டும் தெளிவு. அதனால்தான்

> பல நல்ல கற்றக் கடைத்தும் மனம் நல்லர்
> ஆகுதல் மாணார்க்கு அரிது

என்றார். ஆகவே, மாண்பில்லாத கய வர் அருகி, மாண்புடைய மக்கள் பெருகினால்தான் அரசியலும் திருந் தும், பாட்டுக் கலையும் பயன்படும். அதற்கு அறநெறி தவிர வேறு வழி யும் உண்டோ?

இலக்கியம்

"ஓர் இனத்தின் மனத்தை வரிவடிவில் காட்டுவதே இலக்கியம் ஆகும்."

— சானிங்

"கருப் பொருள் முதலில் தோன்றுகிறது; பின்னர் பல்வகையான பொருள்கள் உருப் பெறுகின்றன. அப்படியே, வாழ்க்கை முதலில் முகிழ்க்கிறது; பின்னர் இலக்கியம் மலர்கிறது. உலகிலே சலவைக் கற்சிலைகள் பெருகும் முன்னர், மலைகளிலே சலவைக் கல் நிறைய இருந்தது —"

— ஃபிலிப்ஸ் புரூக்ஸ்

"வாழ்க்கை நம்மை ஆட்டி அலைக்கழிக்கிறது; இலக்கியமோ நமக்கு ஒரு நிலைபேறு அளித்து உறுதிப்படுத்துகிறது."

— கர்ராட்



இந்திய அரசாங்கம்

உள்ளத்தை உயிரதனை
ஊடுருவும் காதலினை
அள்ளுற்ற உருவாக்கி
அழியாமை தந்தகலை



யூசிஸ்

நயகாராப் பேருருவி



சிந்தனைக்கு ஓர் இமயம்

'யூசிஸ்'

விளையும் பயிர்

அமெரிக்காவில் சிறுவரும்
விஞ்ஞானிகளாய் வளர்கின்றனர்;
போதிய வாய்ப்பு உள்ளது.
பலோமர் வானாராய்ச்சி
நிலையம்போல் ஒன்று
செய்து தன் விஞ்ஞானத்
திறம் காட்டுகிறான் இச்சிறுவன்.

இரண்டு ஆண்டுகள்

நன்றி

தமிழ் இனத்தவரிடையே தன் அரிய பணியைக் கலைக்கதிர் தொடங்கி இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. இரண்டாவது ஆண்டின் இறுதி இதழ் தங்கள் கரத்தை அழகு செய்து, கருத்தைக் கவர்கிறது. நாங்கள் எதிர்பாராத அளவுக்கு ஆதரவு தந்து, நல்ல தமிழ்ப் பணி ஆற்ற உதவிய தமிழ்ப் பெருமக்களுக்கு எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்திக் கொள்கின்றோம். கட்டுரை, கதை, கவிதைகள் எழுதி விருந்தளித்த பெரியோர்களுக்குத் தமிழினத்தின் சார்பாக நன்றி செலுத்துகிறோம்.

பொங்கல் மலர்

சென்ற ஆண்டு போலவே இவ்வாண்டும் பொங்கல் மலர் வெளியிட எண்ணியுள்ளோம்; வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சுமார் நூற்றைம்பது பக்கம் கொண்ட மலரில் நிறையப் படங்களும், சிந்தனைக்கு விருந்தாகும் கட்டுரை, கதை, கவிதைகளும் இருக்கும். முழுவதும் ஆர்ட் காகிதத்தில் வெளியிடுகிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். விலை முன்போலவே குறைவாகத்தான் இருக்கும். இரண்டரை ரூபாய்தான். சந்தாதாரருக்கு மட்டும் இரண்டு ரூபாய். சென்ற ஆண்டில் வெளிவந்த மலரைவிட மிக மிகச் சிறப்பான முறையில் பதிப்பிக்க முனைந்துள்ளோம். முன் கூட்டிப் பிரதிக்குப் பதிவு செய்து கொள்வது நல்லது. நல்ல காகிதம் கிடைப்பது குதிரைக் கொம்பாய் இருப்பதால் குறைவான பிரதிகளே அச்சிடுகிறோம்.

மாறுதல்

மூன்றாவது ஆண்டிலிருந்து — அதாவது அடுத்த இதழிலிருந்து— நேயர்களின் விருப்பத்திற் கிணங்க ஒரு முக்கியமான மாறுதல் செய்கின்றோம். 'கலைக்கதிர்' இதழ்கள் இனிமேல் கிரௌன் $\frac{1}{8}$ அளவில் **புத்தகமாக** வெளிவரும். உறுதியான அட்டை; திண்மையான கட்டு; உயர்ந்த காகிதம். 120 பக்கம்—விலை வழக்கம்போல் எட்டணாத்தான். "கலைக்கதி'ரின் ஒவ்வோர் இதழும் மற்றப் பத்திரிகைகளைப் போல ஒதுக்கிவிடத் தக்கதாக இல்லை. கசங்காமல் பாதுகாக்கக் கூடிய வகையில் வெளியிட்டால் நலமாக இருக்கும்" என்று நேயர்கள் அடிக்கடி கடிதங்கள் எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் சொல்வது சரி என்றே எங்களுக்கும் தோன்றுகிறது. 'ஸயன்ஸ் நியூஸ்' போன்று இனி ஒவ்வொரு இதழும் ஒரு புத்தகமாக இருக்கும்.

இந்தப் புத்தகத்தின் உள்ளே ஒவ்வொரு மாதமும் வர்ணப் படம் ஒன்று இருக்கும்; நான்கு அல்லது எட்டுப் பக்கங்கள் ஆர்ட் படங்கள் இருக்கும்.

இம்மாறுதலால் பொருட்செலவு அதிகமாகிறது. என்றாலும், நம் நோக்கத்திற்கு ஏற்ப, லாபம் கருதாமல் தமிழ்ப்பணி ஆற்ற வேண்டும் என்றே இந்த மாறுதலைத் துணிந்து மேற்கொள்ளுகிறோம்.

வணக்கம்.

கனவு

திரு. தா. ஏ. சண்முகம், M.A., M.Litt.

விலங்கினங்கள் கனவுகள் காண்பது உண்டா என்று கூற முடியாவிடினும், 'காட்டுமிராண்டிகள்' முதற்கொண்டு 'நாகரிக' மனிதன்வரை கனவு காண்கிறார்கள் என்பது உண்மை. கனவு காணாதவர்கள் எவரும் இலர். சிலர் தாங்கள் கனவு காண்பதே கிடையாது என்றும் கூறுவார்கள்.

உண்மை யாதெனின், அவர்கள் காணும் கனவுகள் அவர்கள் நனவில் இருப்பதில்லை. நடு இரவில் கண்ட ஒரு கனவு, அப்போது விழித்த உடன் தெளிவாக நனவில் இருக்கிறது. காலையில் எழுந்த உடன் நனவுக்குக் கொண்டுவர முயன்றால் அது தெளிவாகவருவதில்லை.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னே மக்கள் கனவைப்பற்றி ஆராய்ச்சி செய்து தாங்கள் கண்ட உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அக்காலத்தில் பொதுவாக நம்பி இருந்த கருத்தாவது, ஒருவன் தூங்கும்போது அவனுடைய 'ஆத்மா' (Soul) உடலைவிட்டு நீங்கிப் பல்வேறு இடங்களுக்குச் சென்று, பல அனுபவங்களோடு திரும்பி வந்து உடல் கூட்டை அடைகிறது. விழித்தவுடன் அவன் நனவிற்கு இந்த அனுபவங்கள் வருகின்றன என்பதாகும். இதற்கு ஆதாரமாக இருபது அடி தாண்ட முடியாத ஒருவன் கனவில் நூறு அடி தாண்டுகிறான் என்பதையும் சாதாரண வாழ்க்கையில் அடைய முடியாத பொருள்களைக் கனவில் அடைகிறான் என்பதையும் எடுத்துக் காட்டினார்கள். 'ஆத்மா' உடலுடன் பொருந்திச் செய்ய முடியாததும், அடைய முடியாததுமானவைகளை உடலைவிட்டு நீங்கி எதேச்சையாகத் திரிவதால் செய்து அடைகிறது என்று கருதினார்கள். இதை அடிப்படையாகக் கொண்டுதான் பண்டைக் காலத்தினர், ஒருவன் தூங்கும்போது, திடீரென்று எழுப்புதல் கூடாது என்று கருதினார்கள். மேலும் சிலர் இரவில் தூங்கச் சென்று மறுநாள் காலை விழிக்காமல் இறந்து கிடப்பதைக் கண்டு உடலை விட்டுச் சென்ற 'ஆத்மா' தன்னுடைய செயல்களில் ஈடுபட்டு அதிலே ஆழ்ந்து, திரும்பி வர மறந்து விடுதலினாலே யாகும் என்று கருதி, இறந்த மனிதனை உடனே புதைத்தோ, கொளுத்தியோ விடாது ஒரு நாளாவது வைத்திருப்பார்கள். இவைகளோடு கூட இறந்த சிலர் சில மணி நேரம் கழித்து உயிர் பெறுவதை ஆதாரமாகவும் காட்டினார்கள். இந்தக் கருத்தையே பல்வேறு வகையில் உலகத்து மக்கள் இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரையில் நம்பி வந்தனர். மேற்கூறியவைகளோடு, கனவுகளுக்கு வரப்போகும் நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறும் இயல்பு உண்டு என்றும், சில கனவுகள் கண்டால் நன்மையாக முடி

யும் என்றும், விடியற்காலையில் காணும் கனவுகள் வருங்கால நிகழ்ச்சிகளைத் தவருது எடுத்துக் காட்டும் இயல்புடையன என்றும், இன்னும் பலவாருகவும் நம்பிக்கை வைத்திருந்தனர். பண்டைய கிரேக்க நாட்டிலே, ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar) கொல்லப்படுவதற்கு முன்னே அவருடைய மனைவி கால்பூர்ணியா (Calpurnia) தீக் கனவுகள் கண்டு தனது கணவனை வெளிச் செல்லாது தடுத்ததாகவும், அமெரிக்கநாட்டுத் தியாகி ஏப்ராஹாம் லின்கன் (Abraham Lincoln) தனக்குக் கொலையால் இறப்பு நேரும் என்று முன்னேயே கனவு மூலமாக அறிந்து தமது நாட்குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்திருந்தார் என்றும் கூறப்படுகின்றன. இவைகளினுலும் மற்ற இவைபோன்ற காரணங்களினுலும் கனவுகளின் தன்மையைப் பலர் பல்வேருகக் கருதிவந்தனர். அவைகளை விஞ்ஞான முறையில் ஆராய்ந்து அறுதி இட்டவர் எவரும் இலர். உளப்பாகுபாடு அறிஞரான பிராய்டே (S. Freud) முதன் முதல் கனவுகளின் தன்மையை விஞ்ஞான முறையில் ஆராய்ந்து தமது அரிய கருத்துக்களைப் புத்தகவாயிலாக (Interpretation of Dreams) வெளியிட்டிருக்கிருர். பிராய்டின் உளப்பாகுபாடு முறையைப் பின்பற்றி அவருடைய மாணவர்களான யூங் (C. G. Jung) ஆட்லர் (A. Adler) தங்களுடைய ஆராய்ச்சிகளையும் வெளியிட்டிருக்கிருர்கள். இம் மூவர்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன எனினும் பொதுவான சில கொள்கைகளில் அவர்களுக்குள்ளேயே ஒற்றுமை இருக்கிறது. பிராய்ட், யூங், ஆட்லர் போன்ற உளப்பாகுபாடு அறிஞர்களின் (Psychoanalysts) கருத்துக்களை ஆராய்ந்தறியுமுன், கனவுகளைப் பற்றி உள நூலறிஞர்களின் பொதுவான கருத்து யாது என்று இங்கு நோக்குவோம்.

தினசரி வாழ்க்கையில் ஏதேனும் ஒரு பொருள், கண் காது மூக்குப் போன்ற பொறிகளைத் தூண்ட, உள்ளம் ஆலோசனையில் (Thinking) ஆழ்கிறது. பெரும்பாலும் அந்தப் பொருளில் தூண்டப்பட்ட ஆலோசனை, அந்தப் பொருளைத் தொடர்ந்து சென்ற காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களை (Experience) ஒட்டியதே யாகும். உள்ளம் ஆலோசனையில் ஆழும்போதும், சில விதிகளுக்குக் கட்டுப்படுகிறது. சான்ருக, நாற்காலியும் மேஜையும் நாம் எப்போதும் சேர்ந்தே பார்த்திருக்கிருேம்; எனவே, மேஜையை மாத்திரம் பார்த்தவுடன் நாற்காலியைப் பற்றிய எண்ணமும் தொடர்ந்து வருகிறது. தூக்கநிலையில்தான் கனவுகள் தோன்றுகின்றன என்பது யாவரும் அறிந்ததே. தூக்க நிலை உண்டாவதற்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும், பொதுவாக முக்கியமான காரணங்கள் ஓரிரண்டே யாகும். உடலின் பல்வேறு உறுப்புக்கள் அதிகம் வேலைசெய்வதன் விளைவாக அயர்ச்சி (Fatigue) உண்டாகிறது. அந்த அயர்ச்சி தூக்க நிலையை எய்த உடலைத் தூண்டுகிறது. தூக்க நிலையில் உடலின் இருதயம்போன்ற உறுப்புக்கள் தவிர, மற்ற எல்லா உறுப்புக்களும் வேலை செய்யாமல் இருக்கின்றன; அப்படி வேலை செய்தாலும் விழித்திருக்கும் நிலையில் அவைகள் வேலை செய்யும் போது இருக்கும் வலிவும் விறுவிறுப்பும் இருப்பதில்லை. உள்ளம் இருந்த நிலையில் பொதுவான விதிகளுக்குக் கட்டுப்படுவதில்லை. ஆகவே, தூக்க நிலையில் ஏதாவது ஒரு பொறி தூண்டப்பட்

டால் அது அதிக வலிமையுடைய தாயின் அவன் தூக்கம் கலைந்து எழுந்திருப்பான்; சான்ருக ஒருவன் தூங்கும்போது பீரங்கி வெடித்தால், அவன் விழித்துக் கொள்வான். ஆனல் அவன் தூங்கும் அறையில் பேசினுல், மெதுவாக ஓசை செய்தால் அந்த ஓசை அவன் காதாகிய பொறியைத் தூண்டினபோதிலும், அவன் விழித்துக்கொள்வதில்லை. அதற்குப் பதிலாக, தூண்டப்பட்ட பொறியானது, வலியற்ற நிலையில் வேலை செய்து, தூண்டும் பொருளுக்குத் தொடர்பான பழைய அனுபவங்களைத் தூண்ட ஆரம்பிக்கிறது. இதை விவரிக்கக் கீழ் வரும் சான்றுகளை நோக்குவோம். மேலை நாட்டிலே ஒரு நங்கை, தன்னை மேரி அண்ட்டோனயட் (Marie Antointe) ஆகவும், பிரெஞ்சு நாட்டுப் புரட்சி வீரர்கள் தன்னைக் கொலைக்களத்திற்குக் கடத்திச் சென்று கழுத்தை வெட்டும் கத்திக்கு (guillotine) அடியில் தன் கழுத்தை வைத்து அந்தக் கத்தியைக் கழுத்தின் மேல் செலுத்தியதாகவும் கனவு கண்டு உடல் நடுநடுங்க அலறிப் படுக்கையை விட்டு எழுந்தாள். எழுந்த உடன் அவள் கவனித்ததாவது மேலே மாட்டியிருந்த படத்தின் சட்டம் தற்செயலாக அவள் கழுத்தின் மேல் விழ, அவள் விழித்தெழுவதற்குமுன் ஒரு விஞடியில் மேற்கூறிய கனவைக் கண்டாள். ஒரு நிகழ்ச்சி நேருவதற்குச் சாதாரண வாழ்க்கையில் பல மணிநேரம் ஆகலாம்; அல்லது பல நாட்களும் ஆகலாம்; ஆனல் அவைகள் கனவிலே ஒரு விஞடியிலே முடியும் இயல்பு வாய்ந்தவை வீடு பற்றிக் கொண்டு எரிவது போலவும் நெருப்பணைக்கும் சாரணர்கள் மணியை அடித்துக்கொண்டு வருவது போலவும் கனவு கண்டு விழித்தெழுந்தால், எதிரிலே இருக்கும் கடிகாரம் 'அலாரம்' (alarm) அடிப்பதைக் கேட்கலாம். இந்தக் கடிகாரத்தின் ஓசையே, அந்தக் கனவைத் தூண்டியிருக்கிறது. ஒரு சோதனையில் ஒருவன் தூங்கும் போது அவனெதிரே, ஒரு சப்தம் செய்யும் மின்சார விசிறியை வைத்தார்கள். அவன் தான் ஆகாய விமானத்தில் பறப்பது போன்ற கனவு கண்டான். மற்ருெரு சோதனையில், தன்னையும் அறியாது கட்டில் ஒருபக்கம் தாழ்ந்திருக்க, அந்த இடத்தில் தலையை வைத்துப் படுத்தான். அப்போது அவனது தலையிலே குளிர்ந்த தண்ணீர்த் துளிகள் வைக்க அவன் கடலில் மூழ்கிக் கிழே செல்வதுபோல் கனவு கண்டான். பொதுவாக யாரோ ஒருவர் மார்பின்மேல் உட்கார்ந்து அழுத்துவது போலவும், தான் வாய்விட்டுக் கத்த முடியாமல் தவிப்பது போலவும் கனவு கண்டு உடல் நடுங்க, வியர்வை சொட்ட, இருதயம் படபட வென அடித்துக் கொள்ள விழித்தெழுவது மூச்சு விடமுடியாமல் இருதயம் உடலின் உறுப்புக்களாலே அழுத்தப் படுவதனுலேயாகும். சில சமயம் நாம் மல்லாந்து படுக்கும்போதும் ஒரு பக்கம் சாய்ந்து படுக்கும்போதும் இருதயம் தற்செயலாக அழுத்தப்பட, அதனுல் ஏற்படும் வலி உணர்ச்சி இதுபோன்ற கனவுகளாக வருகிறது. இதைத்தான் பூதம் பிசாசுகள் அழுத்துவதாகக் கூறுவார்கள். மேலும் குமரப் பருவத்திலே உடலுறுப்புகள், சிறப்பாக இருதயத்தின் நுண்ணிய பாகங்கள், திடீரென்று வளர்ச்சி அடைகின்றன. இதனுல் ஒரு சிலர் ஆகாயத்தில் பறப்பது போன்று கனவு காண்பார்கள்.

(தொடரும்)

அறிந்த சிரிப்பே அறியாமைச் சிரிப்பு!

திரு. ச. த. இராசேசுவரி அம்மையார், M.A., L.T.

எல்லாம் அறிந்த சிரிப்பு

1895-இல் ஒரு விஞ்ஞானி "இயற்கையைப் பற்றி அறிய வேண்டுவன எல்லாவற்றையும் அறிந்துவிட்டோம். இனி அவற்றை வகை செய்யவேண்டியதே நம்முடைய வேலை. புதிதாக ஒன்றும் கண்டுபிடிக்க முடியும் என நம்புவதற்கு இல்லை" என்றார். நியூட்டன் கண்ட உண்மைகளும் பாரடே, மாக்ஸ்வெல் கண்ட மின் காந்த உண்மைகளும் இவற்றின் வழியே எழுந்த பல வகை எந்திரங்களுமே இவ்வாறு பேசச் செய்கின்றன. ஆனால், இவ்வாறு பேசியவுடனேயே புதிர்க் கதிர் உலகத்தின் அறியாமையை விளக்க வருகிறது. கற்றது கைம் மண் அளவு, கல்லாதது உலகளவு என்பது மறுபடியும் உண்மையாகிறது. விஞ்ஞானிகள் செருக்கு அடங்கிப் பச்சிளங் குழவிபோல் மனம் மாறி இயற்கையின் புதிய புதிய தோற்றங்களைக் கண்டு மகிழ இன்று முற்படுகின்றார்கள். இயற்கை அன்னை இருட்டில் அலையும் தன் மக்கள் தட்டுத் தடுமாறி வரும்போது தன் உண்மை முழுதினையும் ஒரே சமயத்தில் வெளியிடுவதில்லை. 'சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே' எனத் தாயின் முன்தானையின் ஒரு முனையைப் பிடித்ததும் இறுமாந்து பேசுகின்றான் மனிதன். சிரிக்கின்றாள் அன்னை. கண்ட முன்தானையே இவன் கண்ணை மறைக்கிறது. மற்றோர் அற்புதக் காட்சி காட்டுகின்றாள். "காணாததை நோக்கக் கண்டது எவ்வளவு" என்று மனம் அழுங்குகின்றான். புதிய காட்சிகளைக் கண்டு வியக்கின்றான். ஆராய்ச்சியில் பன்மடங்கு ஊக்கத்துடன் உழைக்கின்றான். "புதுப் புதுக் காட்சிகள். அற்புதக் காட்சிகள். என்ன என்ன ஆச்சரியம்!" என அனைவரும் மருளுகின்றனர். "இவ்வளவுதான் முடிவா?" என்று எண்ணி நகையாடுகின்றாள் இயற்கை அன்னை. "இல்லை, நாம் கண்ட முடிவு மற்றோர் உண்மையின் தோற்றுவாய்" என்று செருக்கின்றிக் குழவிபோல் ஆராய்ச்சியில் முந்துகின்றவர்களே உலகிற்கு உதவும் விஞ்ஞானிகளாவர்.

எதிர்முனைக் கதிர்

காணா ஒளி என்பது முரண் அணி அமைத்துப் பாடப்படும் பாட்டைப் போன்றது அன்று. எக்ஸ்ரே (X—Ray) என்னும் புதிர்க்கதிர் படத்தில் நாம் அன்றாடம் காண்கின்ற உண்மையேயாம். இதனைப் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கூறிய விஞ்ஞானிகளின் உலகில் தோன்றுகின்றன. கீழே உள்ள முதல் படத்தில் காட்டியபடி, ஒருகண்ணாடிக் குழாய் – அதிலுள்ள காற்றை உறிஞ்சு பொறி கொண்டு வெளியாக்கும்படி மேற்புறம் அமைத்த ஒரு வாய்—உள்ளே இரண்டு முனைக்கும் அருகே பக்கத்திற்கு ஒன்றாக எதிர் எதிர் அமைத்த இரண்டு அலுமினியத் தகடுகள் — ஒரு புறத்தே எதிர் முனைக் கம்பி—மற்றொரு புறத்தே நேர் முனைக்கம்பி — இவ்வாறு அமைத்துக் குழையிலுள்ள காற்



படம்: 1

றினை அப்புறப்படுத்திக்கொண்டே வருகின்றனர். ஏறக்குறையக் காற்று இல்லை என்றே சொல்லி விடலாம்.

மிக அமுக்கமுள்ள மின்சாரம் (High Voltage Discharge) உள்ளே பாய்கிறது. என்ன காண்கிறோம்? மின்னல் பாயும்போது தோன்றும் ஒளிபோன்றதொன்று ஒலியோடும் தாவுகின்றது. காற்று இன்னும் குறையக் குறைய மங்கலான சிவப்பு ஒளி குழாயினுள்ளே பரவுகிறது. எதிர் முனையைச்சுற்றி வெல்வட் ஒன்றினைப் பதித்து வைத்தாற் போன்ற மெத்தென்ற காட்சி தோன்றுகிறது. இது எதிர் முனையிலிருந்து வருவதால் இதனை எதிர்முனைக் கதிர் (Cathode Rays) என வழங்குகின்றனர்.

ஆவிக்கேற்ற அழகு

இத்தகைய குழைகளில் பல வகை ஆவிகளையும் (Gases) உள்ளடைத்து மேற்கண்டவாறே பலர் ஆராய்ச்சி செய்கின்றனர். ஹைட்ரஜனை அடைத்து இதோ ஒருவர் பார்க்கின்றார். செக்கச் சிவந்த ஒளி மிளிர்கின்றது. ஆக்சிஜனை அடைத்து மற்றொருவர் பார்க்கின்றார். வெண்மை நிறம் திங்கள் போலத் திகழ்கின்றது. எனவே, எதிர்முனைக் கதிர் ஒளி குழையிலிருக்கும் ஆவிக்கு ஏற்பப் பலபல அழகிய நிறங்களாக மின்னிப் பொலியும் என்பது தெளிவாகிறது. இத்தகைய குழாய்க்குள் எத்தகைய ஆவி இருந்தாலும் எதிர்முனைக்கதிர் தோன்றக் காண்கிறோம். ஆகையால், இந்தக் கதிர் எல்லாப் பொருள்களிலும் பொதுவாகக் கிடக்கும் அமைப்பு எனல் வேண்டும்.

சூடு சல்லி (Therm ions)

எடிசன் (Edison) தோன்றுகிறார். தமக்குத் தாமே அறிவூட்டி வளர்ந்து, உலகம் போற்றும் விஞ்ஞானியாகத் தம்மை உயர்த்தி, காண்போர் வியக்கத்தக்க வாழ்க்கையை நடத்தி வந்தார் இப் பெரியார். இவர் இந் நாளைய வாழ்க்கைக்கு இன்றியமையாத மின்சார விளக்கினைக் கண்டுபிடித்து உதவியதனோடு அமையாது புதிய விளக்கு ஒன்றினைச் செய்தார். இது சாதாரண மின்சார விளக்குப் போல் இல்லை. தலைப் பாகத்தில் ஒரு தட்டு அமைக்கப்பெற்று இருக்கிறது. ஒரு மின்கல அடுக்குக் கொண்டு இந்த விளக்கின் உள்ளே உள்ள திரிகம்பியைச் சூடேற்றுகிறார். திரிகம்பி வெள்ளையாகப் பொலிகின்றது. எடிசன் (Edision) இந்த மின் கல அடுக்கின் நேர் முனையை (Positive End) இந்த விளக்கின்மேல் அமைத்துள்ள தட்டோடு சேர்க்கின்றார். அப்படிச் சேர்க்கின்ற வழியிலே ஒரு மின்சாரம் அளக்கும் கருவியை அமைக்கின்றார். திரிகம்பி சூடேறச் சூடேற மின்சாரம் அளக்கும் கருவியில் மின்சார சக்தியின் அளவு மிகுதியாகிக்கொண்டே வருகிறது.



படம்: 2

மின்சாரம் விளக்கினுள்ளே திரிகம்பியிலிருந்து தட்டுவழியாகப் பாய்ந்து வெளியே போகும்போது அந்தக் கருவி அதனைக் காட்டுகிறது. இவ்வாறு வெளியே போகும் மின்சாரம் எங்கிருந்து வருகிறது? திரிகம்பிக்கும் தட்டுக்கும் இடையே நேர் தொடர்பு ஒன்றுமில்லை. இடைவெளியே இருக்கிறது. நேர் முனைக்குப் பதிலாக எதிர் முனையைத் தட்டோடு சேர்த்தால் மின்சாரம் எதிர்வரக் காணோம். எனவே, எதிர் முனைமேல் பாயாது நேர் முனையோடு தொடர்புற்ற தட்டின்மேல் பாய்வது எதிர் மின் ஊட்டம் பெற்றதாகவே இருக்க வேண்டும். வேறுவழி இல்லாமையால் திரிகம்பியில் இருந்துதான் இந்த எதிர் மின்னிகள் பாயக் கூடும். இவற்றிற்குச் சுடு செல்லிகள் (Therm-ions) என்று எடிசன் பெயரிடுகிறார். எந்த உலோகத்தினாலே திரிகம்பிகள் செய்துவைத்தாலும் சூடேறியவுடன் அவற்றிலிருந்து சுடு செல்லிகள் பாய்கின்றன. இதனாலும் இந்த எதிர் மின்னிகள் எல்லாப் பொருள்களிலும் காணக்கிடப்பதோர் அமைப்பு என்பது உறுதியாகிறது.

எதிர் மின்னி

இந்த எதிர்முனைக்கதிர் பட்ட இடம் எதிர் மின்னூட்டம் பெற்று விளங்கக் காண்கிறார், பெரின் (Perrin) என்ற பிரஞ்சு ஆசிரியர். எனவே, மின்னிகள் எழுவதும் அவை எதிர் மின்னூட்டம் பெறுவதும் யாரும் மறக்க முடியாதவை. ஆனால், இவற்றிற்கும் கதிருக்கும் என்ன தொடர்பு? துப்பாக்கி வெடிக்கும்போது எழுகின்ற ஒளிக்கும் துப்பாக்கிக்கும் தொடர்புண்டா? இல்லை! அதுபோல இங்கு எழும் மின் துகளுக்கும் இந்த எதிர் முனைக்கதிர் ஒளிக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கலாமன்றோ? இதனை ஆராயத் தொடங்குகின்றார் தாம்ஸன் (Thomson) என்ற பெரியார். ஆங்கில நாட்டு அணு ஆராய்ச்சித் தந்தையார் என இவரைக் கூறலாம். எதிரே கண்டதுபோல ஒரு குழை அமைக்கின்றார். நேரே ஒளி பாய்கின்றது. எதிர்முனைக் கதிர் ஒளி (Cathode rays) மின் தட்டுகள் வழியே போகும்போது நேர் முனைக்காகச் சாய்ந்து வளைந்து ஓடுகிறது. எனவே, இதன் மின்னூட்டம் எதிர் மின்னூட்டம் என்பது தெளிவு. இவ்வாறு வளைவதனை மின்காந்தம் கொண்டு எதிர்ப் புறமாக இழுத்ததும் பழையபடி நேரே கதிர்கள்



படம்: 3

போகின்றன. முடிவிடத்தில் மட்டும் அல்லாமல் கதிர் முழுதுமே எதிர்மின்னிகளாக இருப்பது புலனாகிறது.

மின்சாரம் பாய்ந்த அளவு, மின்காந்த அளவு முதலியவற்றினை அளந்து எவ்வளவு வேகத்தில் இந்தக் கதிர் பாய்கிறது எனக் காண்கிறார். மூன்றாம் படத்தில் போலக் காண்கின்றார். ஓர் ஆச்சரியமான காட்சி தோன்றுகிறது. எந்த ஆவியைப் பயன்படுத்தினாலும், அந்த ஆவியின் பொருண்மைக்கும், அதன் ஊட்டத்தின் அளவிற்கும் உள்ள தொடர்பு எப்பொழுதும் ஒன்றாகவே இருக்கக் காண்கிறார். எல்லாப் பொருள்களிலும் இந்த எதிர் மின்னி உண்டு என்பது தெரிகிறது.

மயிர் இழைக் கணக்கு

இந்த எதிர் மின்னிகளின் ஊட்டத்தை அளக்கத் தொடங்குகிறார். மின்னூட்டம் பெற்ற தண்ணீர்ச் செல்லிகள் மேகம்போல ஆவியாக இருக்கும்போது மின் தட்டுகளின் இடையே அவற்றைப் பரவவிடலாம். அப்பொழுது அவை வலித்து இழுக்கப்பெறும் அளவு கண்டு ஊட்டத்தின் அளவைக் காணலாம் என ஆராயத் தொடங்கினார். ஆனால், நீர் விரைவில் ஆவியாக மாறிப் போய்விடுகிறது. பின்னர் மில்லிகன் என்பவர் நீருக்குப் பதிலாக எண்ணெயைப் பயன்படுத்துகிறார். கீழேயுள்ள நான்காம் படத்தில் கண்டபடி எண்ணெயை அணுவாக்கும் அமைப்பு ஒன்று இருக்கிறது. இது ஓர் அறைவடிவாக முடிகின்றது. அந்த அறையிலிருந்து எண்ணெய்த் துளிகள் தாக்குண்டு செல்லிகளாகி கீழே இறங்கும். அவ்வாறு இறங்கும் இடத்தில் மேலும் கீழும் மின் தட்டுகள் வைத்து மின் மண்டலத்தினை விளைவிக்கலாம். மின்சாரம் பாயாதபோது எண்ணெய்த்துளிகள் கனத்தாலே கீழே இறங்கும். மின் மண்டலத்தில் மின்சாரம் பாயும்போது அந்தச் செல்லிகளின் மின்னூட்டத்திற்கு ஏற்ப நேர்முனைத் தட்டையோ எதிர்முனைத் தட்டையோ நாடிப்போகும்.



படம்: 4

ஆனால், திடீரென இந்தச் செல்லியின் வேகம் மிக்கு எழும். எதனால்? மற்றோர் செல்லியில் இருந்து எதிர் மின்னி ஒன்றோ இரண்டோ பெறுவதால் ஆம். இந்த எண்ணெய்ச் செல்லிகளைச் சாதாரணமாகக் காணமுடியாது. அவைகளைக் காண்பதற்கு ஒருவித ஏற்பாடு செய்வார்கள். அதாவது மின் மண்டலத்தினுள்ளே பிரகாசமான ஒளியைப் பாய்ச்சி, அம் மண்டலத்தைத் தொலைநோக்கி கொண்டு பார்க்கும்போது ஒவ்வொன்றாக இறங்கும் செல்லித்துளிகளை நன்கு கண்டு ஆராயலாம். ஒரு குறித்த மயிர் இழை அளவு இந்தச் செல்லி மேல் எழுவதற்குப் பிடிக்கும் காலத்தினை இக் கட்டுரையின் இறுதியில் உள்ளது போலக் குறித்து வைத்துள்ளார்கள். இப்படி எல்லாம் பார்த்ததன் பயனாக எதிர் மின்னிகள் தனித்தனியாக இருக்கின்றன என்பது விளங்கிற்று. மின் ஊட்டத்தின் அளவு ஏறக்குறைய ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று முழு முழு அளவாகக் குறிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆதலின், மின் அணு என்று கூற இடம் உண்டு. இந்த எதிர் மின்னியின் மின்னூட்டம் ($4{\cdot}774 \times 10^{-10}$) இயங்கா மின் நிலைத்தனியன் (Electro Static units) என மில்லிகன் (Millican) முடிவு செய்கின்றார். இதுவே நேர் இயல் மின்னியின் ஊட்டமுமாம். இந்த ஆராய்ச்சிக்கு இப் பெரியார் நோபல் பரிசு (Nobel Prize) பெறுகின்றார். ஆராய்ச்சி எல்லாம் நுண்ணிய கருவி அமைப்பதிலேயே இருப்பது விளங்குகிறது. ஆனால், இவை எல்லாம் 1909 முதல் நிகழ்பவை. இதற்கு இடையில் நிகழ்வனவற்றை நாம் காணுதல் வேண்டும். அதனைப் பின்னர்க் காண்போம்.

தொலைநோக்கி கொண்டு துளியினைப் பார்த்தால், தொலைநோக்கி யின் அடியில் ·5222 செண்டிமீடர் இடையீடுள்ள மயிரிழைக் கோடுகள் இருந்தன. இவ்வளவு தூரம் எழ எவ்வளவு நேரமாகிறது என்று கண்டார்.

கால அளவு	
12·5	[வேறொரு நிலையும் எழாமற்போனால் ஏறக்குறைய இந்தக் கால அளவில் ஒரு மயிரிழை யளவு துளி எழும்.]
12·4	அதே கால அளவே; நிலைமாறவில்லை என்பதாயிற்று.
21·8	கால அளவு முன்னினும் 9 அளவு மிகுகிறது. நிலை மாறியது என்றபடி. என்ன மாறுதல்? இது நேர்மின்னூட்டம் பெற்றது. இதனை மெல்ல எழச்செய்வது இதற்கு மாறான மின்னூட்டம் பெற்ற செல்லியாம். ஆதலால் எதிர்மின் செல்லி துளியிற் புகுந்தது எனலாம்.
34·8	இங்கும் 13 அளவு மிகுகிறது. ஆதலின் மேலே போல இங்கும் துளி எதிர் மின் செல்லியைப் பற்றிக் கொண்டதால் காலந்தாழ்த்து எழுகிறது.
84·5	இங்கு 50 அளவு மிகுகிறது. இங்கும் எதிர் மின் செல்லியைத் துளி பற்றியதாதல் வேண்டும்.
85·5	௸
34·6	85·5-ல் இருந்து 34·6-க்குக் குறைகிறது. ஆதலின் முன் 34·8 அளவு எழுந்ததிலிருந்து 84·5 அளவு எழ எதிர் மின்னச் செல்லி எவ்வளவு அளவில் பற்றப் பெற்றதோ அவ்வளவு அளவில் இப்போது நேர்மின் செல்லியைத் துளி பற்றுகிறது. இதனால் எதிரும் நேரும் ஒன்றை ஒன்று மறுக்கத் துளி பழமைபோல் எழுகிறது.

சுழற் காற்று

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூ[ல்]
24717
சென்னை-600 008

திரு. தா. ஏ. ஞானமூர்த்தி, B.O.L.

13

[முன் கதைக் குறிப்பு: முருகனும் கண்ணனும் உயிரினிய நண்பர்கள். சந்திரா என்னும் நங்கை கண்ணனைக் காதலித்தாள். அவள் காதலிப்பது கண்ணனுக்குத் தெரியாது. ஆனால் சந்திராவின் தந்தை பொருளாசையால் அவளை நரசிம்மன் என்ற முரடனுக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டார். ஒரு நாள் இரவு நரசிம்மன் சந்திராவை அடித்துத் துன்புறுத்தினன். துன்பத்தைப்பொறுக்க முடியாமல் சந்திரா மாளிகையிலிருந்து வெளியே ஓடினாள். அவளை நரசிம்மன் பின்தொடர்ந்து ஓடிப்பிடித்தான். அவன் பிடியிலிருந்து விலகிக்கொண்டு சந்திரா அவனைத் தள்ளினாள். அப்போது விரைவாக வந்துகொண்டிருந்த மோட்டார் வண்டி மீது நரசிம்மன் மோதுண்டு இறந்தான். சந்திரா கைது செய்யப்பட்டாள்.

முருகன் தபால் பெட்டியின்கண் விமலா என்ற கல்லூரி மாணவியைக் கண்டு காதலித்தான். விமலாவும் முருகன்பால் அளவிலாக் காதல் கொண்டாள். காதல் வளர்ந்து இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ள உறுதி கொண்டனர். ஒரு நாள் முருகன் தன் நண்பனாகிய கண்ணனுக்கு விமலாவை அறிமுகம் செய்துவைத்தான். கண்ணனுக்கு விமலாபால் அவனை அறியாமலே காதல் வளர்ந்தது. நாளடைவில் கண்ணன் காதல் நோய் மிகுந்து, அவனுடைய உடல்நிலை கவலைக்கிடமாகிவிட்டது. தன் நண்பன் நோய்க் காரணத்தை முருகன் அறிந்து அவனுக்காகத் தன் காதலைத் தியாகம் செய்து பம்பாய் நகரம் அடைந்தான். அங்குப் பல நாள் அவன் அலைந்து வாடினான். இறுதியில் அவனுக்கு முகுந்தலால் என்னும் செல்வர் வீட்டில் தங்க வாய்ப்பு ஏற்பட்டது.

முகுந்தலால் ஆலையில் பொருளாளர் பதவி முருகனுக்குக் கிடைத்தது. மேலும், முகுந்தலாலின் செல்வக் குமாரியான ஜயகுமாரிக்குப் பாடம் கற்பிக்கும் பொறுப்பையும் அவன் ஏற்றான். அவனிடம் பாடம் கேட்கும் சாக்கிலே, காதலை வளர்க்க முற்பட்டாள் ஜயா. முருகனோ அவளைத் தன் உடன் பிறந்தாளாகக் கொண்டு நெருங்கிப் பழகினான். ஒரு நாள் அவர்கள் மிக நெருங்கி அமர்ந்து பேசிக்கொண்டிருந்ததை மோதிலால் என்பவன் கண்டு மனம் புழுங்கினான். அவன் ஜயாவின் மாமன்; அவளைத் திருமணம் செய்துகொள்ள மனக் கோட்டை கட்டுபவன். முருகனுக்குக் கேடு சூழ்வதற்கு ஏற்ற சூழ்ச்சியை அவன் இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்தான்.

கண்ணனுடைய பெற்றோர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி விமலாவைக் கண்ணனுக்குத் திருமணம் செய்து கொடுக்க அவள் தந்தை பெரியசாமிப் பிள்ளை உடன்பட்டார். இதைக் கேட்டதும் விமலா திடுக்கிட்டாள். தன் அருமைக் காதலன் முருகனைத் தேடிக் கண்டுபிடித்து அவனை அடைவது என்று உறுதி செய்து பெற்றோர்களுக்குத் தெரியாமல் வீட்டை விட்டகன்றாள். முருகன் பம்பாயில் முகுந்தலால் வீட்டில் இருப்பதாகச் சென்னை மருத்துவவிடுதியிலிருந்து அறிந்து பம்பாயுக்குச் சென்றாள்; முகுந்தலாள் வீட்டுப் பூங்காவில் முருகனும் ஜயகுமாரியும் இருப்பதைத் தூரத்திலிருந்தே கண்டாள். முருகன் ஜயகுமாரியைக் காதலிப்பதாக அவள் தவறாக நினைத்தாள்; பின்பு நெஞ்சம் நொந்து, வீடு திரும்பி, கண்ணனை மணக்க இசைந்தாள்.

விமலா கண்ணனை மணந்து, மனைவிக்குரிய கடமைகளில் ஒரு சிறிதும் தவறாது இல்லறம் நடத்திவந்தாள். ஆனால், அவள் உள்ளத்தில் கண்ணனுக்குரிய காதல் இல்லை.]

●

உலகம் பலவிதம். இவ்வுலகத்தில் நல்லவர்களும் உண்டு; தீயவர்களும் உண்டு. பிறர் நன்மையே கருதி உழைக்கும் பெரியோர்களும் உண்டு. தன்னலத்திற்காகவே பாடுபடும் கயவர்களும் உண்டு. உள்ளத்தில் தோன்றியதை நேர்மையாக எடுத்துப் பேசும் உயர்ந்தோரும் உண்டு; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி வஞ்சிக்கும் புல்லியர்களும் உண்டு. ஆகையால் இவ்வுலகத்தில் நன்மையும் நிறைந்திருக்கிறது; தீமையும் நிறைந்திருக்கிறது. நன்மையால் இவ்வுலகம் இன்பம் அடைகிறது; தீமையால் துன்பம் பெறுகிறது. தீமையால் துன்பமுற்றுத் தேய்கின்ற உலகம், நன்மையால் இன்பம் எய்தி நிறைவு பெறுகிறது.

மோதிலால் தீமை பெருக்கித் துன்பத்தை மிகுவிப்போர் இனத்தைச் சேர்ந்தவன் என்று கூறலாம். அவன், தன் தமக்கை மகளாகிய ஜயகுமாரியோடு முருகன் அளவளாவி அன்புடன் ஒழுகுவதைக் கண்டதிலிருந்து அவன் உள்ளத்தில் தீமை கொழுந்துவிட்டு எரியத்தொடங்கிற்று. உண்மையாகவே அவன் பொறாமைத் தீயால் பெரிதும் வெந்து சாம்பினான். முருகன் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவன் உடலைக் கிழித்தெறியலாமா என்று எண்ணினான். ஆனால், அடுத்த கணத்தில் அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டான். அவன் சூழ்ச்சியிலே வல்லவன்; வஞ்சகத்தில் கைதேர்ந்தவன். அவன் முருகனிடத்தில் கொண்ட பொறாமை அவனுடைய நயவஞ்சகத்தை இன்னும் வலிமை பெறச் செய்தது. ஆகையால் நயவஞ்சகத்தால் முருகனை வெல்ல அவன் முடிவு செய்தான்.

ஒரு நாள் மாலை முருகன் வழக்கம்போல் ஜயகுமாரிக்குப் பாடம் கற்பித்துவிட்டு, அவளோடு அறைக்கு வெளியே வந்தான். அப்போது அங்கே மோதிலால் மிக்க யோசனையில் ஆழ்ந்தவனாய் மெல்ல உலாவிக்கொண்டிருந்தான். ஜயா மோதிலாலைக் கண்டதும் 'அதோ அங்கிருப்பவர் என்னுடைய மாமா. வாருங்கள் தங்களை அவருக்கு அறிமுகஞ்செய்து வைக்கிறேன்' என்று முருகனிடம் சொல்லி அவனை மோதிலாலிடம் அழைத்துச் சென்றாள். அவள் மோதிலாலை நோக்கி, "மாமா! இதோ இவர்தான் முருகன்; என் அன்பிற்குரிய ஆசிரியர்" என்றாள்.

'ஓகோ! இவர்தான் முருகனோ?' என்று மோதிலால் கூறி, புன்முறுவலோடு முருகனை அணுகி அவனோடு கைகுலுக்கினான். அவனுடைய புன்முறுவலும் கை குலுக்கலும் வெறும் புறத் தோற்றச் செயல் என்று கூறவேண்டுவதில்லை. அவன் முருகனை நோக்கி, 'முருகா, தங்கள் பெருமை அனைத்தையும் என் தமக்கை எனக்கு விளக்கமாகக் கூறினார்கள். தங்கள் பெருமையைக் கேட்டதிலிருந்து தங்களைக் காணவேண்டுமென்று பேரவாக் கொண்டிருந்தேன். என் அவா இன்று நிறைவேறியதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்' என்றான்.

'தங்களுடைய பேரன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்' என்று முருகன் முகமலர்ந்து சொன்னான்.

'நாம் இருவரும் சற்று நேரம் வெளியே சென்று உலாவி விட்டு வரலாமே! தங்களுக்கு இப்போது வேறு வேலை ஏதாவது இருக்கிறதா' என்று கேட்டான் மோதிலால்.

'எனக்கு இப்போது ஒரு வேலையும் இல்லை, மோதிலால். உலாவச் செல்லலாம்' என்று மிக்க மகிழ்ச்சியோடு முருகன் பதிலுரைத்தான்.

இருவரும் கடலோரமாக மெல்ல நடந்து சென்றார்கள். மோதிலால் தமிழகத்தைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டுக்கொண்டே சென்றான். முருகன் அவற்றிற்கெல்லாம் அமைதியாகப் பதிலுரைத்தான். மோதிலாலும் தன்னுடைய சுற்றுப் பிரயாணங்களில் தான் கண்ட பல வேடிக்கையான நிகழ்ச்சிகளை மிக்க சுவையோடு சொன்னான். அவன் சொன்னவை அனைத்தும் முருகனுக்கு மிகவும் இன்பமூட்டின. மோதிலால் அன்புமிகுந்த நண்பன் போல முருகனிடம் மிகத் திறம்பட நடித்தான். பாவம், முருகன் உள்ளம் களங்கமற்றது. அவன் பிறரை முழுதும் நம்பிவிடும் பெருங்குணம் வாய்ந்தவன். எவரையும் சந்தேகிக்கும் புல்லிய தன்மை அவனிடத்தில் ஒரு சிறிதும் கிடையாது. ஆகையால் மோதிலால் தன்னிடம் உண்மை அன்பு பூண்டு ஒழுகுவதாகவே முருகன் கருதினான். அவனுடைய ஒவ்வொரு சொல்லும் நஞ்சு கலந்த தேன்

என்பதை முருகன் அறிந்து கொள்ளவில்லை.

இருவரும் ஒரு மணி நேரம் இங்ஙனம் அளவளாவிப் பேசிக் கொண்டே கடலோரமாக உலாவினர்கள். பிறகு அவர்கள் தத்தம் வீடு திரும்பினர்.

* * *

முருகன் பஞ்சாலையில் மிகத் திறம்படப் பணியாற்றிவந்தான். பொருள் காப்புத்தொழில் மிகவும் பொறுப்புடையது என்று கூறவேண்டியதில்லை. எனினும் உண்மையும் நேர்மையும் உடையவர்கள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை அல்லவா? முருகன் பொறுப்பில் இருந்த பணம் எப்பொழுதும் பஞ்சாலையின் வரவு செலவுகளுக்கு ஏற்ப இருக்கும். ஒரு காசு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ என்றும் இருந்ததில்லை. மேலும் முருகன் பஞ்சாலையில் சேர்ந்த பிறகு பஞ்சாலைக்கு லாபம் பன்மடங்கு அதிகரித்தது. நல்ல உள்ளம் படைத்தவர்கள் எங்கிருப்பினும் அவ்விடம் நன்மை மிகுந்து பொலியும் போலும்! முகுந்தலால் முருகனைப் பொருள் காப்பாளராகத் தாம் பெற்றது தம்முடைய அரிய பேறாகவே கருதி அகமகிழ்ந்தார். முருகன்பால் அவருக்கு அன்பும் பெருமதிப்பும் மேலும் மேலும் வளர்ந்தன.

பஞ்சாலையின் ஊழியர்களும் தொழிலாளர்களும் முருகனுடைய அரும் பெருங் குணங்களை அடிக்கடி எடுத்துப் பேசி மகிழ்வார்கள். அவன் எல்லோரிடத்தும் பெருந்தன்மையாக நடந்து

கொள்வான். எவரையும் மனம் புண்ணுகும்படி பேச அவனுக்குத் தெரியாது. அவனை ஓர் உத்தமன் என்றே அனைவரும் போற்றினார்கள்.

மோதிலால் முருகனை நாள்தோறும் சந்தித்து அன்புரையாடி வந்தான். பெரும்பாலும் அவன் முருகனைப் பஞ்சாலை அலுவலகத்தில் சந்திப்பது வழக்கம். அலுவலகத்தில் முருகனுக்கெனத் தனி அறை உண்டு. மோதிலால் அங்கு முருகனைச் சந்தித்துப் பேசும்போதெல்லாம் அவனுடைய நாட்டம் பணப்பெட்டியின்மீது இருக்கும். அவனுடைய வாய் அன்பு மொழிகளை அள்ளி வீசிக்கொண்டிருக்கும். ஆனால், அவன் உள்ளம் தன்னுடைய சூழ்ச்சி இன்னும் நிறைவேறுதற்கில்லையே என்று வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும்.

ஒருநாள் மாலை பஞ்சாலைத் தொழில் முடிவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. அப்போது மோதிலால் முருகன் அறைக்குச் சென்றான். ஆனால், முருகன் அங்கு இல்லை. மோதிலால் உடனே அறைக்கு வெளியே வந்து அங்கிருந்த வேலைக்காரனை நோக்கி 'முருகன் எங்கே?' என்று கேட்டான்.

'பெரிய ஐயாவிடம் சென்றிருக்கிறார்' என்றான் வேலைக்காரன். அவன் 'பெரிய ஐயா' என்றது பஞ்சாலைக்குரியவரான முகுந்தலாலைத்தான்.

'அப்படியா? சரி' என்று சொல்லிக்கொண்டே மோதிலால் மீண்டும் முருகன் அறைக்குள் நுழைந்தான். நுழைந்து முருகன் மேசை அறையை மிக அவசரமாகத் திறந்தான். அதில் பணப்பெட்டியின் சாவி இருப்பதைக் கண்டான். முகுந்தலால் முருகனை மிக அவசரமாக அழைத்ததால் மேசை அறையை அவன் பூட்டிவிட்டுப்போக மறந்துவிட்டான். மோதிலால் சாவியைக் கண்டதும் தன்னுடைய எண்ணம் நிறைவேறிவிட்டதாகவே அவன் கருதி மனம் பூரித்தான்; உடனே அச்சாவியைக் கொண்டு பணப் பெட்டியைத் திறந்தான். பெட்டிக்குள் பண நோட்டுக்கள் அடுக்கடுக்காக அடுக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒரு அடுக்கை எடுத்துத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு, பெட்டியை மிக விரைந்து மூடிவிட்டுச் சாவியை மேசை அறைக்குள் முன்னிருந்ததுபோலவே வைத்துவிட்டான். பிறகு அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தான். அவனுக்கு எதிரில் இருந்த மேசைமீது செய்தித்தாள் ஒன்று இருந்தது. மோதிலால் அதை எடுத்துப் படித்துக்கொண்டு இருந்தான். அவன் முகத்தில் அமைதி தோன்றியது. அவன் நினைத்தது நிறைவேறியது அல்லவா?

'தாங்கள் எப்போது வந்தீர்கள் மோதிலால்? வந்து நெடுநேரம் ஆகிவிட்டதோ? மன்னிக்கவும்' என்று சொல்லிக்கொண்டே முருகன் அறைக்குள் வந்தான்.

'இப்போதுதான் வந்தேன்......சரி, புறப்படுங்கள் போகலாம்' என்றான் மோதிலால்.

'எங்கே?'

'படக் காட்சிக்கு'

'படக் காட்சிக்கா? ஜயா என்னை எதிர் பார்த்துக்கொண்டிருப்பாளே! அவளுக்குப் பாடம் சொல்லவேண்டாமா?'

'தினம்தான் அவளுக்குப் பாடம் படிக்கிறீர்களே! ஒரு நாளைக்கு இல்லாமற்போனால் என்ன?' என்று மோதிலால் சொல்லிச் சிரித்தான். பிறகு, 'இன்று தாங்கள் என்னுடன் வந்துதான் ஆகவேண்டும்' என்று அவன் அன்பு வழியப் பேசினான்.

'தங்களுடைய அன்புக்கு நான் கட்டுப்பட்டவன். மேலும் இன்று தாங்கள் மிக உற்சாகத்தோடு காணப்படுகிறீர்கள். தங்களுடைய உற்சாகத்தைக் குலைக்க நான் விரும்பவில்லை' என்று முருகன் சொல்லிக்கொண்டே புறப்பட்டான்.

அன்று மோதிலால் அளவில்லாமல் செலவு செய்தான். சாதாரணமாக அவன் பணத்தை இறுக்கிப் பிடித்தே

செலவு செய்வது வழக்கம். ஒரு காசு தன்னிடமிருந்து போவதென்றால் அவன் மனம் பொறுக்காது. தாராளமாகச் செலவு செய்தற்கு விரிந்த உள்ளம் வேண்டும் அல்லவா? அன்று மோதிலால் அளவு மீறிச் செலவு செய்தது முருகனுக்கு வியப்பாகவே இருந்தது.

முருகனும் மோதிலாலும் படக்காட்சியைப் பார்த்துவிட்டு, இரவு சுமார் 10 மணிக்கு வீடு திரும்பினர்.

மோதிலால் தன் வீட்டுக்கு வந்ததும் முகுந்தலாலைப் பார்க்க விரைந்து சென்றான். அப்போது முகுந்தலால் அதுவரைத் தாம் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடி மேசைமீது வைத்துவிட்டுத் தம் படுக்கை யறைக்குப் போய்க்கொண்டிருந்தார். மோதிலால் அவரைக் கண்டதும் தான் மெல்ல உலாவிக்கொண்டு வருவது போலப் பாவனை செய்தான். முகுந்தலால் அவனை நோக்கி, 'என்ன மோதி, இந்த நேரத்தில் உலாவிக்கொண்டு வருகிறாய்? உனக்குத் தூக்கம் வரவில்லையா, என்ன?' என்று கேட்டார்.

'கவலை யிருந்தால் எப்படித் தூங்க முடியும்' என்றான் மோதிலால்.

'கவலையா! உனக்கு என்ன கவலை, அப்பா?

'நமது பஞ்சாலையைப் பற்றித்தான் கவலை. அதனுடைய பணம் சிறிது சிறிதாகக் களவு போவதாக எனக்குத் தோன்றுகிறது'

'இதைக் குறித்தா கவலைப்படுகிறாய்! முருகன் இருக்கிற வரையில் இதைப் பற்றிக் கவலையே வேண்டாம், மோதிலால்.'

'ஆனால்......வேலியே பயிரை மேய்ந்தால்?'

இதைக் கேட்டதும் முகுந்தலாலுக்குச் சினம் எழுந்தது. 'மோதிலால், நீ இன்னும் முருகனை நன்கு அறிந்து கொள்ளவில்லை. அவனைப் போல ஓர் உத்தமனை இவ்வுலகிலே காண்பது அரிது. அவனிடத்திலா உனக்கு ஐயம்?' என்று கடுகடுத்த குரலில் அவர் கூறினார்.

'நான் முருகனை நன்கு அறிந்து தான் பேசுகிறேன். அவனோடு சில நாட்களாய் மிக நெருங்கிப் பழகிவருகிறேன். அவன் நாள்தோறும் செலவு செய்வதைக் கவனித்தால் அவன் பெறும் சம்பளத்தைவிடப் பன்மடங்கு இருக்கும். அவனுக்கு எங்கிருந்து இவ்வளவு பணம் கிடைக்கும்? மேலும் அடிக்கடி சென்னையிலுள்ள தன் உறவினர்களுக்குப் பணம் அனுப்புகிறான். அவன் பஞ்சாலைப் பணத்தைத்தான் கையாடுகிறான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். எச்சரிக்கையாகத் தங்களுக்கு இதைத் தெரிவிக்கிறேன். பிறகு தங்கள் விருப்பம்' என்று பொய்களை அடுக்கிப் பேசினான் மோதிலால்.

'எனக்கு முருகனிடத்தில் சிறிதும் சந்தேகம் இல்லை. எனினும் நாளைக்குக் கணக்கைப் பார்த்தால் உண்மை விளங்கிவிடுகிறது. பிறகு நீ முருகனைச் சந்தேகிக்கவே முடியாது அல்லவா?, என்று முகுந்தலால் உரைத்தார்.

மறுநாள் காலை முகுந்தலால் மோதிலாலோடு முருகன் அலுவலகத்திற்குச் சென்றார். அங்குக் கணக்குப் புத்தகத்தை எடுத்துக் கணக்கை ஆராய்ந்தார். பிறகு பணப் பெட்டியிலுள்ள பணம் எவ்வளவு என்று முருகனைக் கேட்டார். அவன் சொன்ன தொகை கணக்குப் புத்தகத்தில் எழுதியிருந்த தொகைக்குச் சரியாக இருந்தது. முன்னாள் மாலை மோதிலால் வருவதற்கு முன்புதான் முருகன் புத்தகத்தில் கணக்கு எழுதி அக் கணக்குக்குச் சரியாகப் பணத்தை எண்ணிப் பணப் பெட்டியில் வைத்தான். ஆகையால் அத் தொகை அவனுக்கு நினைவு இருந்தது. முருகன் தொகையைச் சரியாகச் சொன்னதும், முகுந்தலால் பணத்தை எண்ணும்படியாக முருகனிடம் கூறினார். முருகன் உடனே பணத்தை

எடுத்து எண்ணினான். ஐயோ, ரூபாய் ஐந்தாயிரம் குறைவாக இருந்தது! முருகன் திகிலடைந்தான். 'நேற்று மாலை சரியாகப் பணம் இருந்தது. இப்பொழுது எப்படிக் குறைகிறது என்று தெரியவில்லை' என்றான் முருகன்.

'இது முழுப் பொய். பணத்தை இவன்தான் எடுத்திருக்கவேண்டும். திருடன்' என்று சொல்லிப் பிறகு முருகனை நோக்கி, 'முருகா! நீ நல்லவன்போல நடித்து எங்களை ஏமாற்றலாம் என்று நம்பியிருக்கிறாயா? அது எங்களிடம் நடக்காது' என்றான் மோதிலால். பிறகு அவன் முகுந்தலாலைப் பார்த்து, 'இத் திருடனைச் சும்மா விடக்கூடாது, மாமா. இருங்கள், இதோ வருகிறேன்' என்று சொல்லி விரைவாகச் சென்று 'டெலிபோனை' எடுத்து முருகன் பணத்தைக் களவாடியதாகப் 'போலிஸு'க்கு அறிவித்தான். மோதிலாலுடைய மிருக இயல்பு அப்பொழுதுதான் முருகனுக்குப் புலனாயிற்று.

முருகன்தான் பணத்தை எடுத்திருக்கவேண்டும் என்று முகுந்தலால் நம்பினார். சீற்றம் எழுந்தது. அவர் கண்கள் சிவந்தன! உதடு துடித்தது! ஐயாயிரம் ரூபாய் போய்விட்டது அல்லவா? அத்தொகையோடு அவருடைய நல்ல பண்புகளும் போய்விட்டன. செல்வர்களுக்குப் பணம் தானே பெரிது! சிலருக்கு அதுவே உயிர். பணம் போய்விட்டதென்றால் அவர்களுடைய உயிரே போய்விட்டதாகக் கருதுவார்கள். ஆகையால் முகுந்தலால் முருகனை நோக்கி, 'துரோகி, நீ ஒரு நல்ல பாம்பு என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டது. திக்கற்று வந்த உன்னை என் அருமை மகன்போலக் கருதி அளவிலா அன்புடன் ஒழுகினேனே! அதற்கு நீ செய்த நன்றி இதுதானா? சீ! என் முன் நில்லாதே!' என்று பாம்புபோல் சீறினார்.

முருகன் தலைகவிழ்ந்து நின்றான். தான் குற்றமற்றவன் என்பதை முகுந்தலாலுக்கு எடுத்துக்கூற எண்ணினான். ஆனால், அவன் நா எழவில்லை. தன்னோடு அவ்வளவு நாள் நன்கு பழகிய முகுந்தலால் தன்னுடைய உண்மைத் தன்மையைத் தெரிந்து கொள்ளவில்லையே என்று அவன் உள்ளம் நினைந்து நினைந்து வருந்தியது. 'இவ்வுலகம் பொல்லாதது. உண்மைக்கு இவ்வுலகத்தில் இடம் இல்லை. உண்மையும் நேர்மையும் அற்ற உலகத்தில் உயிர்வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே மேலானது' என்று அவன் எண்ணி உலகத்தை வெறுத்தான். ஆகையால் முடிவில் அவன் தன்னுடைய குற்றமற்ற தன்மையை எடுத்துக்கூறுவதில்லை என்று உறுதி செய்துகொண்டான்.

மோதிலால் 'போலீஸு'க்கு அறிவித்துப் பதினைந்து நிமிஷங்களுக்குள் போலீஸ் அதிகாரி இரு சேவகர்களோடு பஞ்சாலைக்குள் நுழைந்தார். முருகனுடைய கைகளுக்கு விலங்கிடப்பட்டது.

பத்து நாட்கள் கழிந்தன. காலை பத்துமணி. பப்பாய் சிறையிலிருந்த கைதிகளுடைய பார்வை அனைத்தும் அன்று அங்குப் புதியதாக வந்த ஒருவன்மீது ஊன்றிப் பதிந்தன. அக்கைதிகளில் ஒருவன் மெதுவாக அவனை அணுகித் 'தாங்கள் எந்தக் குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை பெற்றீர்கள்' என்று கேட்டான். 'நான் இவ்வுலகில் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்த குற்றத்திற்குத்தான் இத்தண்டனை' என்றான் முருகன். பிறகு அவன் அங்கிருந்த கைதிகள் பலரையும் கண்ணுற்றான். 'ஐயோ, என்னைப்போல இப்பாழும் சிறையில் அடைக்கப் பெற்றவர் இவர்களில் எத்தனை பேரோ! நல்ல உலகம் இது!' என்று நினைத்துப் பெருமூச்செறிந்தான்.

(தொடரும்)

உள்ளத்தின் உண்மை

குறிப்பு:— மனிதனின் குறைபாடுகள் பல. நன்கு ஆராய்ந்தால் இக் குறைகள் பலவற்றிற்கு உள்ளமே காரணமாக அமைந்திருக்கின்றது என்பது புலனாகும். உள்ளத்தைப் பற்றிய கேள்விகளுக்கு உள நூல் ஆசிரியர் திரு. தா. ஏ. சண்முகம் அவர்கள் இப் பகுதியில் தக்க விடையளிக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கேள்விகளை எழுதி உள்ளத்தின் உண்மையை உணரலாம்.

கேள்விகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும். கேள்விகளை எழுதி அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப் பெறா. எனினும் கேள்விகளோடு அவர்களுடைய பெயரையும் முழு முகவரியையும் குறித்து "ஆசிரியர், 'கலைக்கதிர்' பூளைமேடு, கோயமுத்தூர்" என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

எனக்கு ஏதனால் பேசும்பொழுது வாய் திக்குகிறது? அதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

வாய் திக்குதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று பேசுவதற்குரிய அவயவங்களில் குறைபாடுகள் இருப்பதனாலாகும். மற்றொன்று, கடந்த காலத்தில் உமது உள்ளத்திற்கு ஒவ்வாத செய்கைகளோ நடத்தைகளோ திடீரென்று ஏற்பட அவைகளினால் அதிர்ச்சி அடைந்து, இந்தக் கோளாறை அடைந்திருக்கலாம். இது பெரும்பாலும் குழந்தைப் பருவத்தில் ஏற்பட்டிருக்கலாம். முதல் காரணமாக இருந்தால் ஒரு மருத்துவரை அணுகி அவரைப் பேசுதற்குரிய அவயவங்களைப் பரிசோதனை செய்யச் சொல்லி அவர் கூறுமாறு நடத்தல் வேண்டும். இரண்டாவது காரணமாயிருப்பின், உளப் பாகுபாடு அறிஞர்களை (Psychoanalysts) அணுகி, அவர்களைக் கொண்டு உள்ளத்தைப் பரிசோதனை செய்து குறையை நிவர்த்தி செய்துகொள்ளுதலே வழி.

கல்லூரியிலாயினும் சரி, பள்ளியிலாயினும் சரி, யாராவது ஒருவர் என்னுடன் அன்பாகப் பேசிவிட்டால் அவரை நம்பிவிடுகிறேன். கடைசியில் பல துன்பங்கள் அடைகிறேன். இது என் தவறு?

'சேரிடமறிந்து சேர்', 'இணக்கமறிந்து இணங்கு' என்பன போன்ற வைகளைக் கீழ் வகுப்புக்களில் நீர் படித்திருந்தும், அன்புப் பேச்சில் மயங்கி நட்புக் கொள்வது என்பது உமது சிறந்த நிலையைக் குறிக்காது. முதலிலே ஏமாந்து நட்புக் கொள்ளலாம். அதனால் ஏற்பட்ட கேடுகளுக்குப் பிறகும் அன்புப் பேச்சில் மயங்கிப் பிறரிடம் நட்புக் கொள்ளுதல் அவ்வளவு நல்ல உள்ள நிலையைக் குறிக்காது. மேலும் உமது கடிதத்தில் உம்மோடு நட்பாகச் சேர்ந்தவர்கள் எல்லோருமே இறுதியில் இடையூறுகளை விளைவித்தார்கள் என்று கூறியிருக்கிறீர். அதை உள நூலறிஞர்கள் உள்ளத்தின் நல்ல அறிகுறியாகக் கருதமாட்டார்கள். உமது உள்ளத்திலே சிறப்பாக உம்மோடு நெருங்கிப் பழக முயலும் நண்பர்கள் உமக்குத் தீமை விளைவிக்கவே நட்புக் கொள்ளுகிறார்கள் என்ற சந்தேக எண்ணமே, குடிகொண்டிருக்கிறது. இது பாரனுயா (Paranoia) என்ற உள்ளக் கோளாறின் ஒரு அறிகுறியாகும். அது காரணமாக நீர் பயப்படவேண்டியதில்லை. திடமனத்துடன், "மற்றவர்கள் நண்பர்கள்; அவர்கள் நமக்குத் தீங்கு நினைக்க விரும்பவில்லை. நமது சந்தேகமே அப்படி நம்மைப் அங்ஙனம் நோக்கவைக்கிறது" என்று திருப்பித் திருப்பி உமக்குள் சொல்லிப் பாரும். எல்லோரிடமும் 'என்ன நேர்ந்தாலும் நேரட்டும்' என்று தைரியத்துடனும் துணிவுடனும் நடக்கவும். அறிவு கொண்டு ஆராய்ந்து

நண்பர்களைத் தேர்ந்தெடுக்கவும். இவை களைக் கடைப்பிடித்தால் ஒருவாறு உம் மிடத்தே இருக்கும் குறை ஒழியலாம்.

நான் கல்லூரி மாணவன். படிக்கப் போனால் ஒரே தூக்கம் வருகிறது. ஆனால், எனக்குப் படித்து முன்னேற வேண்டும் என்ற அவா இருக்கிறது. இந்த நிலையில் நான் எப்படிப் படித்து முன்னேறுவது?

உமக்குப் படித்து முன்னேற வேண்டும் என்ற எண்ணம் இருந்தபோதிலும், நீர் எடுத்துக்கொண்ட பாடப் பொருளின் (Subject) மேல் விருப்பமில்லாமல் இருக்கலாம். ஒரு வேளை, அந்தப் பாடப் பொருளின்மேல் இயற்கையாகவே இருக்கும் வெறுப்புக் காரணமாக (சிலர் கணிதம் என்றால் வெறுப்படைவதும், சிலர் பூகோளம் என்றால் விருப்பற்றுக் கடனுக்காகப் படிப்பதும் யாவரும் அறிந்ததே) பாடத்தின்மேல் நாட்டம் செல்லாதிருக்க, அதே சமயத்தில் உமது வாழ்க்கையின் குறிக்கோள் முன்னேற வேண்டும் என்ற எண்ணமும் வேலை செய்ய, இவைகளுக்கு இடையே ஏற்படும் போராட்டம், தூக்கம் என்ற சமரச நிலையில் முடியலாம். ஆகவே விருப்பமில்லாது இருக்கும் நீர் தற்போது இருக்கும் நிலையினின்று, எவ்வாறாவது படிக்கும் பொருளின்மேல் ஆர்வத்தைச் செலுத்தி, படிப்பீரானால் நீர் கூறியிருக்குமாறு புத்தகத்தைத் தொடும்போதெல்லாம் தூக்கம் உண்டாகும் நிலை ஒழியலாம். உம் போன்ற நிலையில் இருக்கும் மாணவர் ஒருவர் பாடப் புத்தகத்தை எடுத்தால் தூக்கம் வருகிறது என்றும், கதைப் புத்தகங்களை வாசித்தாலோ, நண்பர்களோடு பேசிக்கொண் டிருந்தாலோ, அல்லது 'சினிமாப்' பார்த்தாலோ தூக்கம் வருவதில்லை என்றும் ஒரு கடிதத்தில் குறித்திருக்கிறார். அவருக்குத் தமது பாடப் பகுதியில் ஆர்வம் இல்லாததே காரணம் என்று தெரியவில்லையா?

'நமக்குப் பெரிய நோய்கள் வந்து விடுமோ, அதனால் இறந்து விடுவோமோ' என்கிற பயம் அதிகரித்துக்கொண்டே வருகிறது; மூச்சு விட்டாலும் இந்த எண்ணம் தோன்றுகிறது. இதற்கு என்ன வழி?

இந்தப் பயம் பிறழ்வான உள்ள நிலையைக் குறிக்கும். இதற்குக் காரணத்தைத் திட்டமாகக் கூறமுடியாது. ஒருவனது உள்ள நிலை அவன் குழவி குழந்தைப் பருவங்களில் வாழ்ந்த சூழ்நிலைக்குத் தக அமைகிறது. உமது நிலைக்கு இதுதான் காரணம் என்று அதற்குரிய விவரங்கள் இல்லாமல் திட்டமிட்டுக் கூற முடியாது. திறமை வாய்ந்த உளப் பாகுபாடு அறிஞர்களை நேரில் கண்டு கலந்து குறைகளை விளங்கக் கூறி அவர்களது ஆலோசனையின் படி நடத்தலே நலம்.

மறதிக்கும் மறந்துவிட்ட பொருள்களுக்கும் தொடர்பு உண்டா?

உண்டு. நாம் பொதுவாக மறந்து விட்டோம் என்று கருதுபவைகளெல்லாம் உள்ளத்தினின்று மறைந்து ஒழிவதில்லை. அவைகள் பெரும்பாலும் நனவு உள்ளத்தில் (concious mind) இல்லாமல் ஆழ்ந்த உள்ளத்தில் (unconcious mind) ஆழ்ந்து கிடப்பவைகளாகும். மறக்கக்கூடிய பொருள்கள் பெரும்பாலும் சமூக வாழ்விற்கோ அல்லது சூபர் ஈகோ (Super Ego) விற்கோ ஒவ்வாதவைகளாகும். அவைகளை உள்ளத்தில் அழுத்திவைக்கும் சக்தி (repression) வெளிவராது ஆழ்ந்த உள்ளத்தில் அழுத்திவைக்கிறது. இது அறிதுயில் (Hypnosis) போன்ற முறைகளினால் பல ஆண்டுகளுக்கு முன் நடந்து மறந்து ஒழிந்த நிகழ்ச்சிகளை நனவு நிலைக்குக் கொண்டுவருவதினின்று தெரிகிறது. மேலும் மறதிக்குக் காரணம் பொருள்களின்மேலுள்ள ஒரு வித வெறுப்பே என பாக்ஸ் (Fox) போன்றவர்கள் கருதுகிறார்கள்.

லட்சுமணபுரி மாநாடு

"அழகப்பா"

உலக விவகாரங்களைப் பற்றி ஆராயும் இந்திய அவை (Indian Council of World Affairs) யின் ஆதரவில் பதினோராவது பசிபிக் உறவுமாநாடு (Pacific Relations Conference) அக்டோபர் மூன்றாம் தேதியிலிருந்து பதினைந்தாம் தேதிவரையில் லட்சுமண புரியில் கூடிப் பல சிக்கலான உலகப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்துள்ளது. இம்மாநாடு நம் நாட்டில் கூடுவது இதுவே முதல் முறையாகும். போருக்குப்பின் ஜப்பான் இந்த உலக மாநாட்டிற்குத்தான் பிரதிநிதிகளை அனுப்பியுள்ளது. ஆசியாக் கண்டத்திலும் பசிபிக் கடல் பிரதேசத்திலும் இருக்கின்ற நாடுகளின் அயல் நாட்டு விவகாரங்களை ஆராயும் உத்தியோகப் பற்றற்ற கழகம் (Institute of Pacific Relations) இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தோன்றி மூன்றாண்டிற் கொருமுறை உலகத்தின் பல்வேறு இடங்களில் கூடிவருகிறது. தூரக் கிழக்குப் பிரதேசத்தில் அக்கறையுள்ள நாடுகள் இக்கழகத்தில் உறுப்பினர்கள். இதன் நிலையான அலுவலகம் அமெரிக்காவில் நியூயார்க் நகரில் இருக்கிறது. பத்தாவது மாநாடு 1948ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நடைபெற்றது.

மாநாட்டைத் திறந்து வைத்த நம் பிரதமர், நேரு அவர்கள், ஆசியாக் கண்டம் பெரும் மாறுதல்களுக்குட்டிருப்பதைக் குறிப்பிட்டு, இனி வரவிருக்கிற தொல்லைகளுக்கும் நற்காரியங்களுக்கும், தூரக் கிழக்கு நாடுகள் அல்லது ஆசியாவின் பெரும் பகுதிகள் கேந்திரஸ்தானமாயுள்ளன என்பதை விளக்கிக் கீழை நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் பரஸ்பரம் உண்மையான அனுதாபமும் நல்லெண்ணமும் ஏற்படுத்தப் பசிபிக் உறவுக் கழகம் சிறந்த முறையில் அமைந்திருப்பதைப் பாராட்டிப் பேசினார்.

'யாவரும் கேளிர்' என்ற சிறந்த பண்பாடும், சமயத்துறையில் சமரச உணர்ச்சியும் உடைய இந்திய நாட்டில் மாநாடு கூடிற்று. மாநாட்டில் பங்கு கொண்ட பல நாடுகள் கடந்த ஐந்தாண்டுகளுக்குள் விடுதலை பெற்றவை. இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, பிரான்ஸ், நியூசிலாந்து, பிலிப்பைன் தீவுகள், ஜப்பான் முதலிய ஒன்பது நாடுகளிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளும், இலங்கை, பர்மா, மலேயா, வியட்னாம், ஆஸ்திரேலியா, நெதர்லாண்ட்ஸ் முதலிய ஆறு நாடுகளிலிருந்து விருந்தினராய் வந்த உறுப்பினர்களும் பன்னிரண்டு நாட்கள் கலந்தாலோசித்து உலக விவகாரங்களை விவாதித்து அறிக்கைகள் தயாரித்துள்ளார்கள்.

மாநாடு தென் ஆசியா (இந்தியா, பாகிஸ்தான், பர்மா) தென் கிழக்கு ஆசியா (இந்தோனேசியா, தாய்லாந்து, மலேயா, இந்தோசீனம், பிலிப்பைன் தீவுகள்) கிழக்கு ஆசியா (சீனம், ஜப்பான், கொரியா) என மூன்று வட்ட மேஜைப்பகுதி (Round Table Groups) களாகப் பிரிந்து தூரக்கிழக்கு விவகாரங்களைப் பரிசிலனை செய்தது.

தூரக்கிழக்குப் பகுதியில் தோன்றியுள்ள தேசிய உணர்ச்சியும் அதனால் உலக விவகாரங்களில் ஏற்பட்டுள்ள விளைவுகளும் மாநாட்டில் முக்கியமாய் விவாதிக்கப்பட்டன. சீன தேசத்தில் கம்யூனிஸ்ட்டுகள் பெற்றுள்ள வெற்றியால் ஆசியாக் கண்டத்தில் பொதுஉடைமைக் கொள்கையின் வளர்ச்சி, பொதுஉடைமைக் கொள்கை பரவுவதனால் தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள விளைவுகள், தெ. கி. ஆசிய நாடுகளுக்குள் ஒத்துழைப்பு, அப்பகுதியில் அமெரிக்கப் பொருளாதாரக் கொள்கை, ஜப்பானுடன் செய்துகொள்ளவேண்டிய அமைதி ஒப்பந்தம், ஜப்பானியப் பொருளாதார மறுமலர்ச்சி காரணமாய் மற்ற நாடுகளின் பொருளாதார நிலைமை பாதிக்கப்படும் வகை, கொரியாவில் ஐக்கிய நாட்டு நிறுவனம் (United Nations Organisation) சாதிக்கவேண்டிய செயல்கள்— இவை போன்ற பல விஷயங்கள் பேசி முடிவு செய்யப்பட்டன. வாணிபத் தடைகளை நீக்கி எவ்வாறு வாணிப உறவை வளர்க்கலாம், எவ்வித வாணிப ஒப்பந்தங்கள் செய்துகொள்ளலாம் என்று பிரதிநிதிகள் கூடிப் பேசினர். ஏனைய ஐரோப்பிய நாடுகளைப்போல் சீனநாடு மாஸ்கோவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுத் தன் தனி நிலையை இழந்துவிடுமா அல்லது கம்யூனிச ஆட்சி நிலவியபோதிலும் சீனர்கள் தங்கள் நெடுங்காலத் தேசியப் பண்பாட்டைக் காத்துக்கொள்வார்களா என்று ஆர்வத்துடனும் சற்றுக் கவலையுடனும் மாநாட்டுக்கு வந்திருந்தோர் விளக்கம் தேடினார்கள். இவ்வாறு பல நாடுகள் தங்கள் கருத்துக்களைத் தாராளமாய்ப் பரிமாறிக்கொள்ள மாநாடு வாய்ப்பளித்தது.

இப்போது உலகம் ஆங்கிலோ—அமெரிக்க நாடுகளின் கொள்கையைப் பின்பற்றுவோர் என்றும், ரஷ்ய நண்பர்கள் எனவும் இரண்டு குழுக்களாகப் பிரிந்து பிளவுபட்டிருக்கிறது. மாநாட்டில் கலந்துகொண்ட ஆசிய நாடுகள் அச்சத்தாலோ ஆதிக்க ஆசையாலோ அவ்விரு கூட்டங்களில் யாருடனும் இப்போது சேர விரும்பவில்லை என்று தெளிவாய்ச் சொல்லிவிட்டன. ஆசிய நாடுகள் பொருளாதாரத் துறையில் தங்களைப் பலப்படுத்திக் கொண்டபின்னரே எந்தப் பிரிவுடன் சேர்ந்து உலக அமைதிக்குப் பாடுபடவேண்டுமென்பதை முடிவு செய்ய முடியும்; அதுவரை யாருடனும் சேராது தனித்து ஆக்கவேலை புரிய அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கருத்து விளக்கப்பட்டது. ஆசிய நாடுகள் ஏழை உறவினரைப் போன்றோ, நோயாளிகளாகவோ மேலைநாடுகளால் நடத்தப்பட இனிச் சம்மதிக்கமாட்டா; மற்ற நாடுகளுடன் அவைகள் சமத்துவ நிலையில் ஒத்துழைக்கத் தயார்— என்பதும் மாநாட்டில் தெளிவாக்கப்பட்டது.

தம் பொருளாதார நிலையை உயர்த்த மேலை நாடுகளின் முழு ஒத்துழைப்பை ஆசிய நாடுகள் நாடுகின்றன. ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குத் தீட்டப்பட்ட மார்ஷல் திட்டத்தைப் போல் ஆசியப் பகுதிக்கு ஒரு பொருளாதாரத் திட்டம் வேண்டுமா என்ற வினவிற்கு, பிரதேச உரிமையைப் பாதிக்கும் நிபந்தனைகளுடன் அளிக்கப்படும் அயலார் உதவி பற்றி ஆசிய நாடுகள் ஐயுறுகின்றன என்று இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இந்தோனேசியா முதலிய நான்கு நாடுகளும் தங்கள் கருத்தை வெளிப்படையாய்த் தெரிவித்துள்ளன. உதவி பெறும் நாடுகள் தங்களிச்சைப்படி உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்துக்கொள்ள முடியாதவாறு உதவி தரும் நாடுகளால் தடுக்கப்படலாம் என்று அஞ்சுகின்றன. கீழை நாடுகளும் குடியாட்சி உணர்ச்சி பூரணமாய்ப் பெற்றுள்ளன; தத்தம் தனியாட்சியில் வேறு நாடு மறைமுகமாகத் தலையிடுவதையும் ஒப்பமாட்டா.

மாநாட்டுப் பிரதிநிதிகள் ஆசிய மக்களின் உணர்ச்சியையும் உளக் கருத்துக்களையும் அறிந்துகொள்ளத் தங்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொண்டிருந்தால் உலக நெருக்கடியும் போர்க் கவலையும் சற்றுக் குறைய இடமுண்டு. ஜப்பானுடன் விரைவில் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. அந்நாட்டில் போர்த் தளவாடங்களைக் குவித்து அமெரிக்கப் போர்த்தளம் அமைப்பதை ஆசியாக் கண்டம் விரும்பவில்லை; அதை அமெரிக்க ஏகாதிபத்திய முன்னேற்பாடாகவே கருதும் என்பது தெளிவாயிற்று. பசிபிக் பிரதேசத்தைச் சுற்றிலும் அமெரிக்கத் தளங்கள் ஏற்படுத்தப்படுவதைக் கண்டு ஆசியா அஞ்சுகிறது எனப் பாகிஸ்தான் கூறியதை மறுத்து அத் தளங்கள் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் அமைதியை நிலைநிறுத்தவுமே ஏற்பட்டுள்ளன என்று கனடியப் பிரதிநிதி கூறினர். சீனவின் ஒத்துழைப்பின்றி ஐக்கிய நாட்டு நிறுவனம் ஒன்றும் சாதிக்கமுடியாது என இந்தியப் பிரதிநிதி இயம்பினர்.

இம் மாநாட்டில், நம் நாட்டின் பொருளாதார நிலையும் பாகிஸ்தான் இலங்கை நாடுகளின் நிலையும் செவ்வனே விளக்கப்பட்டன. மற்ற ஆசிய நாடுகளைக் காட்டிலும் உறுதியான ஆட்சியைப் பெற்றிருந்த போதிலும் இம் மூன்று நாடுகளிலும் பொருளாதார நெருக்கடி ஏற்படக்கூடும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இப் பிரதேசத்தின் மக்கள் தொகை ஓராண்டில் ஏறத்தாழ ஐம்பது லட்சம் அதிகரிக்கிறது. இந்த மக்கள் வளர்ச்சிக் கேற்றவாறு உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லையானல் நெருக்கடி ஏற்படாம லிராது. இந் நெருக்கடியைத் தவிர்க்கவேண்டுமானல் உடனடியாகக் குறைந்த பட்சம் ஆண்டிற்கு ஐம்பது கோடி டாலர் (சுமார் 248 கோடி ரூபாய்) அன்னிய உதவி இம் மூன்று நாடுகளுக்கும் இன்றியமையாததாகிறது. பொருளுதவி செய்யும் நாடுகள் தாங்கள் அளிக்கும் பொருள் குறிப்பிட்ட காரியங்களுக்குச் செலவிடப்படுகிறதா என்று அறிய விரும்பும்; உதவி பெறும் தேயங்கள் தாங்கள் எவ்வகையிலும் உதவியளிக்கும் நாடுகளின் ஆதிக்கத்திற்குட் படாமலிருப்பதற்கே முயல்வது இயல்பு. இவ் விருவகை நாடுகளின் விருப்பத்திற்கும் குந்தகம் ஏற்படாதவாறு ஐக்கிய நாட்டமைப்பின் மூலமோ, காமன்வெல்த் நாடுகளின் நிறுவனத்தின் மூலமோ உதவியளித்தால் பொருள் உதவியில் கலந்துகொள்ளும் நாடுகள் பரிசோதனை செய்யவும் பரிசோதனைக்கு உட்படவும் அட்டியிராது.

லட்சுமணபுரியில் கூடிய மாநாட்டால் உடனடியாக எவ்விதப் பயனும் நலனும் ஏற்படாவிடினும், ஆசிய நாடுகளைப்பற்றி அறிந்துகொள்ள மேலைநாட்டாருக்கு ஒரு வாய்ப்பும் பல நாடுகள் ஒன்றுகூடி பரஸ்பர நட்பையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதால் உலக ஒற்றுமையும் ஏற்பட்டு உலகத்தில் அமைதி காணக்கூடும் என்ற நம்பிக்கையும் பெறுகிறோம் அல்லவா?

கடலில் உணவு

'கண்ணன்'

நாம் வாழும் உலகம் நிலப்பரப்பையும் கடற்பரப்பையும் கொண்டது. நிலப்பரப்பு நான்கில் ஒரு பாகமும் கடற்பரப்பு மற்ற மூன்று பாகமாகவும் அமைந்திருக்கிறது. உலகத்தில் வாழும் மக்கள் தமக்கு வேண்டிய உணவை நிலத்திலிருந்துதான் பெறுகிறார்கள். கடலிலிருந்து 100க்கு 1 சதவீதம்தான் மீன்கள் முதலியன உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் ஜனத்தொகை பெருகிக்கொண்டே வருகின்றது. முடிவாக உலகத்தின் ஜனத்தொகையும் அதிகரித்துக்கொண்டே போகிறது. அதிகரிக்கும் ஜனத்தொகைக்கு ஏற்றவாறு உணவுப் பெருக்கம் இல்லாமையால்; உணவுப் பஞ்சம் பல நாடுகளில் தாண்டவமாடுகிறது. நிலத்திலிருந்து பெறும் உணவிற்கு ஒரு எல்லை இருக்கிறது. வரம்பிற்கு அப்பால் நாம் என்ன செய்வது? இதுகாறும் புறக்கணிக்கப்பட்டு வந்த கடலைத்தான் நாடவேண்டும். கடலில் வாழும் உயிர்கள் செடிகள் மீன்கள்- இவைகளை உணவாகப் பயன்படுத்தலாம்.

இந்தியாவில் உணவு நெருக்கடி இருக்கிறதென்று கூறவேண்டிய அவசியமில்லை. நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பெறுவதற்கும், உணவுப் பெருக்கத்திற்கும் ஆன முயற்சிகள் பலவற்றை நாம் இன்று மேற்கொண்டுள்ளோம்.

நம் நாட்டின் ஜனத்தொகையில் நூற்றுக்கு ஐம்பது பேர் மீன் உண்பவர். உணவுப் பெருக்கத்தில் மீன் முக்கிய இடம் பெறுதல் அவசியம்.

இந்தியாவில் மீன் தொழில் வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்புகள் பல உள்ளன. 3200 மைல் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது நம் நாடு. கடற்கரையிலிருந்து 5 அல்லது 10 மைல் தூரத்திற்குள்ளாகத்தான் மீன்களைப் பிடித்து வருகின்றோம். தக்க சாதனங்கள் இருப்பின் தொலைவில் சென்று ஆழங்களில் மீன்களைப் பிடிக்கலாம். ஆனால் தற்சமயம் மீன்கள் பிடிப்பதற்காக நமக்கு அமைந்துள்ள கடற்பரப்பில் 5 சதவீதம்தான் பயன்படுத்தி வருகின்றோம். பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். ஒரு ஆண்டில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஜப்பானில் 111 பவுண்டும், கானடாவில் 109 ம், டென்மார்க்கில் 63 ம், இங்கிலாந்தில் 49 ம், யுனைடெட் ஸ்டேட்ஸில் 35 ம், ரஷ்யாவில் 18 ம் ஆகத் தனிமனிதனின் விழுக்காடு அமையுமாறு அந்த நாடுகளில் மீன் பிடிக்கிறார்கள். ஆனால் இந்தியாவிலோ (பர்மா, ஐரான் உள்பட) ஐந்து பவுண்டு மீன்தான் பிடிக்கப்படுகின்றது. அதிகமான மீன் உணவைப் பயன்படுத்தும் நாடுகள் ஐஸ்லெண்டு (Iceland) நியூபவுண்ட்லெண்டு (Newfoundland) நார்வே (Norway) முதலியவையாம். அங்குச்

சராசரி 680 பவுண்டுகளி லிருந்து 6000 பவுண்டுகள் வரையில் மீன் பிடித்து உண்ணுகிறார்கள். இதி லிருந்து, மற்ற நாடுகளுடன் ஒப் பிட்டுப் பார்க்கும்போது நம் நாடு மீன் உணவுப் பெருக்கத்தில் எவ்வாறு பின்னணியில் இருக்கிறதென்பது கண்கூடு.

நமக்கு வேண்டிய அளவு மீன்களும், பிற உணவுகளும் கடலில் கிடைக்குமா என்ற ஐயம் எழுகின்றது. நிலத்தைப் பண்படுத்தி விளைச்சலை அதிகரிப்பது போல, கடலையும் பண்படுத்தி விளைச் சலையும் அதிகரிக்க முடியுமா? கடல் நூல் அறிஞர்களும் (Oceanography) உயிர்நூல் வல்லுநர்களும் இதனை ஆராய்ச்சி செய்துவருகின்றார்கள்.

நிலத்தில் வாழ்வதைக் காட்டிலும் கடலில் அதிகமான உயிர்கள் வாழ் கின்றன என்பது மறுக்கமுடியாத தொரு உண்மை யாகும். நீரினுள் வாழும் உயிரினங்களையும், அவை களின் தொகையையும் முடிவாகக் கணக்கெடுத்துக் கூறுவது சாத்திய மான காரியமன்று. இதுகாறும் அறி ஞர்கள் பலரின் அருப்பெரும் முயற்சி களால் நாம் அறிந்த உயிர்கள் எண் ணற்றவை. கடல் நீரை ஒரு கோப்பை யில் எடுத்துச் சோதித்துப் பார்த்தால் கணக்கற்ற உயிர்களைக் காணலாம். நிலத்தில் தோன்றியுள்ள புல் பூண்டு, செடி கொடிகள், மரங்கள், கிருமிகள், பூச்சிகள், ஆடு மாடுகள், விலங்குகள், யானைகள், மக்கள்—இவைகள் யாவும் சேர்ந்தாலும் கடலில் வாழும் உயிர் களை விஞ்சமுடியாது.

கடல் முழுவதையும் துருவிப் பார்த்து, அங்கு வாழும் உயிரினங்கள் யாவற்றையும் அறிந்துகொள்ள முடிய வில்லை. எனவே, உணவுப்பொருள் களைப் பெருக்குவதில் கடலின் ஆற்றல் என்ன என்பதை அறுதியிடுதல் அரிது. எவ்வளவு உணவைக் கடலி லிருந்து எதிர்பார்க்க முடியும்? தொடர்ச்சியாக மீன்கள் ஒரே இடத் தில் பிடிக்கப்பட்டால், அப் பாகம் வறண்டுவிடுகின்றதென்றும்; அவ் வாறே அட்லாண்டிக் கடலின் வட பாகத்தில் மீன்கள் அதிகமாகக் கிடைப்பதில்லை யென்றும், சர்வதேச மீன் பண்ணை (Interuational Conference of Fisheries) அறிஞர்கள் முடிவு கண்டிருக்கிறார்கள். இதனால், நாம் மனம் தளரவேண்டியதில்லை. வருங்காலத்தில், உணவுப் பெருக்கத் திற்குக் கடல் ஒரு சிறந்த சாதனமாக விளங்கும் என்று நாம் எதிர்பார்க் கலாம்.

நிலத்திலும் நீரிலும் உயிர்கள் தோன்றும் முறை (Cycle of Life) ஒத்ததா யிருக்கின்றது. நிலத்திலும் நீரிலும் வாழும் உயிர்களுக்குப் பசுமை யான செடிகள் அடிப்படை (Hier archy of Life) உயிர்களாக அமை கின்றன. அவைகளுக்குத்தான் இனர் கானிக் பொருள்களை[1] (Inorganic Materials) உயிருள்ளவைகளாகவும் ஆர்கானிக் பொருள்களாகவும் (Organic) மாற்றும் ஆற்றல் உண்டு. இவை முறையே விலங்கினத்தைச் சேர்ந்த உயிர்களை ஆதரிக்கின்றன. ஒளிச் சேர்க்கையினால் (Photo Syuthiesis) பசுமையான செடிகள், ஆர் கானிக் பொருள்களை (Organic Matter) உண்டுபண்ணுகின்றன. இவை விலங்குகளால் உட்கொள்ளப் பட்டுத் தகர்க்கப்படுகின்றன. மீண்டும் ஆர்கானிக் பொருளாகச் செடிகளால் மாற்றப்படுகின்றன. இத்தகைய வாழ்க்கைச் சக்கரம் நிலத்திலும் நீரி லும் சுழன்றுகொண்டே இருக்கிறது.

---

1 உலகத்தி லுள்ள பொருள்கள் யாவும் இரு வகைப்படும். உடற்கூறும், உயிரும் உடையவை ஆர்கானிக் பொருள்கள் என்றும், (Organic) உடற்கூறும் உயிரும் அற்றவை இனர்கானிக் பொருள்கள் என்றும், (Inorganic) கூறப்படுகின்றன. ஆர்கானிக் பொருள் களைச் செடி இனம், விலங்கினம் என்ற இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

கடலின் உயிர்களுக்கு அடிப்படையாக கணக்கற்ற மிக மிகச் சிறிய உயிர்கள் அமைகின்றன. இவைகளைத் தனித் தனியாக நம்முடைய கண்களால் பார்க்க இயலாது. கடற் செடிகள் நூற்றுக்கு 99 சதவீதத்திற்குமேல், மிக மிகச் சிறியவை; பூதக் கண்ணாடியின் உதவியின்றி அவைகள் புலப்படா. அவை ஒரு செல்[2]லினால் கட்டப்பட்டவை; ஆல்காக்கள் (Algae) எனப்படும். அவை நீரில் மிதந்து, நீரோட்டத்தினால் இங்கும் அங்கும் அலைக்கப்படும். அவைகளுக்கு நிலையான வாழ்க்கை கிடையாது. அவைகள் ஒவ்வொன்றின் பருமன் ஒரு அங்குலத்தில் ஆயிரத்தில் ஒரு பாகமிருக்கும். அவைகளில் பற்பல உருவங்களில் நூற்றுக் கணக்கான இனங்கள் உண்டு. ஒரு ஆழாக்குக் கடல் நீரை, அணுப் பெருக்கிக் கண்ணாடியில் சோதித்தால், ஆயிரத்திலிருந்து பல லட்சக் கணக்கான உயிர்களைக் காணலாம். நம் சாதாரணக் கண்களுக்கு அவை புலப்படா. அவை திரள் திரளாக இருக்கும்போது, ஏதோ பச்சை அல்லது பழுப்பு நிறம் (Brownish) கலந்தாற்போல் நீரில் தென்படும். ஒரு எக்கரா கடல் நீரில், 100 பவுண்டு எடையுள்ள செடிகள் இருக்குமெனக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

செடிகளைப்போன்றே விலங்கினத்தைச் சேர்ந்த சிறு உயிர்கள் கடல் நீரில் இருக்கின்றன. இவைகளும் நீரில் மிதந்து அலைக்கப்படுகின்றன. இவைகளில் பற்பல இனங்கள் உண்டு. இவைகளில் சித்திர வேலைப்பாடுடையனபோன்று உருவங்கள் பல காணலாம். சில தக்க பருவம் வளரும் வரையில் மிதக்கும் இனத்தோடு வாழ்ந்து, பிறகு தனியாக வாழத் தொடங்குகின்றன. புறத்தில் ஓடு உடைய கிளிஞ்சல்போன்ற இனத்தைச் சேர்ந்த உயிர்கள் (Shell Fish) இவ்வாறு வாழ்கின்றன. இந்த இனத்தில் முக்கியமானவை கோப்பாத் (Copepod) எனப்படும் ஒரு வகை உயிர். கால் அங்குல நீளம் இருக்கும். இதன் வாயில் சல்லடை போன்று எலும்புகள் அமைந்திருக்கின்றன. உடலிலிருந்து தொங்கும் உப அங்கங்கள், வாயினுள் நீரைச் செலுத்த உதவுகின்றன. நீரை வெளிவிடும் போது அதிலிருக்கும் மிக நுண்ணிய தாவரப் பொருள்களை வடிகட்டி விடுகிறது. இத் தாவரப் பொருள்கள் உணவாக அமைகின்றன. கோப்பாத்தைப் போன்று, மற்றச் சில உயிர்களுக்கும் வித விதமான சல்லடைகள் இருக்கின்றன. சில உயிர்களுக்குக் கடித்துத் தின்னும்படியான வாய்கள் இருக்கின்றன. அவை, தாவரப் பொருள்களைத் தவிரத் தன்னைவிடச் சிறிய விலங்கினங்களையும் இரையாகக் கொள்கின்றன.

இவ்வாறு நீரில் மிதந்து சஞ்சரிக்கும் தாவரங்களும், விலங்கினங்களும் பிளாங்க்டன் (Plankton) எனப்படுகின்றன. தாவரங்கள் பைடோ பிளாங்க்டன் (Phyto Plankton) என்றும், விலங்கினங்கள் ஜூ பிளாங்க்டன் (zoo plankton) என்றும் அழைக்கப்படுகின்றன. நீரின் மேல் பாகத்தில் வாழும் பல வகையான பெரிய மீன்களுக்குப் பிளாங்க்டன் இரையாகின்றன; கரையோரங்களில் அடிப்பாகத்தில் வாழும் சிறிய மீன்கள், கீழ்நோக்கி இறங்கும் பிளாங்க்டனை உண்கின்றன. இந்தச் சிறிய மீன்கள், முறையே, கீழ்ப்பாகத்தில் வாழும் பெரிய மீன்களுக்கு இரையாகின்றன. இவ்வாறு சிறியவை பெரியவைகளுக்கு முறையே இரையாகின்றன. இது சங்கிலியைப் போன்று அமைகின்றது. இதனை உணவுச் சங்கிலி எனலாம் (food chain). சிறு சிறு பைடோ

2 நம் உடல், செடி, கொடிகள் முதலியவை ஒவ்வொன்றும் பல நுண் அணுக்களால் கட்டப்பட்டது. ஒவ்வொரு அணுவும் ஒவ்வொரு உயிர். இந்த அணு செல்லி எனப்படுகின்றது.

பிளாங்க்டன், விலங்கினங்களுக்கு இரையாகி, அவை முறையே பெரிய விலங்கினங்களுக்கும் மீன்களுக்கும் உணவாக அமைகின்றன. மிகமிக நுண்ணிய தாவரப் பொருள்கள் படிப் படியாகப் பெரிய பெரிய உயிர்களாக மாறுகின்றன. இப்பாதையில், ஆர்கானிக் பொருள்கள் அழிந்துகொண்டே இருக்கின்றன. ஒரு மீன் வளர்ந்து பெருகுவதற்குள், தன்னைவிடப் பன்மடங்கு எடையுள்ள உணவை உட்கொள்கிறது. அது உட்கொள்ளும் ஆர்கானிக் பொருள்கள் அதனுடைய வாழ்க்கைக்கு வேண்டிய சக்தியாக மாறுகிறது. தாவர உயிர்கள் விலங்கினங்களுக்கு உணவாக அமைவதால், ஜூ பிளாங்க்டனைவிடப் பைடோ பிளாங்க்டன் நீரில் அதிகமாக இருத்தல் வேண்டும். கடலில் உற்பத்தியாகும் தாவரங்களில் நூற்றுக்குப் பத்துச் சதவீதம்தான் மீன்கள் உற்பத்தி யாகின்றன என்று நம்பப்படுகிறது.

உயிரினங்களுக்கு வேண்டிய ஆர்கானிக் பொருள்கள் கடலில் எவ்வளவு உற்பத்தியாகின்றன என்பதைக் கடல் நூல் அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர். உணவுச் சங்கிலியில் ஒவ்வோர் படியிலும் உணவு எவ்வளவு உற்பத்தியாகின்றது? இதை அறியக் கடல் நீருக்கும் உயிரினங்களுக்குமிடையே உள்ள உறவை ஆராய்தல் இன்றியமையாதது.

கடலில் வாழும் உயிர்கள் எப்பொழுதும் சஞ்சரித்துக்கொண்டே இருக்கின்றன. நிலத்தில் எவ்வாறு முறையுடன் உயிர்கள் தோன்றி மறைகின்றனவோ அவ்வாறு கடலில் வரிசையாகவும் திட்டமாகவும் வாழ்க்கைச் சக்கரம் அமைவதில்லை. பைடோ பிளாங்க்டன் எனப்படும் ஆல்காக்கள் (தாவர உயிர்கள்) திடீரென்று உற்பத்தியாகின்றன. இவை நிலத்தில் பருவ காலத்திற் கேற்ப விளையும் பயிர்களைப் போல் இல்லை. ஆண்டு முற்றிலும் கடற்பயிர்கள் தொடர்ந்து வளர்கின்றன. விலங்கினங்களுக்கு இரையாகின்றமையாலும், கடலின் கீழ்ப் பாகத்திற்கு இறங்குகின்றமையாலும், பயிர்கள் நாசமடைந்து வருகின்றன. எனவே, ஒரு சமயத்தில் காணப்படும் பைடோ பிளாங்க்டனைக் கொண்டு கடலின் உற்பத்தியைத் தொகுக்க முடியாது.

வளரும் விகிதத்தையும், நாசமுறும் விகிதத்தையும் தனித்தனியாகப் பிரித்து அறியவேண்டும். கடல் நீரில் பாஸ்பேட், (Phospate) நைட்ரேட் (Nitrate) போன்ற பல இரசாயனப் பொருள்கள் இருக்கின்றன. பருவ காலங்களுக் கேற்றவாறு அவை அதிகரிக்கின்றன அல்லது குறைகின்றன. கார்காலத்தில் சூரியன் ஒளி குறைவாக இருக்குமாதலால், தாவரங்கள் நன்கு வளரா; வளர்ச்சி இல்லாமையால் பாஸ்பேட், நைட்ரேட் போன்ற இரசாயனப் பொருள்கள் தாவரங்களால் ஈர்க்கப்படுவ தில்லை; அவற்றை அதிகமாக நீரில் காணலாம். அலைகளாலும் கடலின் கீழ்ப்பாகத்தி லுள்ள இரசாயனப் பொருள்கள் மேல்பாகத்திற்குக் கொண்டுவரப்படும். வசந்த காலத்தில் சூரியன் ஒளி நன்கு வீசும்; தாவரங்கள் நன்கு வளரும். இரசாயனப்பொருள்கள் விரைவாக ஈர்க்கப்படும். கடலின் மேல்பாகத்தி லுள்ள இரசாயனப் பொருள்கள் குறையும். கோடைகாலத்தில் இன்னும் குறையும். பின்னர்ப் பிளாங்க்டன் அழிவுற்று நாசமடையும்போது அதிலிருக்கும் பாஸ்பேட், நைட்ரேட் விடுதலை பெற்று நீரில் பெருகும்.

கடல் நூல் அறிஞர்கள் இங்கிலாந்து தேசத்திற்குத் தென்கிழக்கி லுள்ள கடல்பாகத்தை (இங்கிலீஷ் கால்வாய்) ஆராய்ந்தார்கள். வசந்த காலத்தில் இரசாயனப் பொருள்கள் தாவர உயிர்களைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக ஈர்க்கப்பட்டன. ஒரு சிறுவன் உட்கொள்ளும் உணவு

அதிகமாக இருக்கலாம்; ஆனால், அதற்கேற்ப வளர்ச்சி காணமுடியாது. இதனை ஒத்திருக்கிறது தாவர வளர்ச்சி. தாவரங்களின் வளர்ச்சி தினந்தோறும் பாதிக்குமேல் பெருகிற்று. அவை எவ்வளவு விரைவாக வளர்ந்தனவோ அவ்வளவு விரைவாக மற்றவைகளால் உணவாக உட்கொள்ளப்பட்டன. இது சுறுசுறுப்புள்ள பையன் உணவை உட்கொள்வதற்கேற்ப, ஆற்றலை விரைவாகச் செலவழிப்பதை ஒத்திருக்கிறது. எனவே, இரசாயனப் பொருள்கள் செலவழியும் விகிதத்தைக் கொண்டு தாவர உயிர்களின் வளர்ச்சியைக் கணக்கிடுவது சாத்தியமில்லை.

நார்வே நாட்டைச் சேர்ந்த H. H. கிரான் (Gran) என்ற அறிஞர் கடலில் சில சோதனைகள் நடத்தினர். தாவர உயிர்களைக் கொண்ட கடல்நீரைச் சிசாக்களில் நிரப்பினர். சில சிசாக்கள் கறுப்புத் துணியால், ஒளி புகாத வண்ணம் மூடப்பட்டன. இந்தச் சிசாக்கள் கடலில் தொங்கவிடப்பட்டன. சிசாக்களுள் புதிதாக இரசாயனப் பொருள்கள் வெளியிலிருந்து புகுவதற்கு வழி இல்லை. ஒளிச் சேர்க்கை இல்லாததினால், கறுப்புத் துணியினால் மூடப்பட்ட சிசாக்களில் தாவரங்கள் புதிதாக ஆர்கானிக் பொருள்களை உற்பத்தி செய்யாமல் நீரிலிருந்த பொருள்களைக் கிரகித்து விட்டன. மற்றச் சிசாக்களில் ஒளி வீசியதால் உற்பத்தியும் செலவும் காணப்பட்டன. இச்சோதனை கடலில் எவ்வாறு ஆர்கானிக் பொருள்கள் உற்பத்தியாகின்றன என்பதை நிரூபித்துக் காட்டுகிறது.

இதனைப்போன்று ஆயிரக்கணக்கான சோதனைகள் நடத்தப்பட்டன. அறிஞர்கள் சில முடிவுகளைக் கண்டார்கள். ஏக்கராவில் ஆண்டுதோறும் ஒன்று முதல் மூன்று டன் வரையில் ஆர்கானிக் பொருள்கள் உற்பத்தியாகின்றன. தாவரங்கள் நாள்தோறும் நூற்றுக்கு 10 சதவீதம் வளர்கின்றன. கடலின் செழிப்பான பாகங்கள் பெரிய காடுகளின் உற்பத்தியை ஒத்திருக்கின்றன. சில பாகங்கள் புல் தரைகளை ஒத்திருக்கின்றன. ஆனால், கடலின் பரப்பு அதிகமாகையால் அதனுடைய உற்பத்தியும் அதிகமாக இருக்கிறது.

பைடோ பிளாங்க்டனை (தாவர உயிர்கள்) ஆராய்ந்ததுபோல், விலங்கினங்களை ஆராய இயலவில்லை. விலங்கினங்கள், தாவர உற்பத்தியில் பத்தில் ஒரு பாகம் முதல் ஐந்துவரையில் இருக்கலாம்.

உணவுச் சங்கிலியில் பெரிய பெரிய மீன்கள் உற்பத்தியாவது குறைவாக இருக்கிறது. தாவர உற்பத்தியைவிடப் பன்மடங்கு குறைவு. யுனைடெட் ஸ்டேட்ஸில் யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த (Yale University) டேனியல் மெர்ரிமான் (Daniel Merriman) என்ற அறிஞர் பல ஆண்டுகள் சோதனைகள் தொடர்ந்து நடத்தினர். நியூ இங்கிலாந்தின் (New England) தென் பாகத்திலுள்ள கடற் பாகத்தில் ஒரு ஏக்கராவிற்குச் சராசரி 80 பவுண்டு மீன்கள் உற்பத்தியாகின்றனவாம். அங்கு ஒரு ஏக்கராவிற்கு 50 பவுண்டு முதல் 100 பவுண்டுவரையில் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மீன் தொகுதியும் இதற்குச் சமமாக இருத்தல் வேண்டும். தாவர உயிர்களின் தொகுதி இப்பாகத்தில் நான்கு மடங்கு அதிகமாக இருக்கிறது. ஆனால், பைடோ பிளாங்க்டன் ஆண்டுதோறும், பிடிக்கப்படும் மீன்களைவிட 500 மடங்கு அதிகமாக உற்பத்தியாகின்றதாம். இதைப்போன்று நியூ இங்கிலாந்தின் கிழக்குப் பாகத்தில் வுட்ஸ் ஹோல் (woods hole) கடல் ஆராய்ச்சிச் சாலை சோதனைகள் நடத்திற்று. ஆண்டுதோறும் ஒரு ஏக்கராவிற்கு 33 பவுண்டு மீன்கள் பிடிக்கப்படுகின்றனவாம். ஆனால் தாவர உயிர்களின் (பைடோ பிளாங்க்டன்) உற்பத்தி 1000 மடங்கு அதிகமாக இருக்கின்றதாம்.

இவ்வாறு கடல்நூல் அறிஞர்கள் பல சோதனைகள் நடத்திவருகிறார்கள். இந்தச் சோதனைகளின் குறிக்கோள்கள் இரண்டு. (1) கடலில் தாவரங்களும் விலங்குகளும் எவ்வாறு வாழ்ந்து பெருகுகின்றன என்பதை விஞ்ஞான முறைப்படி அறிதல் (2) இந்த அறிவைத் தக்க அளவில் பயன்படுத்துதல்.

கடலில் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் சாதனங்கள் எவை? ஒளியும் சீதோஷ்ணமும் தாவரங்களின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றவாறு தாவரங்கள் கடலின் கீழ்ப் பாகத்திற்கு இறங்குகின்றன. விலங்குகள் தாவரங்களை உணவாக்கிக் கொள்வதும் சீதோஷ்ணத்திற்கு ஏற்றவாறு மாறுகிறது. கார்காலங்களில் நீரோட்டத்தினாலும் கொந்தளிப்புகளினாலும் தாவர உற்பத்தி பாதிக்கப்படுகிறது. கொந்தளிப்பு அதிகமாயிருந்தால் மேல் பாகத்தில் உள்ள தாவரங்கள் கீழ்ப் பாகத்திற்கு இழுத்துச் செல்லப்படுகின்றன. அப்பாகம் தாவரங்களின் வளர்ச்சிக்கு உகந்ததன்று. கொந்தளிப்பு குறைவாக இருந்தால் பாஸ்பேட், நைட்ரேட் குறைவாகத்தான் கடலின் கீழ்ப்பாகத்திலிருந்து மேலுக்குக் கொண்டுவரப்படும். இதன் விளைவாகத் தாவரங்களின் வளர்ச்சி குன்றிவிடும்.

ஆழமற்ற பாகங்களில்தான் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும். ஒரு குறுகிய எல்லைக்குள் தாவரங்கள் வளர்வதால், அதனை மீன்கள் இலகுவாக இரையாக்கிக் கொள்ளும். மீன்களின் தொகுதியும் பெருகும். பிளாங்க்டன் ஏராளமாகக் கீழ்நோக்கி இறங்கி, அங்கு அடிப்பாகத்தில் வாழும் மீன்களுக்கும் மற்ற விலங்குகளுக்கும் இரையாகின்றன. ஆழம் அதிகமாயுள்ள பாகங்களில் பிளாங்க்டன் கீழ்நோக்கி இறங்கும்போது அழிவடைகின்றன. சிறிதளவும் அடிப் பாகத்தைச் சேர்வதில்லை. எனவே அங்கு உணவு அற்றுப்போவதால் விலங்குகள் வாழ்வது கடினம். இதனால்தான் ஆழமான கடலில் உயிர்கள் சொற்பமாகக் காணப்படுகின்றன.

யுனைடெட் ஸ்டேட்ஸ் யேல் (Yale University) பல்கலைக் கழகத்தில் துணை ஆசிரியராக இருக்கும் கார்டன் எ. ரிலி (Gordon A. Riley) என்பவர் ஒளி, சீதோஷ்ணம், கொந்தளிப்பு, ஆழம் இவைகளின் விகிதத்திற்கேற்றவாறு பிளாங்க்டன் எவ்வாறு உற்பத்தியாகின்றன என்பதைக் கணித முறையில் வகுத்திருக்கிறார். இம்முறையைக் கையாளுவதற்குப் பல விஷயங்களின் அறிவு அவசியமாயிருக்கிறது. இவ்வறிவு சரியாகவும் முழுவதாகவும் கிடைப்பதில்லை. அறிஞர் ரிலி (Riley) அவர்களின் கணக்கு ஏறக்குறைய முக்கால் பாகம் சரியாக இருக்கிறது.

இதுகாறும் நடத்திய ஆராய்ச்சிகள் அனுபவத்தில் பலன்களைத் தந்து உதவிவருகின்றன. இங்கிலாந்தில் ஹெர்ரிங் (Herring) எனப்படும் ஒரு வகை மீன்கள் இருக்கின்றன. இம் மீன் தகுந்த வளர்ச்சி பெறுவதற்கு மூன்று ஆண்டுகள் வேண்டும். பல ஆண்டுகள் நிகழ்த்திய ஆராய்ச்சிகளில் ஓர் உண்மை புலப்படுகிறது. பாஸ்பேட் இரசாயனப் பொருள்கள் அதிகமாகக் காணப்பட்ட பாகங்களில் எல்லாம், மூன்று ஆண்டுகளுக்கு பிறகு, அப்பாகங்களில் ஹெர்ரிங் மீன்கள் அதிகமாகக் கிடைத்திருக்கின்றன. ஒரு ஆண்டில் அதிகமான மீன்கள் கிடைத்தால், மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அப்பாகத்தில் பாஸ்பேட் நிரம்ப இருந்திருக்க வேண்டும். எனவே ஹெர்ரிங் மீன் முட்டைகள் தவறாமல் குஞ்சுகளாவதற்கு அப்பருவத்தில் தகுந்த உணவுச் சத்து வேண்டுமென்பது புலனாகின்றது. பாஸ்பேட் போன்ற உணவுச் சத்து குறைந்தால் முட்டைகள் நாசமுறும். முட்டைகள் நாசமடைந்தால்

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நாம் எதிர்பார்க்கு மளவு மீன் கிடைக்காது. கடல்நீரில் பாஸ்பேட் நிரம்பக் காணப்பட்டால் அப்பாகத்தில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மீன்கள் நிரம்பக் கிடைக்குமென்று கூறலாம்.

இத்தகைய யூகங்களைக் கூறுவது கடல்நூல் அறிஞர்களின் கடமையாகின்றது. மீன் பிடித்தல் இவர்களின் ஆராய்ச்சியை எதிர்நோக்கியிருக்கிறது. சில மீன் இனங்கள் கொஞ்சமாக முட்டைகள் இடுகின்றன. அவைகளின் உற்பத்தியும் குறைந்த விகிதத்தில்தான் இருக்கும். இத்தகைய மீன்கள் அதிகமாகப் பிடிக்கப்படாமல் தடைகள் விதிக்கவேண்டும்.

கடலில் உற்பத்தியாகும் ஆர்கானிக் பொருள்களில் ஏதோ ஒரு சிறிதளவைத்தான் நாம் பயன்படுத்துகிறோம். இன்னும் அதிகமான விளைச்சலைக் கடலில் நாம் எதிர்பார்க்கத் தகுந்த முயற்சிகள் எடுக்க வேண்டும். உணவுச் சங்கிலியில் கிளிஞ்சல் போன்ற இனங்கள் கீழ்ப்படியில் இருக்கின்றன. அவை சிறு பிளாங்க்டனை இரையாக்கிக்கொண்டு வாழ்கின்றமையால், அவைகளின் உற்பத்தி அதிகரிக்கும். பிலிப்பைன்ஸ், சீனா, கிழக்கு இந்தியத் தீவுகள், இன்னும் மற்ற நாடுகளில் மீன், இறா (Prawns) இவைகளின் உற்பத்தியைப் பெருக்குவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். நம் நாட்டில் கரையோரமாயுள்ள ஆழமற்ற கடற்பாகங்களை வேலிபோட்டுப் பண்ணைகளாக வளர்த்தால் மீன் உற்பத்தி பன்மடங்கு அதிகரிக்கும். இவ்வாறு செய்த நாடுகள் ஒரு ஏகராவிற்கு 4000 பவுண்டு வீதம் மீன்களை ஆண்டுதோறும் பிடித்திருக்கின்றன.

மீன் உணவு நம் நாட்டிற்கு அவசியமானது. இந்தியாவில் பெரும்பாலான மக்களுக்குப் புரோடீன் எனப்படும் முக்கியமான உணவுச் சத்து குறைவாக இருக்கிறது. மீன் உணவு இக்குறையை நிவர்த்திக்கும். மக்கள் மீன் உணவை உட்கொள்ளப் பிரசாரம் செய்ய வேண்டும். மீன் உணவு உடம்பிற்கு வேண்டிய சக்தியை அளிக்கிறதென்பது ஒருபுறமிருக்க, தற்கால உணவு நெருக்கடியை இது ஒரு அளவு தீர்க்கும். மீன் உணவு எளிதில் மலிவாகவும், நிரம்பவும் மக்களுக்குக் கிடைப்பதற்கு மீன் பிடிக்கும் தொழிலுக்குத் தகுந்த உதவியளித்து அரசாங்கத்தார் உற்சாகம் அளிக்கவேண்டும். மேல்நாடுகளில் கையாளப்படும் நவீன [3]யந்திர சாதனங்களையும் முறைகளையும் நம் நாட்டில் புகுத்தி அதிகமான மீன்களைப் பிடிக்கவேண்டும். பிடித்த மீன்களைக் கடற்கரையோரமாயுள்ள நகரங்களிலிருந்து உள்நாட்டிற்கு அன்றன்று விநியோகிக்கத் தகுந்த வசதிகள் அரசாங்கத்தார் செய்யவேண்டும். பிடித்த மீன்கள் காலதாமதத்தால் அழிவுறாமலிருக்கக் கடற்கரை நகரங்களில் குளிர் ஊட்டிகள் கட்டவேண்டும். அங்கு மீன்கள் சேகரிக்கப்பட்டு, உள்நாட்டிற்கு அம் மீன்களைக் குளிர் ஊட்டிகள் கொண்ட ரயில் வாகன்களில் அனுப்பவேண்டும்.

நம் தேசிய அரசாங்கத்தார் இதற்கு ஆவன செய்து வருகிறார்கள்.

---

3 இச் சாதனத்தின் ஒன்றின் விவரம் கலைக்கதிர் மலர்: 2 இதழ் 10-ல் காண்க.

பட விளக்கம்: கடலின் வாழ்க்கைச் சக்கரத்தை அட்டைப் படம் விளக்குகிறது. வலப்புறமுள்ள வட்டத்தினுள் காணப்படுவவை ஒளிச் சேர்க்கையினால் உயிர்பெறும் தாவரப் பொருள்கள். இடப்புற வட்டத்தினுள் இருப்பவை விலங்கின உயிர்கள். அம்புகள் எந்த உயிர் எவ்வுயிர்க்கு உணவாகின்றது என்பதைக் காட்டுகின்றன. அழுகும் உயிரினப் பொருள்கள் கடலின் அடித்தளத்தை அடைந்து, அங்கு வாழும் உயிரினங்களுக்கு இரையாகின்றன.

● வாழ்வு, சாவு—இவைபற்றி ஷா என்ன கருதினர்? அவர் எப்படி வாழ்ந்தார்?

சிந்தனைக்கு ஓர் இமயம்

பே. குருசாமி

●

'என்றும் தான் சாகாமற் கற்பதே கல்வி' எனவும் 'செத்தே போனற் சிரியாரோ' எனவும் சாகாக் கலையை எண்ணி உருவாக்க முயன்றது தமிழகம். சித்தர் நெறியை எடுத்துச் சொல்ல முயன்றால் 'ஆகாசக் கோட்டை, புளுகு மூட்டை' என்றெல்லாம் எள்ளி நகையாடப் படுவது தற்காலத்தில் இயற்கையாக உள்ளது. 'இவ்வாறு ஒன்று இருந்தது' என்று சொல்ல முனைந்தாலோ, 'எப்படிப் பொருந்தும்' என்ற கேள்வியைத் திறம்படச் சமாளிப்பது அருமையாகிறது. 'வாழ்வை நீட்டிக்க முடியும்' என்று சொன்னால்கூட, சாகாக் கலை பேசிய நாட்டிலே புரியாத சொல்லாக இருக்கிறது. இந் நிலையில், மனிதன் குறைந்தது முந்நூறு ஆண்டுகளாவது வாழலாம், வாழவேண்டும் என்று ஒருவர் சொன்னர்—அவர் சொல்லை எல்லோரும் ஏற்றனர் என்றால், வியப்பாகத்தான் உள்ளது.

தமது தொண்ணூற்று நான்காவது வயதில் காலமான ஜார்ஜ் பெர்னர்ட் ஷா, மனிதனுக்கு உரிய வாழ்வுக் காலம் 300 ஆண்டுகளாவது இருக்கவேண்டும் என்று கனவு கண்டார். கூர்தல் அறம் என்னும் பரிணும நெறிப்படி காரண காரியத் தொடர்பு அருத விளக்கத்தோடு எழுந்ததே அவருடைய கற்பனை வாழ்வு. அந்தக் கற்பனை வாழ்விலே—எப்போதோ வந்தே தீரவேண்டும் என்று அவர் நம்பிய எதிர்காலத்திலே—மனிதன் எப்படி வாழப்போகிறன் என்று அறிய அவருடைய 'திரும்பவும் மெதூசலாவுக்கு', 'ஜெனிவா' என்ற நாடகங்கள் நமக்குத் துணை செய்கின்றன.

ரஷ்ய எழுத்தாளர் ஒருவர் ஷாவைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் எழுதிய அந்தக் கட்டுரை, ஷாவின் முந்நூறுவது பிறந்தநாளைக் கொண்டாடுவதாகக் கற்பனை செய்து எழுதப்பட்டது. ஆனல், அத்தகைய நிலைமை ஒன்றும் ஏற்படுவதற்கு இல்லை. இம்மாதம் இரண்டாம் தேதியன்று ஷா காலமானர். சட்டென்று ஒரு கேள்வி கேட்கத் தோன்றும். முந்நூறு ஆண்டு மனிதனல் வாழ முடியும் என்று கருதிய ஷா நூறு வயதுகூட வாழவில்லையே, ஏன்?

ஷாவின் நாடகங்களிலும் முன்னுரைகளிலும் நம் அறிவை நுணுகிச் செலுத்துவோமாயின் இந்தக் கேள்வி எழாது. இன்றைய மனித வாழ்வின் அடிப்படை இருக்கிற நிலையில், ஷாவின் வயது எல்லை மீறியது என்றுகூடச் சொல்லலாம். ஒவ்வொரு கணமும் சாவுப் பேயினை ஏமாற்றிக் கொண்டே இருக்கவேண்டும் என்ற பாதுகாப்பற்ற நிலைமையில் தான் இன்றைய மனிதன் வாழ்கிறன். வாழ்வில் முகிழ்க்கும் ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு மனிதனுடைய தனி வாழ்வையும் தாக்குகிறது. 'அடுத்தவன் அழிவே தன் வாழ்வின் தொடக்கம்' என்ற

மனதிலே நிலவும் உலகிலே மூந்நூறு ஆண்டுகள் அமைதியாக ஒருவன் வாழ்வதாவது! அது ஒருகாலும் முடியாது.

காலம் திருத்தினால் — மனிதன் மனமும் மாறினால்தான் அது முடியும். எனவே, ஷாவின் வாழ்வைப்பற்றி நாம் கருதும் போது, அவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்று பார்ப்பதை விடுத்து, எப்படி வாழ்ந்தார் என்றே பார்க்க வேண்டும். சிறந்த கர்ம வீரர்கள் எந்த நேரத்தில் சாவு வந்தாலும், அதனை ஏற்கத் தயங்கமாட்டார்கள் என்று அறிஞர்கள் கூறுவதில் நிரம்ப உண்மை உண்டு. 'இங்கும் திருப்பணி, அங்கும் திருப்பணி' என்ற நிறைந்த மனப்பான்மை அத்தகையோருக்கு இருக்கும் என்பார்கள். இங்கிருந்து போனபின் எங்கு என்று அறியுமுடியாத 'அங்கு' என்ன செய்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்கட்டும். ஓய்வு ஒழிவு இல்லாமல், தனக்குரியது என்று ஏற்றுக்கொண்ட பணியை ஒழுங்காகச் செய்துகொண்டிருப்பவனுடைய மனத்திலே அமைதி எப்போதும் இருக்கும். பணியில் குறைவு இருந்தால்தான் வாழ்விலே குறைவு; வாழ்விலே குறை இருந்தால்தான் மனத்திலே குறை. மனத்திலே நிறைவு இல்லை என்றாலோ, மரணத்திலும் நிறைவு கிட்டாது. ஷாவுக்கு வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் நிறைவு இருந்தது; சாவிலும் இயற்கையாகவே அது வந்து பொருந்தியது. குறைவற்ற வாழ்வுடையவனுக்குச் சாவு, இனிமையான தூக்கம் போல ஆரவாரம் இல்லாமல் வந்து சேர்கிறது. உறங்குவதுபோலும் சாக்காடு அல்லவா? ஷாவும் தம்முடைய இறுதி அமைதியை நாடிய போது, 'அருமையாகத் தூங்க விரும்புகிறேன்' என்றே குறித்துச் சென்றார் அல்லவா?

ஷாவின் வாழ்க்கை சிந்தனைத் தெளிவின் ஓலக்கம். அந்த அருமையான வாழ்விலே எழுந்த தெள்ளிய சொற்கள் 'மனிதனை' மனிதனுக்கும் மறை மொழிகள். அவனுடைய வாழ்வை எள்ளி நகையாடினார் ஷா. அவனைக் கேலி செய்வதற்காக அவர் அப்படிச் செய்யவில்லை. வேடிக்கையால் வேதனையைப் போக்கமுடியும் என்று அவர் நம்பினார். டால்ஸ்டாய் ஒருமுறை ஷாவுக்குக் கடிதம் எழுதி, எள்ளலும் நையாண்டியும் வேண்டாம் என்று சொல்லிப் பார்த்தார். பயன் ஒன்றும் ஏற்படவில்லை.

கேலி செய்யும் மும்முரத்திலே சொல்ல வேண்டிய கருத்தைக் கோட்டைவிடும் வழக்கம் ஷாவுக்குக் கடைசி வரையில் இருந்ததில்லை. மனிதனின் இன்றைய வாழ்வு எவ்வளவு மோசமானதாக உள்ளது என்பதை மிகத் திறம்படப் பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஒருநாள் இரவு லண்டன் நகரம் பற்றி எரிவதை 30-மைல் தொலைவிலிருந்து ஷா காண நேர்ந்தது. மூன்று மணி நேரம் எரிந்தும், மறுநாள் செய்தித் தாளில், ஒரு குண்டு ஏதோ ஓர் அலுவலகத்தின் ஜன்னலருகில் விழுந்ததாகவும், அது வெடிக்கு முன்னரே அணைத்துவிட்டதாகவும் செய்தி வெளியாயிற்று. பின்னர், லண்டனுக்குச் சென்றபோது, அந்தப் பழைய நகரத்தில் பாதி பொசுங்கித் தரையோடு தரையாகக் கிடந்ததை ஷா கண்டாராம். தப்பித் தவறி இச்செய்தியில் விவரம் சற்று அதிகமாக இருந்தால், "தென்பகுதியில் சிறிது சேதம், உயிர்ச் சேதம் குறைவு" என்றுதான் இருக்கும். செய்திகளைமட்டும் கேட்பதாக

இருந்தால், குண்டுகளின் மாரியால் இங்கிலாந்தை ஒன்றுமே செய்ய முடியாததாகத் தோன்றும். இங்கிலாந்தின் செய்திமட்டும் இப்படியில்லை. ஜெர்மனியும் இப்படித்தான். எந்த நாட்டுப் போர் நிலவரச் செய்தியும் இப்படித்தான். தனக்கு ஏற்படும் சேதம் பெரிதானாலும் ஒன்றுமே இல்லை யென்றும், தான் பகைவன் நாட்டில் ஏற்படுத்தும் சேதம் குறைவாயிருந்தாலும் 'ஆகா ஓகோ' என்று கயிறு திரிப்பதுமே இன்றைய அரசியலைக் கைப்பற்றியுள்ள போர் வெறியர்களின் போக்காக உள்ளது. அவர்களைக் கேட்டால் 'போரைத் தவிர்க்கவே போர் செய்கிறோம்; அமைதியைக் காக்கவே அணுக்குண்டு செய்கிறோம்' என்று சொல்லுவார்கள். அமைதியின் பேரால் நாகரிகத்தை அழித்துவருவதே இன்றைய வாழ்வின் நிலைமையாக உள்ளது.

இந்த நிலைமையை எப்படி மாற்றுவது? இத்தகைய ஒரு கேள்விக்குச் சரியான விடையைக் காண்பதற்காகப் பாடுபடுவதாகத்தான் ஒவ்வொரு அரசியல் வாதியும் பேசுகிறான். ஆனால், அத்தனை அரசியல் வாதிகளையும் நையாண்டி செய்துகாட்டுவதே ஷாவின் வேலை.

இன்றைய வாழ்க்கையில் மனிதன் படுகின்ற பாட்டினை ஷா சித்தரிப்பதை நாம் பார்க்கும் போது, 'சரி, இனி மனிதனுக்கு வாழ்வு இல்லை; ஒரே முடிவு—அழிவுதான்' என்று எண்ணத் தோன்றுகிறது. "அணுக் குண்டைக் கருவியாக வைத்து இனி ஒரு உலகப்போர் வந்தால், நாகரிகமும் மனிதப் பெருங்கூட்டமும் நசித்துப் போவதைத் தவிர வேறு வழி இல்லை. பூமிக்குள் அது வெடிக்குமாயின், உலகம் சிதைந்து பிரிந்து பிரிந்து, கடைசியில் செவ்வாய்க் கிரகத்தி லுள்ள வானநூலாரின் ஆராய்ச்சிக்கு உரிய வெறும் ஆவிப் படலமாகத்தான் மாறிவிடும்" — இவ்வாறு சிந்தனைச் செல்வராகிய ஷா கூறுகிறார். ஆனால், நமக்கும் அவருக்கும் ஒரு வேற்றுமை. இந்த அழி கோலங்களை யெல்லாம் பார்க்கும்போது எதிர்காலம் என்று ஒன்று இருக்காது என்றும் அப்படி ஒன்று இருந்தால் குறுகிய அதன் எல்லையிலே அச்சமும் பேடிமையுமே ஆதிக்கம் செலுத்தும் என்றும் நாம் நினைக்கிறோம். ஷாவுக்கு எதிர்காலத்து நல்வாழ்விலே உறுதியான நம்பிக்கை உண்டு. அணுக்குண்டுக்கு அடுத்தபடியாக 'மனிதன் கண்டுபிடிக்கும் ஒரு பொருள் நாகரிகப் பண்பை நிலைநாட்டிப் போர் என்பதையே துடைத்து எறிந்துவிடக்கூடும் என்று ஏன் சொல்ல முடியாது? அப்படியும் நடக்கலாம். நடக்க முடியாது என்று யாராலும் சொல்ல இயலாது' என்று ஷா கூறுகிறார். தம்முடைய சமயக் கொள்கையாக அவர் போற்றியது ஆக்க வழிப் பட்ட பரிணமம் (creative evolution) ஆகும். அதனை உயிராற்றல் (Life force) என்றும் கூறுவார். அந்தக் கொள்கையிலே அவருக்கு இருந்த உறுதிப்பாடுதான் எதிர்கால வாழ்விலே நம்பிக்கை ஊட்டியது இந்த நம்பிக்கை இருந்ததனால்தான் தளர்ந்து முதிர்ந்த வயதிலும் அவர் ஊக்கத்தோடு உழைத்து வந்தார். இடையறு உழைப்பினைக் கொண்டு மனித இனத்தின் மாண்புக்கு என்னென்ன சொல்லக் கூடுமோ அவ்வளவையும் சொல்லித் தீர்த்துவிட வேண்டு மென்றுதான் எழுதும் தொழிலை அவர் இறுதி வரையிலே கைவிடவில்லை.

இயற்கை நிகழ்ச்சி என்று நாமெல்லாம் சாதாரணமாகக்

கருதும் சாவைப் பற்றிக்கூட ஷா வேறு மாதிரிதான் கருதினர். "இயற்கையான சாவு என்று ஒன்று உண்டு என எவரும் நிலைநாட்டியது இல்லை. சரியாகச் சொன்னல் வாழ்க்கைதான் இயற்கையானது; முடிவற்றது" என்று அவர் கூறினர். 'மனிதன் அஜாக்கிரதையினல்தான் சாகிருன்' என்பதும் அவர் கருத்துத்தான்.

இத்தகைய கருத்துக்களால் அமர வாழ்வை விளக்க அரும்பாடு பட்டவர் ஷா. வெறும் புராணக் கதைகளால் இவற்றை நமக்கு அவர் விளக்கவில்லை. மனிதன் அமரனுவது அவனுடைய சொந்தப் படைப் பாகிய அரசியலால்தான் முடியும் என்று உணர்ந்தார். எனவே, நாடகங்களில் அரசியல் விளக்கம் தந்து மனிதனுடைய நிலையைத் தெளிவாக்க முயன்ருர்.

அரசியலோடு பின்னிப் பிணைந்தது பொருளாதாரம். எனவே, பொருளாதாரத் துறையிலும் ஷா தம்முடைய கருத்தைச் செலுத்த வேண்டியவரானர். பொருளாதாரமே யாவற்றுக்கும் ஆதாரமான அடிப்படை; ஷா கண்ணுல் பார்த்த பொருளாதாரத்துக்கோ முடக்கு வாதம் கண்டிருந்தது. பொருளாதாரம் சீர்ப்பட்டால் அல்லவா அரசியல் திருந்துவது! இவ்வகையில் அவருடைய கருத்துக்களை ஆராய்வதற்கு அவருடைய நூல்களுள் அறிவுடைய பெண்ணுக்கு...... (Intelligent Woman's Guide to Socialism etc) என்பதும் அரசியல் தெளிவு (Political What's What) என்பதும் துணைபுரியும். 'எல்லோருக்கும் சமநிலையான வருவாய் இருக்கவேண்டுமென்பது நடைமுறையில் கொள்ளத்தகாதது அன்று' என்ற வாக்கியம் ஓரளவு அவருடைய பொருளாதாரக் கருத்தை விளக்க வல்லது.

செஸ்டர்டன் என்ற ஆங்கில எழுத்தாளர் ஒரு முறை ஷாவைப் பற்றி எழுதும்போது பின்வரும் கருத்துப்பட எழுதினர்: "அவர் மற்றவர்களைக் கேலி செய்யவில்லை; ஆழ்ந்த மறைமுகமான கருத்தை வைத்து ஷா நையாண்டி செய்கிருர் என்று கருதுவது தவருகும். ஒவ்வொருவருடைய முகத்துக்கு எதிரேயே அவ்வவரை நேரடியாக அவமானப்படுத்துவதே அவர் வேலை. பணக்காரனைப் பார்த்துக் கொள்ளைக்காரன் என்று அவர் சொன்னல், அந்தச் செல்வன், 'இதோ இந்த ஷா, எவ்வளவு வேடிக்கையாகப் பேசுகிருர் பார்த்தாயா' என்று சிரிக்கிருன்"—இந்தக் கருத்து ஷாவைப்பற்றிய தெளிவான உண்மையா என்பது ஒரு புறம் இருக்கட்டும். பழிக்கப்படுபவனே தன் குற்றத்தை மனமகிழ்ந்து கேட்கவேண்டுமென்ருல், அது எளிதிலே முடிகிற காரியமா? அந்த அரிய காரியத்தைப் பெர்ஞர்ட் ஷாவால் சாதிக்க முடிந்தது.

அவர் கடைசி நேரத்தைக் கழித்த அறையிலே, ஸ்டாலின் படமும் புத்தர் சிலையும் இருந்தனவாம். இந்த முரண்பட்ட இரண்டு உருவங்களை அங்கே ஏன் அமைத்தார்? யாராலும் திட்டமாக விளக்க முடியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கம் சொல்லக்கூடிய காரியம் இது. இப்படி எத்தனையோ நிகழ்ச்சிப் புதிர்கள் அவர் வாழ்க்கையில் உண்டு. புதிர்களுக்கெல்லாம் மீறிய நிலையிலே உள்ள அவருடைய கருத்துக்கள் நமக்குப் போதும். கருத்தளவில் நின்று நாம் அவரை நோக்கினல், வாழ்வின் மர்மங்களைப் பற்றிக் கவலைப்பட நேராது.

ஷாவின் மறைவு உலகுக்கு நஷ்டமா? தெரியாது. ஆனல், அவருடைய தோற்றம் உலகத்துக்கு மிகப் பெரிய லாபம்.

தந்தி : "ஆண்டவர்"

பழனி ஆண்டவர் மில்ஸ்

லிமிடெட்,

உடுமலைப்பேட்டை.

★

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரிடரீஸ்

பாக்யலக்ஷ்மி & கோ.,

★

20-நெ. முதல் 60-நெ. வரை
ஒற்றை முறுக்கு நூல்கள்
தயாரிக்கிறோம்.

இந்திய மூலதனம்
இந்திய உழைப்பு
இந்திய நிர்வாகம்

உ11717

★

சிங்கிள் கதிர்கள் 22000 *டப்ளிங் கதிர்கள் 624*

பாக்கெட் பிரஸ்.

பெயர், விலாசம், கடிதம், லேபிள், நிகழ்ச்சிக் குறிப்பு முதலியவைகளை வீட்டிலேயே அச்சடிக்கலாம். நெ. 1 ரூ. 2; நெ. 2 ரூ. 2-12-0; ஸ்பெஷல் ரூ. 3-4-0; சிறந்தது ரூ. 4. தபால் செலவு அணா 14.

உயர்ரக கைக்கெடியாரங்கள்.

ஸ்விஸ் தயாரிப்பு 7 ஹூ உத்திரவாதம் 5 ஜுவல் குரோமியம் கேஸ் வட்ட ஷேப் ரூ. 14-8-0, சிறந்தது ரூ. 15, நீண்ட சதுர குரோமியம் கேஸ் 7 ஜுவல் ரூ. 24, ரோல்டு கோல்டு 15 ஹூ உத்திரவாதம் 9 ஜுவல் ரூ. 27, சிறந்தது ரு. 29, ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ. 28, செண்டர் செகண்ட் ரூ. 18, பாக்கெட் வாட்ச் ரூ. 13, அலாரம் டைம்பீஸ் ரூ. 16, சிறந்தது ரூ. 18. தபால் செலவு அணா 14.

சிகார் லைட்டர் ரூ. 3.

புகை பிடிப்பவர்களுக்கு இன்றியமையாதது. நிக்கல் கேஸ். பார்ப்பதற்கு மிகவும் அழகானது. நாட்பட உழைக்கும். இது ஒன்று இருந்தால், தீக்குச்சிகளே தேவையில்லை. விலைகள் நெ. 7 ரூ. 3, நெ. 9 ரூ. 3-12-0, ஸ்பெஷல் ரூ. 5, மிக உயர்ந்தது ரூ. 7. கல் 1 டஜன் ரூ. 1. ஆயில் ரூ. 1-8-0. பாக்கிங் & போஸ்டேஜ் அணா 14.

FRENCH COMMERCIAL STORES (O. S.)

Post Box No. 12216, CALCUTTA—5.

உண்மையான

ஆயுர்வேத மருந்துகளும்

சாஸ்திர முறைப்படி

ஆயுர்வேத சிகிச்சைகளும்

தேவையா?

இவைகளை

ஆர்ய வைத்திய பார்மசி

(கோவை) லிமிடெட்டில்

பெறலாம்.

தலைமை ஆபீஸ்:	*கிளை ஆபீஸ்:*
கோயமுத்தூர்	இராயப்பேட்டை
(டெலிபோன் நெ. 108)	(டெலிபோன் நெ. 84110)

பி. கு.

கோயமுத்தூர் டிஸ்டிரிக்டைச் சேர்ந்த சிங்காநல்லூரில் 40 ஏக்கரா நிலம் கவர்மெண்ட் மூலம் வாங்கியிருக்கிறோம். இங்குச் சீக்கிரத்தில் 'நர்சிங் ஹோம்' ஒன்று ஆரம்பிக்கப் போகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தந்தி: "சுப்ரமணியா" டெலிபோன் { ஆபீஸ் 176 / பங்களா 146

ஸ்ரீ பாலசுப்பிரமணிய மில்ஸ் லிமிடெட்,

சிங்காநல்லூர், கோயமுத்தூர்.

(ஸ்தாபிதம் 1934)

- பிரக்யாதி பெற்ற மில்களில் உத்தமமானது இதுவும் ஒன்று
- இந்த மில்லில் குணம் நிறைந்த சரக்கை உற்பத்தி செய்வதே நிர்வாகஸ்தர்களது நோக்கம் - -
- இந்த மில்லில் கைத்தறிகளுக்கும் பவர் தறிகளுக்கும் உகந்த 36-நெ. முதல் 80-நெ. வரை ஒற்றை முறுக்கு நூல் தயாரிக்கப்பட்டு வருகின்றன - -

12,512 கதிர்கள் தொழில் செய்கின்றன.

தேசீய மூலதனம்
தேசீய தொழிலாளர்
தேசீய மேனேஜ்மெண்டு

ஆக எல்லாம் இந்திய மயமாக நடைபெற்று வருகின்ற

தேசீய தொழில் ஸ்தாபனமாகும்.

ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரையிலும் பங்குதாரர்கட்கு நல்ல டிவிடெண்டு தரப்பட்டு வந்துள்ளது.

Sri Balasubramania Mills Limited,

Singanallur, Coimbatore.

Managing Agents & Secretaries:

K. Krishnaswamy Naidu & Brother.

சேவையே எமது லக்ஷியம்

பயனீர் பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: ஜெயில் ரோடு, கோயமுத்தூர்

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து முதலிய எல்லா விதமான இன்ஷ்யூரன்ஸ்களும் ஏற்று வருகிறோம்.

செல்வாக்கும், திறமையும் வாய்ந்த ஏஜெண்டுகளும் ஆர்கனைசர்களும் தாராளமான நிபந்தனைகளின் பேரில் தேவை.

விபரங்களுக்கு:— **தலைமை ஆபீசுக்கு எழுதுக.**

Phone: 209 Gram: "NAIDUBROS"

L. P. KRISHNASWAMY NAIDU & BROS.,

MERCHANTS & CONTRACTORS.

FRASER SQUARE, COIMBATORE.

Agents for:

Messrs. HARRISONS & CROSFIELD, LTD., COCHIN & QUILON. for

FABRICATED STEEL WORKS
Such as TRUSSES, PURLINS etc., etc.

ASBESTOS CEMENT LTD'S
Roofing Materials & Rain water Goods, etc.

S. V. O. C.
Industrial Lubricants, Petrol, Mobiloils, Crude oil, High Speed Diesel Oil, Power Kerosene etc.

GOODLASS WALL LTD'S
Paints, Enamels, Varnishes Distempers Etc.

Dealers in:

ELECTROLUX Refrigerators, Motor Tyres, Tubes, A. D. V. & Trolley Equipments Etc.

Agents for Messrs:

GREAVES COTTON & CO., LTD., for Textiles, Mill Stores and Machinery Parts.

Edited & Published by G. R. Damodaran, B. Sc., Elec., B. Sc., Mech. (Durham) A.M.I.E.E. (London) and Printed at the P. S. G. Industrial Institute Press, Peelamedu, P. O., Coimbatore.

டலிபோன் நெ. 17 தந்தி: "ரங்கவிலாஸ்"

ஸ்ரீ ரங்கவிலாஸ் ஜின்னிங், ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1922-ல்)

ரிஜிஸ்டர் ஆபீஸ்: பீளமேடு, கோயமுத்தூர்.

லதனம், ரூ. 16,00,000 வெளியிடப்பட்டு வசூலானது ரூ. 15,02,500.



வேலை செய்யும் மொத்த கதிர்கள் 30,000

2-ம் நெ. முதல் 100 நெ. வரை ஜவுளி நூல் தினுசுகள், பனியன் வகையராக்களுக்கு உபயோகப்படும் கோன் நூல் தினுசுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இன்னும் அதிக யந்திரங்களை வைப்பதற்கு கட்டிடங்கள் தயாராயிருக்கின்றன.

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு பாங்கர்ஸ்:

பி. எஸ். கோவிந்தசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

பீளமேடு — கோயமுத்தூர்.

இந்திய மூலதனம், இந்தியக் கைத்தொழிலாகிய

இந்த சுதேசித் தொழிலை ஆதரியுங்கள்

Telegrams: PIONEER. Telephone: 160

THE COIMBATORE PIONEER MILLS, LIMITED,

PE[illegible]LAMEDU, COIMBATORE, SOUTH INDIA.

SPINDLES — 19280. SPINNERS OF HIGH QUALITY YARN — 40s TO 100s.

Managing Director: G. R. GOVINDARAJULU NAIDU.

நாகரிகத்தின் அளவுகோல் கலை

கலையைத் தருவது ---- நூல்